
Regd. No. M. 4392



Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
116-119, Sladens Garden, Poonamallee High Road, Kilpauk, Madras.



கேசரி குடீரம் லிமிடெட், மதராஸ்

தமிழ்நாடு ஏஜெண்டுகள்:

சீதாராமா ஜெனரல் ஸ்டோர்ஸ்

மேலக் கோபுர வீதி :: மதுரை.

கலியாண காலத்திற் கென்று

புதுமாதிரி புடவைகளும், இதர ஜவுளி தினுசு
களும் ஏராளமாக தருவிக்கப்பட்டிருக்கின்றன!

ஒவ்வொன்றுக்கும், கெட்டிச் சாயத்திற்கும், நீண்ட
உழைப்பிற்கும் தக்க தடையில்லா உத்திரவாதம் உண்டு!

புடவைகள்:—எமது சொந்தத் தறியில் கொள்ளேகால் முறுக்குப் பட்டில் தயார் செய்யப்பட்ட நேர்த்தியான பார்டர்கள் புது மாதிரி ரம்யமான முந்தானைகளுடன் கூடிய 6, 7, 8, 9 கெஜம் சேலைகள், பாவாடைகள் முதலியன.

பெங்களூர் பட்டுச் சேலைகள்:—ஏராளமான நூதன ரகங்கள், சேலைகள் பாவாடைகள், ரவிக்கைகள் இன்னும் அநேக ஜெக்கட் சில்க் வகையராக்கள்

சரமான விலையில் சகலரும் வாங்கி உடுத்தக்கூடிய நூல் சேலைகள், பாவாடைகள் வேஷ்டிகள், துப்பட்டாக்கள், தர்மாவரம் ஜாகார்டு வகைகள் குவிந்துள்ளன!

நேரில் வந்து பாருங்கள்!

மதுரை ஆபீஸ்:		மதராஸ் ஆபீஸ்:
230. கீழ்மாசி வீதி, மதுரை.	**SRB**	83. தம்பியப்ப நாயக்கன் தெரு, மதராஸ்.
போன்: 36 Tel: "YESARBIKAY"		Tel: "RENOWN" போன்: 3506

S. R. B. சுப்புசாமி அய்யர் & சன்


(FORMERLY S. R. பாலுசாமி அய்யர் & சன்ஸ்)

பிரபல மதுரை, பனாரஸ் ஜவுளி வியாபாரிகள்.

கல்கி



KALKI செப்டம்பர் 10, 1944 4 அணா



உங்கள் மனதிற்குகந்தது

டிலக்ஸ் டெனர் சிகரெட்டின் நறு மணத்தை நீங்கள் மிகவும் விரும்புவீர்கள். உத்தரவாதமுள்ள 100% பொருக்கின வர்ஜீனியா புகையிலை தான் டெனர் செய்ய உபயோகிக்கப் படுகிறது. இதுவே எல்லோரும் விரும்பி ரஸிப்பதற்கும், தொண்டைக்கு கெடுதல் செய்யா திருப்பதற்கும் காரணம். மனோ ரம்மியமான இந்த சிகரெட்டை இன்றே வாங்கி நீங்கள் உபயோகியுங்கள்

டி லக்ஸ் டெனர் சிகரெட்டு

ஜேம்ஸ் கார்ல்டன் லிட், லண்டன்

tenor is truly a de Luxe Cigarette

JAMES CARLTON LTD, LONDON. EASTERN LICENCEES, POST BOX No. 470, CALCUTTA

★

ஜுபிடர் பிக்சர்ஸ் ஸ்ரீ M. சோம சுந்தரமும் அவரது மனைவியும், திருப்பூர் பருத்தி வியாபாரிகள் மெஸர்ஸ். K. A. S. & கம்பெனி ஸ்ரீ K. A. பழனிசாமி செட்டியாரும் அவரது மனைவியும் 31-8-1944ல் திருப்பூரில் செள. பால சௌந்தரிக்கும் சிரஞ்சீவி **A. K.** பாலுவுக்கும் விவாகம் நடந்தேறியபோது வாழ்த்துச் செய்திகளும், பரிசுகளும் அனுப்பிய சகல நண்பர்களுக்கும் சுற்றத்தார்களுக்கும் தங்களது மனமார்ந்த வாழ்த்துக்களையும் நன்றியையும் அறிவித்துக் கொள்கிறார்கள்.

★

★



★

“ ‘உங்களைத்தானே! ஓடி, ஓடி இப்பொழுது ஒன்றும் நம் கமலாவுக்கு மாப்பிள்ளை தேடவேண்டாம். எல்லாம் வர வருஷம் பார்த்துக் கொண்டால் போச்சு. கல்யாணம் என்றால் குறைந்தது ஐந்நூறு அப்பளமாவது வேண்டாமா? ஜானவாஸம், முகூர்த்தம் இந்த இரண்டு நாளைக்காவது வடை தட்ட வேண்டாமா? அத்தனை பருப்புக்கு எங்கே போவது? நாலோ, அஞ்சோ கொடுத்தாலும் பருப்புக் கிடைத்தால் தேவலை. இல்லாவிட்டால் கல்யாணமே வேண்டாம் இந்த வருஷம்!’ — இந்த மாதிரி ஒரு வீட்டு அம்மா திட்டம் போடுகிறாள்.



சர்க்கஸ்காரன் :—அடே பையா, சிங்கம் இருக்கும் கூண்டின் பக்கம் போகாதே!

பையன் :—உன் சிங்கத்தை நான் ஒன்றும் செய்துவிட மாட்டேன், பயப்படாதே!

“இட்டிலி வீரர்கள் நம்முடைய தமிழர்கள்” என்று கொஞ்சம் பெருமையாகவே ஒரு தமிழ்க் கவிகூடப் பாடியிருக்கிறார். அந்த இட்டிலிக்குக் கூட அன்றோ பஞ்சம் வந்து விட்டது நம் தமிழ் நாட்டிலே!

‘இந்த வியாபாரத்திலே பல பேரை இழுத்து விட்டேனே தவிர, கொஞ்சமும் நிம்மதி இல்லையே! என்னவோ அடிச்சுக் கொண்டே இருக்கிறது மனசு! அன்று பாரேன்: ஒரு கிழவனார்—ஏழை, பாவம்! தன் ஒரே பிள்ளை டைபாயிடில் கிடக்கிறானாம். ராயப்பேட்டை முதல், பாரிஸ் கார்னர்வரை கடை கடையாகத் திரிகிறார். பஸ்ஸிலேயும் டிராமிலேயும், ஒரு ஹார்லிக்ஸ் புட்டிக்காக! ஒரு மருந்துக் கடையிலும் இல்லை என்று நினைக்கிறாய்? டஜன் கணக்கில் இல்லாவிட்டால், நாலு, அஞ்சு என்று அங்கங்கே இருக்கத்தான் செய்கிறது! நான் உத்தரவு போட்டால் தானே கொடுப்பார்கள்? இரக்கப்பட்டால் பணம் வருமா? அஞ்சிலிருந்து ரூபாய் பத்து வரை ஏறின பிறகு புட்டியும் வெளியேறியது, என் அடிமை ஒருவனிடமிருந்து!

“அப்படித்தான் ஒரு குழந்தைக்கு ஒரு விதக் கஞ்சி மாவுக்காக ஊரெல்லாம் சல்லடை போட்டுப் பார்த்தார்கள் மூன்று நாளாக. இரண்டு நாளைக்கு முன் கடையில் நிறையப் பார்த்த சரக்குத் தான். சர்க்கார் ‘கண்ட்ரோல் போடுவோம்’ என்றார்கள். அவ்வளவுதான்: சரக்கு எல்லாம் பாதாளத்துக்குப் போய் விட்டது. 1½ ரூபாய்ச் சரக்குக்குப் பத்து ரூபாய் கொடுப்பதாகக் கூடச் சொன்னார்கள். பாவம், அந்தச் சரக்கை நான் பாதாளத்திலிருந்து பூலோகத்துக்குக் கொண்டு வருவதற்கு முன் அந்தக் குழந்தை பரலோகத்திற்கே போய் விட்டது! அதைக் கேட்டதும் என் நெஞ்சுகூடக் கசந்து போச்சு! நான் ஏன் இருக்க வேணும்? இறந்து விடலாமா! — என்று கூடத் தோன்றியது. என்ன இருந்தாலும் இவ்வளவு கல்நெஞ்சம் ஆகுமா?” என்று சொல்லி அளவில்லா பெருமூச்சு விட்டது கள்ளக் கடை ஆத்மா.

அந்த ஆத்மா மீது கூட எனக்கு அப்போது இரக்கம் உண்டாயிற்று. பிறகு நான், “உனக்கேன் இந்த விசாரம்? உன் அடிமைகளுக்கு என்னவோ கொள்ளை கொள்ளையாய்ச் சம்பாதித்துக் கொடுத்தாய் நீ! எத்தனை லட்சம், எத்தனை மாடி வீடுகள்! என்னைப் போல் உன்னிடம் சாமான் வாங்கி உண்பவர்களுடைய மச்சு வீடுதான் குச்சு வீடாகிறது! இந்த யுத்தம் போகிற போக்கிலே எது தான் நிலைக்கும்? குச்ச உயரக் கோபுரம் தாழ — எல்லாம் கறுப்புக் கடையே! உன் லீலை” என்று வேதாந்தம் அளந்து விட்டு, ரூபா இரண்டு வீதம் பத்துப் படி பருப்புக்கு இருபது ரூபாய் நோட்டை வீசிவிட்டு வீடு திரும்பினேன்.

“அப்பா, நீ மகாராஜனாய் வாழ்க!” என்று அந்தத் தெருவிலுள்ள பெண்டுகள் எல்லாம் வாழ்த்தினார்கள் என்னை. அந்த வாழ்த்தையெல்லாம் கள்ள மார்க்கெட் ஆவிக்கே சமர்ப்பிக்கிறேன்.

★

ஆனால் அந்த ஆவியோ, “நான் இருப்பதா, இறப்பதா? பத்திரிகைகள் ஸ்ரீமான் பொதுஜனத்தைத் தூண்டிவிட்டு, ஸ்ரீலஸ்ரீ அதிகார வர்க்கத்தையும் எழுப்பிவிடுகிறதே” என்று மறுபடியும் பெருமூச்சு விடுகிறது, என் மனக் கண்ணுக்கு எதிரே.

ரயில் டிக்கட் வாங்குவதிலுள்ள கஷ்டங்கள்



அது ஒரு காலம்; நீங்கள் புக்கிங் ஆபீசுக்குள் நுழைந்து ஜன்னல் திறந்தவுடன சில நிமிஷங்களில் டிக்கட் சுலபமாகப் பெறக்கூடிய காலம் இருந்தது. கலாட்டாவில்லை. கஷ்டமில்லை. தொந்திரவில்லை. அந்தக்காலம் மலையேறிவிட்டது. இப்பொழுது நீங்களும் கும்பலோடு கும்பலாகச் செல்லவேண்டும்; ஒரு டிக்கட் வாங்க 15, 20 நிமிஷங்கள் கூட ஆகலாம். இதற்கிடையில் ஒரு கூலியை அமர்த்தி காவல் வைக்காவிடில் உங்கள் சாமான்களை திருடர் கொண்டுபோய்விடலாம். ஆனால் கூலிகள் கிடைப்பதுதான் குதிரை கொம்பாகிவிட்டதே இன்று! இத் தொந்திரவு மட்டுமா? டிக்கட் கிடைத்தாலும் இடம் கிடைக்க வேண்டுமே! வழியில் சாப்பாடு கிடைக்க வேண்டுமே! அதற்குள் எவ்வளவு தொல்லைகள். விஷயம் தெரிந்தவர்கள் இந்தத்தொல்லையே வேண்டாமென்று இருந்து விடுவார்கள். முக்கியமாக ஸ்திரீகளுக்கு இன்றைய ரயில் பிரயாணம் மிகவும் கஷ்டமானது. புத்திசாலியான எவரும் அவசியமிருந்தாலொழிய இன்று பிரயாணம் செய்யமாட்டார்கள். நீங்களும் உங்கள் குடும்பத்தாரும் புத்திசாலிகளாக இருங்கள். வீட்டைவிட்டு வெளியூருக்கு கிளம்பாதீர்கள். பணத்தையும் மிச்சப் படுத்தலாம். தொந்திரவும் தொல்லைகளும் இல்லை

பிரயாணத்தைக் குறையுங்கள்



போகலாமா ?" என்று தோன்றிற்று. இது என்ன ? பைத்தியமா, பேய் பிசாசா ?

"ஹா, ஹா, ஹா! உன்னைப் போல் பர்ஸ் நிறையப் பணம் வைத்துக் கொண்டு திரியும் ஆசாமிகள் இருக்கும்போது நான் ஏன் இறக்க வேணும் ?" என்றான் மறுபடியும் ஒரு கன்னச் சிரிப்புச் சிரித்துவிட்டு. எனக்குக் கிலி பிடித்தது. "அக்கம் பக்கத்தில் யாராவது இருக்கிறார்களா ?" என்று திரும்பிப் பார்த்தேன்.

"ஏனப்பா ! வீணாக என்னைக் கண்டு பயப்படுகிறாய் ?. நானாக என்னைத் தேடி வந்து வந்தாயே நீ ?" என்று ஒரு விகாரக் குரலில் கேட்டது அந்த விசித்திரப் பிரகிருதி.

"உன்னையா தேடி வந்தேன் ? கள்ள மார்க்கெட்டை அல்லவா தேடி வந்தேன் ?" என்றேன் சற்றுத் தைரியமுற்று.

"கள்ள மார்க்கெட்டா ? கண்களுக்கு அவ்வளவு எளிதில் தென்படுமா ? திரை மறைவிலே பூட்டிட்ட கனத்த கதவுகளுக்குப் பின்புறம் அன்றோ இருக்கிறது? அது எப்போது திறக்கும் என்கிறாயோ ? கிலப்புத் தலைப்பாக்காரனைக் கூட்டிக் கொண்டு வரமாட்டாயே ? சரி, விடு! உன்னிடம்தான் இருக்கிறதே திறவுகோல். கத்தை கத்தையாக அந்த வெள்ளித் திறவு கோல்; இல்லை, காகிதத் திறவுகோல்! போகலாம் ; பேரம் நடக்கட்டும் " என்றது அந்த அதிசயத் திருமேனி.

"நீ யாரப்பா ? நீதான் கடை முதலாளியோ ?" என்றேன் நான்.

"நானா ? நான் முதலாளிக்கும் முதலாளி ! அந்தக் கள்ள மார்க்கெட்டின் ஆவி ! பயந்து போய் விடாதே ! எனக்குப் பேராசைப் பேய் என்றும் ஒரு கௌரவப் பட்டம் அளித்திருக்கிறார்கள். எத்தனையோ முதலாளிகள் எனக்கு அடிமைகள் என்று சொல்லிக் கொள்ளுகிறார்கள். யுத்தத்திலே உதித்த உத்தமன் நான். என் கதையை நீ கேட்க வேண்டாமா ?" என்று துவக்கிப் பின் வருமாறு பேசலாயிற்று.

"கள்ளக் கடையாகிய என்னை இந்தி வீதியில் 'கறுப்புக் கடை' என்றும் சொல்லுகிறார்களல்லவா ? ஆனால் நான் வளர்ந்தது வெள்ளையர்கள் மத்தியிலே தான் ! சென்ற மகா யுத்தத்திலே பிறந்த செல்லக் குழந்தை நான் என்பதுதான் உலகப் பிரசித்தியாச்சே. இந்த மகா யுத்தத்திலே ஐரோப்பாவில் முன் போல என்னை வைட்டி வளர்ப்பாரில்லை. இந்தியாவிலாவது வளர முடியாதா என்று வந்தேன். வந்த ஒரு மாசத்துக்குள் வளர்ந்து விட்டேனே திரிவிக்கிரமாவதாரம் போலே ! எத்தனை பக்தர்கள், எத்தனை அடிமைகள் எனக்கு ? எத்தனை மாடி வீடுகள் கட்டி விட்டேன் !

"இந்த உளுத்தம் பருப்புச் சங்கதியைத் தான் பாரேன். என்ன படாதபாடு படுகிறது சம் ஊர் ? அந்தப் பாட்டிமார்களும் வீட்டுப் பெண்டுகளும் எனக்குச் செய்யும் கைங்கரியம் கொஞ்சமா ? 'இந்தாருங்கோ, இதெது என்று சாறு பேரைச் சாப்பாட்டிற்குக் கூட்டிக் கொண்டு வரப் போகிறீர்கள். இனிமேல் எங்களால் முன்போலச் சமாளிக்க முடியாது. தாளிக்க உளுத்தம் பருப்பு இல்லையே! ஒரு பொரிச்சக் குழம்புகூட மணமாக வைக்க முடியாது என்றால் என்ன விருந்து வேண்டியிருக்கு ?' என்கிறார்கள் ஒரு வீட்டிலே.



கள்ள மார்க்கட்

ஸ்ரீமதி எஸ். அம்புஜம்மாள்

சென்ற மாதம் உளுத்தம் பஞ்சம் உச்ச நிலையிலிருந்த ஒரு நாள் நான் வெளியே புறப்படுகையில், பக்கத்து வீட்டிலிருந்து ஒரு குரல் என்னைக் கூவி யழைத்து, "பஜாருக்குத்தானே? ஒரு உபகாரம் பண்ணேன்; எங்கே யிருந்தாவது ஒரு அரைப்படி உளுத்தம் பருப்பு வாங்கித் தாயேன், நன்றா யிருப்பாய்!" என்றது.

"எந்தக் கடையிலும் உளுத்தம் பருப்பு இல்லையே, பாட்டி!"

"அதுதான், கள்ள மார்க்கெட் என்கிறார்களே, அங்கே யிருந்து வாங்கிக்கொண்டு வா; என்ன விலையானாலும் சரி!"

அந்த வீதி தாண்டுவதற்குள் எத்தனை பேர் உளுத்தம் பருப்புக்கு மனுப் போட்டார்கள் என் மூலமாக. கத்தை கத்தையாக ரூபாய் நோட்டுக்கள், பை கொள்ள வில்லை.

"படி 1½ ரூபாய்க்கு எங்கேயோ போவதாகக் கேள்வி."

"பாதகம் இல்லை."

"படி இரண்டு ரூபாய் இருக்குமே."

"போனால் போகிறது."

"என்ன போங்கள், படி 2½ ரூபாய் என்று ராமகிருஷ்ணன் வீட்டுக் கல்யாணத்துக்கு வாங்கினார்களாமே."

"என்ன செய்வது? படி மூன்று ரூபாயானாலும் வாங்கத்தான் வேண்டும்!"

வேறு சாக்குச் சொல்ல முடியாமல் ஒரு சாக்கை எடுத்துக் கொண்டேன்; கள்ள மார்க்கட் எங்கே இருக்கிறது என்று தேடப் புறப்பட்டேன்.

மாலைப் பொழுதெல்லாம் கொத்தவால் பஜார் முழுக்கச் சுற்றினேன். ஒரு கள்ளக் கடையைக் கூடக் காணவில்லை. அவ்வளவு யோக்கியதை வந்து விட்டதா?

இருட்டிவிட்டது, அங்கே சுமைதாங்கிக்கு அருகே ஒரு ஆசாமி பதுங்கிக் கொண்டிருந்தான், இருட்டையும் இருட்டடிப்பது போலே! கொழு கொழு வென்று உருண்டு திரண்டு வாட்ட சாட்டமாகத் தொந்தியும் தொப்பையுமா யிருந்தான். மூஞ்சியிலே ஆளுக்கு லட்சணம் வேணுமே? அடுப்புக் கரியை அரைத்துப் பூசினது போல் ஒரே அந்தகாரம். கண்கள் மட்டும் ஜொலித்தன, ஜில் ஜில் லென்று கொள்ளித் தணல்போலே. அந்தப் பேர்வழி வாய்க்குள் முணு முணுத்த வாறு இருந்தான்—ஏதோ பெருங் கணக்குப் போலும். லட்சக் கணக்கில் தொகை ஒடிந்தது. இடை யிடையே பெருமூச்சு விட்டான்.

தன் நெஞ்சைத் தடவிக் கொண்டே, "நான் இருப்பதா இறப்பதா? நீதான் சொல்லேன், கொஞ்சம்" என்று ஒரு விகாரச் சிரிப்புடன் தன்னைத் தானே கேட்டுக் கொண்டான். எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. "அந்த இடத்தை விட்டு ஓடிப்

"ஹாக்கோ இச்சியு" என்
கிருர்கள் ஜப்பானியர்கள்.
ஒரு குடைக்கீழ் எட்டு மூலை
என்று இதற்கு அர்த்தம்.
அதாவது உலகின் எட்டு
திக்குகளும் ஜப்பானின்
குடைக்கீழ் என்பதுதான்
அதன் உட்பொருள். அந்தக்
குடைக்கீழ் இந்தியாபுகாது.

வெற்றி வழியே விடுதலை

1021 T M

[உண்டு இடுக்கண் ஒன்றுடையான்: அதோ நிற்கிற பரதன் ஏதோ கஷ்டத்துக்கல்லவா உள்ளாகியிருக்கிறான்? குறிப்பெல்லாம் கண்டு உணர்ந்து பெயர்கின்றேன்: அவனுடைய நோக்கம் என்னவோ அதை நன்றாய்த் தெரிந்துகொண்டு திரும்புகிறேன்; காமின்கள் நெறி என்று: எதற்கும் கரை ஏறும் துறைகளை யெல்லாம் ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளுங்கள் என்று வேடர்களை நோக்கிச் சொல்லிவிட்டு: தன் துறை ஓர் நாவாயில்: மரத்து நிழலில் கிடந்த ஒரு தோணியில்: ஒரு தனியே தான் வந்தான்: தன்னந் தனியாகத் தானே வந்தான்.]

இப்போது நாம் பரதன் பக்கம் போய் நிற்கிறோம். குகன் தோணியில் வருகிறான். பரதன் அவனைத் தொழுகிறான். அப்படித் தொழுத பரதனைப் பார்த்து வணங்குகிறான்—படகில் வந்த குகன்.

குகன் படகிலிருந்து இறங்கிக் கரையேறிய மாத்திரத்தில் அவன் அடியில் விழுந்தான் பரதன். அப்படி விழுந்த பரதனைத் தழுவிக் கொண்டான் குகன்.

வந்(து),எதிரே தொழுதானை
வணங்கினான்; மலர் இருந்த
அந்தணனும் தனைவணங்கும்
அவனும்,அவன் அடிவீழ்ந்தான்;
தந்தையினும் களிகூரத்
தழுவினான் — தகவுடையோர்
சிந்தையினும் சென்னியினும்
வீற்றிருக்கும் சீர்த்தியான்.

[வந்து வணங்கினான் குகன்: யாரை?— எதிரே தொழுது நின்ற பரதனை; மலர் இருந்த அந்தணனும் தனை வணங்கும் அவனும்: கல்வி யறிவு ஞானம், இவைகளைப் பார்த்தால் பரதனைப் பிரமனே வணங்க வேண்டிவரும், அப்பேர்ப்பட்ட பரதன்; அவன் அடி வீழ்ந்தான்: மேலே சொன்ன குகனது பாதத்தில் விழுந்தான்: தகவுடையோர் சிந்தையினும் சென்னியினும் வீற்றிருக்கும் சீர்த்தியான்: குகனது ராமபக்தியைச் சதா தியானித்துக் கொண்டிருப்பார்கள் பெரியவர்கள்; அவன் பெயரைச் சிரசில் வைத்தும் மரியாதை பண்ணுவார்கள்; அத்தனை வழிபாட்டுக் குரியவன் குகன்.]


பரதனைத் தழுவிக் கொண்ட நிலையிலேயே கேட்கிறான் குகன் — இங்கு வந்தது எதன் பொருட்டு என்பதாக.

தழுவின புளிஞர்வேந் தன்,
தாமரைச் செங்கணா னை,
'எழுவினும் உயர்ந்தோ ளாய்!
எய்திய(து) என்னை?' என் ன,
'முழுதுல(கு) அளித்ததந் தை
முந்தையோர் முறையினின் றும்
வழுவினன், அதனை நீக் க
மன்னனைக் கொணர்வான்'
[என்றான்.

[தழுவின புளிஞர் வேந்தன்: தழுவிய நிலையில் நின்ற வேடுவ அரசனான குகன்: தாமரைச் செங்கண்ணனை: பரதனைப் பார்த்து: எழுவினும் உயர்ந்த தோளாய்: அழகிய தூணினும் அழகாய் அமைந்துள்ள தோள் கொண்ட பரதனே; எய்தியது என்னை என்ன: இங்கே வருவதற்கு என்ன காரணமோ என்று கேட்கவும்; முழுதுலகு அளித்த தந்தை: ராஜ்யத்தை யெல்லாம் நல்ல முறையில் பாதுகாத்து வந்த எங்கள் தந்தை; முந்தையோர் முறையின் நின்றும் வழுவினான்: எங்கள் மூதாதையர்கள் அனுஷ்டித்து வந்த முறையிலிருந்து பிசகி விட்டான்; அதனை நீக்க மன்னனைக் கொணர்வான் என்றான்: அந்தப் பிசகைத் தவிர்க்கவும் ராமனை அழைத்து வரவுந்தான் என்று சொன்னான் பரதன்.]

ராமனைத் திரும்பக் கொண்டுவரத் தான் அங்கு வந்தது என்ற வார்த்தையை பரதன் வாயிலிருந்தே கேட்டான் குகன். அப்படிக் கேட்ட குகன் என்ன செய்தான்? அடுத்த இதழில் பார்க்கலாம்.





75. தந்தை செய்த பிழை

ஏறிக் கரையில் நின்ற பரதனது சேனையைப் பார்த்த குகனுக்கு அளவில்லாதபடி கோபம் உண்டாகி விட்டது. தகாத வார்த்தைகளைப் பேசி விட்டான். இந்த நிலையில் பரதனை நேர் முகமாகப் பார்க்கிறான். மரவுரி தரித்தவனாய்ப் புழுதி படிந்த மேனியனாய்ச் சோர்வு கொண்ட முகத்தினனாய் பரதன் நிற்பதைப் பார்க்கிறான். அடடா, என்ன பாதகம் செய்து விட்டேன் என்று எண்ணி மயக்க முற்று அப்படியே நிற்கிறான்.

சிறிது நேரங் கழியவும் மயக்கந் தெளிகிறது. தனக்குள்ளேயே சொல்லிக் கொள்ளுகிறான் :—

'நம்பியுமென் நாயகனை
ஒக்கின்றான்; அயல்நின்றான்
தம்பியையும் ஒக்கின்றான்;
தவவேடம் தலைநின்றான்;
துன்பம்ஒரு முடிவில்லை,
திசைநோக்கித் தொழுகின்றான்;
எம்பெருமான் பின்பிறந்தார்
இழைப்பரோ பிழைப்(பு)!'
[என்றான்.



"என்ன, டாக்டர் ஸார், அந்த வீட்டுக்கு இரண்டு வாரமாக அடிக்கடி வருகிறீர்களே! கேஸ் ரொம்ப ஸீரியஸ்ஸோ?"

"அதெல்லாம் ஒன்றும் இல்லை. முதல் நாள் வந்ததற்கு 'விஸிட்டிங் பீஸ்' கொடுக்கவில்லை. அதை வசூலிக்கத்தான் வருகிறேன்."

[நம்பியும் என் நாயகனை ஒக்கின்றான்: பரதனது உருவம் ராமனைப் போலிருக்கிறது; அயல் நின்றான் தம்பியையும் ஒக்கின்றான்: பக்கத்தில் நிற்பவனும் லக்ஷ்மணனை ஒத்திருக்கிறான்; தவ வேடம் தலை நின்றான்: தவக் கோலம் அல்லவா தாங்கி நிற்கிறான்; திசை நோக்கித் தொழுகின்றான்: ராமன் போயிருக்கிற தென் திசையை நோக்கி யல்லவா தொழுகிறான்; இழைப்பரோ பிழைப்பு: தவறுதலான காரியம் ஒன்றைச் செய்யவா செய்வார்கள்?]

இப்படியெல்லாம் குகன் எண்ணினான். எண்ணினதை வெளிப்படையாகச் சொல்லக் கொஞ்சம் வெட்கமாக இருந்தது. ஏதோ சந்தேகம் கொண்டவன் போல வேடர்களைப் பார்த்துப் பேசினான். அந்த வேடுவர்களுக்கும் ஒரு மாதிரி திகைப்பு வந்தது— குகனுடைய கோபமெல்லாம் எங்கேயோ போய் விட்டதே என்பதாக.

'உண்டிடுக்கண் ஒன்றுடையான்,
உலையாத அன்புடையான்,
கொண்டதவ வேடமே
கொண்டிருந்தான், குறிப்பெல்லாம்
கண்டுணர்ந்து பெயர்கின்றேன்
காமின்கள் நெறி' என்று,
தண்துறைஒர் நாவாயில்
ஒருதனியே தான்வந்தான்.

யிருந்து கடிதம் வந்துகொண்டிருந்தது. இரண்டு வருடம் கழித்து அம்மா எனக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தாள். அது பிரேமாவின் கையினால் எழுதப்பட்டிருந்தது. அதனுடன் பிரேமாவும் ஒரு கடிதம் வைத்திருந்தாள். அந்தக் கடிதத்தில்,

"இந்த வருடம் கட்டாயம் பிரேமாவுக்குக் கல்யாணம் செய்ய வேண்டும். ஆகையினால் நீ இரண்டு மாதம் லீவு எடுத்துக்கொண்டு வரவும். உனக்கேதான் மாமா பிரேமாவைக் கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறார். பரீட்சையை அடுத்த வருடம் பார்த்துக் கொள்ளலாம். வலுவில் வந்த லக்ஷ்மியைத் தள்ளாதே! கட்டாயம் வரவும்."

என்று எழுதியிருந்தது. பிரேமாவின் கடிதத்தில்,

"அன்புள்ள அத்தானுக்கு, பிரேமாவதி அநேக நமஸ்காரம் செய்து எழுதிக் கொண்டது.

நான் இந்தக் கடிதத்தை ஒருவருக்கும் தெரியாமல் எழுதுகிறேன். அத்தான்! என்னைக் கைவிட்டு விடாதீர்கள். உங்கள் வரவையே எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். ஆத்தில் கல்யாணக் காரியமெல்லாம் தடபுடலாய் நடந்துகொண்டிருக்கிறது. இந்த வருஷம் கல்யாணத்தை நிறுத்த முடியாதாம். நீங்கள் வராவிடில் வேறு யாருக்காவது நான் வாழ்க்கைப்பட வேண்டுமாம். எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. என்னை மோசம் செய்யாதீர்கள். பிரேமாவதி."

என்று எழுதி இருந்தது.

எனக்கு பி. ஏ. இரண்டாவது வருஷம் பரீட்சை நெருங்கிக்கொண்டிருந்தது. அம்மாவுக்கும் மாமாவுக்கும் பதில் கடிதம் எழுதினேன். "இந்த வருடம் பரீட்சை ரொம்பக் கஷ்டம். ஊருக்கு வந்தால் கட்டாயம் பரீட்சை போய் விடும். ஆகையால், அடுத்த வருஷம் கல்யாணத்தை முடிக்கலாம். இப்பொழுது என்ன அவசரம்?" என்று பதில் கடிதம் எழுதி விட்டேன்.

பரீட்சை மும்முரத்தினால் என் வாழ்வே பரிகசிக்கப்படுவது எனக்கு அப்பொழுது தோன்றவில்லை. யாரோ ஒரு கிழவருக்குப் பிரேமாவை இரண்டாந்தாரமாகக் கொடுக்கப் போவதாகவும், எனக்காகக் காத்திருக்க முடியாதென்றும், முகூர்த்தம் வைத்தாய் விட்டது, சௌகரியப்பட்டால் கல்யாணத்திற்கு வரவும் என்றும் மாமாவிடமிருந்து கடிதம்வந்தது.

அதற்கும் என் கல் மனம் அசையவில்லை. "எனக்காகக் காத்திருக்க முடியாதென்றால், பிரேமாவின் கல்யாணத்தை நடத்தி விடவும்" என்று எழுதி விட்டேன்.

பரீட்சையில் முதலாவதாகத் தேறினேன். அம்மாவைப் பார்ப்பதற்கு ஊருக்குப் போனேன். அந்த சமயம் பிரேமாவும் புக்ககத்திலிருந்து பிறந்தகத்திற்கு வந்திருந்தாள். அவள் வந்திருப்பாள் என்று நான் கனவிலும் கருதவில்லை.

அவளைப் பார்ப்பதற்கு எனக்கே வெட்கமாக இருந்தது. இருந்தாலும் தைரியத்தை வரவழைத்துக்கொண்டு, "என்ன, பிரேமா! சௌக்கியமா?" என்றேன். "என் ஞாபகம்கூட இருக்கிறதா, உங்களுக்கு?" என்றாள் அவள்.

"என்ன செய்வது, பரீட்சை தொந்தரவினால் உன் கல்யாணத்திற்கு வர முடியவில்லை. ஏன் இப்படி இளைத்துத் துரும்பாய்ப் போய்விட்டாய்? என்ன உடம்பு?" என்றேன்.

"உடம்பிற்கென்ன நான் கட்டிய மனக்கோட்டை இடிந்த பிறகு, என் உடம்பு எப்படி இருந்தால் என்ன?"

அவள் கண்களிலிருந்து கண்ணீர் பெருகிற்று. என்னால் தாங்க முடியவில்லை. "என்னை மன்னித்து விடுவாயா, பிரேமா!" என்று நான் அவள் கையைத் தீண்டப் போனேன்.

"என்னைத் தொடாதீர்கள்!" என்று அவள் கையை உதறினாள்.


எனக்கு செருப்பை மிதிப்பதுபோல் இருந்தது. அப்பொழுதுதான் நான் என் தவறை உணர்ந்தேன்.

அன்றே திரும்பிவிட்டேன் ஊருக்கு. அம்மாவும் மாமாவும், "இப்படி உடனே போவானேன்?" என்று எவ்வளவோ தடுத்துப் பார்த்தார்கள். நான் கேட்கவில்லை. பட்டணம் வந்தும் மனம் நிம்மதியடையவில்லை. எவ்வளவோ நாள் என் தவறுக்காக நான்



"என்ன அப்பா, நீ தைத்துக் கொடுத்த கோட்டு முதுகுப்புறம் பிரிந்து விட்டதே!"

"நான் அப்பவே சொல்லலீங்களா, நான் கோட்டுத் தைத்தால் பொத்தான்கள் ரொம்பக் கெட்டியா இருக்கும் என்று!"



வாழைப்பழத் தோலில் வழுக்கி விழுந்து பிளேட்டை உடைத்த பழனியப்பன், அதே வாழைப் பழத் தோலைப் பயன்படுத்தி, ஐயர்வாளிடம் பிளேட்டின் விலையைப் பெறுகிறான்! —பாபு.

அழுதுகூட விட்டேன். அதற்குப் பிராயச் சித்தமாக "கல்யாணமே, செய்து கொள்வ தில்லை!" என்று நிர்மானித்து, இப்படியே இருந்து வந்தேன். ஆனால் அம்மாவோ நாள் தவறாமல் நச்சரிக்கத் தொடங்கி விட்டாள். "பிரேமாவை விட எவ்வளவோ அழகான பெண்களில்லையா? எவ்வளவு நாளைக்கு இப்படி வருத்தப்பட்டுக் கொண் டிருப்பது? நீ என்ன பெண் பிள்ளையா, வருத்தப்பட? உனக்கு நான், நீ என்று பெண்ணைக் கொடுக்க எவ்வளவோ பேர் காத்திருக்கிறார்கள். உன் மனதிற்குப் பிடித்த பெண்ணைப் பார்த்துக் கல்யாணம் செய்துகொள்!" என்றாள்.

"அதுமாத்திரம் இந்த ஜன்மத்தில் இல்லை!" என்று நான் கண்டிப்பாகக் கூறி விட்டேன்.

திடீரென்று பிரேமாவுக்கு உடம்பு ஜாஸ் தியா யிருப்பதாகவும், அத்தானைப் பார்க்க வேண்டுமென்று சொல்லுவதாகவும், பிரே மாவின் புருஷன் எனக்குத் தந்தி கொடுத் திருந்தார். அலறிக்கொண்டு ஓடினேன். அங்கே எலும்புக் கூட்டுடன் உயிருக்கு ஊசலாடிக் கொண்டிருந்த என் பிரேமா வைக் கண்டேன். பிரேமாவின் இரு குழந்தைகளும் அவளுடைய கணவனும் அங்கு நின்ற காட்சி, என்னை அப்ப டியே கலங்க வைத்து விட்டது.

"அத்தான்! இந்த ஏழைக்கு இரங்கி, கடைசி காலத்திலாவது வந்தீர்களே! அதுவே போதும். இவைதான் நான் உங்களுக்கு அளிக்கும் செல்வங்கள். என் இரு கண்மணிகளையும் வைத்து ஆதரி யுங்கள். என் கணவர் சம்மதியுடன்தான் இந்தக் குழந்தைகளை உங்களிடம் ஒப் படைக்கிறேன்!" என்று தன் இரு குழந்தைகளையும் என் கையில் பிடித்துக் கொடுத்தாள்.


அடுத்த நிமிஷம், "அத்தான்! என் ஆசை நிறைவேறிற்று. நான் போய் வருகிறேன்!" என்றாள்.

அவள் முகத்தில் அமைதி நிலவிற்று.

"அம்மா! பேரக் குழந்தைகள் இல்லை என்றாயே! இதோ, பிரேமாவின் செல் வங்கள்!" என்றேன்.

ஆபீஸிலிருந்து அலுத்து வந்தால், என் பிரேமா அளித்த செல்வங்கள் ஆசையுடன் வாசலில் வந்து என் இரண்டு கைகளையும் பிடித்து அழைத்துச் செல்லும். இப் பொழுது வீடு கலகல வென்றிருக்கிறது. சூன்யமாக இருப்பதில்லை.

வாழ்க்கையில் நான் இழந்த சந்தோஷத் தைத் தன் குழந்தைகள் மூலம் மீண்டும் கொடுத்து விட்டாள் பிரேமா.



என்னைக் கூப்பிட வந்து விடுவாள். அவளும் நானும் விளையாடப் போவோம்.

அந்த ஊரில் எனக்குப் படிக்க வசதி இல்லாததினால், நானும் என் தாயாரும் பக்கத்து ஊருக்குக் குடித்தனம் வந்தோம். பிரேமாவும், "அத்தையுடன் நானும் வருவேன்" என்று அழுதாள். மாமா பிரேமாவை அனுப்பச் சம்மதிக்கவில்லை.

என் படிப்பு முடிந்ததும் மேல் படிப்புக்காக நான் பட்டணத்திற்குப் போவதாயிருந்தேன். பிரேமாவைப் பார்த்து நாலைந்து வருடமாய் விட்டதால் மாமா ஊருக்குப் போய், நாலைந்து நாள் இருந்துவிட்டு வரலாமென்று என் தாயாரையும் அழைத்துக் கொண்டு போனேன். நான் மாமா வீட்டிலிருக்கும் பொழுது பிரேமாவுக்கு ஏழு வயது. இப்பொழுது பெரியவளாய் வளர்ந்திருந்தாள். நான் போனதும், "அத்தான்!" என்று ஆவலுடன் என்னைக் கட்டிக் கொள்ள ஓடி வந்தாள். மாமி வெடுக்கென்று கொஞ்சம் கடுமையாகக் கோபித்துக் கொள்ளவே, அழுது கொண்டே அவள் உள்ளே போய் விட்டாள்.

நான் அங்கு இருந்த நான்கு நாளும், பிரேமா முன்போல் என்னிடம் அதிகமாக வருவதில்லை. எனக்கு மாத்திரம் பிரேமாவைத் தனிமையில் சந்தித்துப் பேசவேண்டுமென்று ஆவலாயிருந்தது. நான் ஊருக்குப் போவதற்கு முதல்நாள் மாமா, மாமி, அம்மா எல்லோரும் கோயிலுக்குப் போய் விட்டார்கள். பிரேமா மாத்திரம் தனிமையாக இருந்தாள். இதுதான் சமயமென்று உள்ளே போனேன். பிரேமா விளக்கின் முன் நின்று கொண்டு, சரஸ்வதியைத் தோத்திரம் செய்து கொண்டிருந்தாள். நான் பின்புறமாகப் போய், அவள் தலையில் ஒரு குட்டு வைத்தேன். பிரேமா திடுக்கிட்டுப் போனாள்.

"இவ்வளவு நாளாகியும் உங்கள் விளையாட்டுப் போக வில்லையே" என்றாள்.

"பிரேமா! நீதான் பெரிய மனுஷியாய் விட்டாய். என்னுடன் பேசக்கூட மாட்டேன் என்கிறாய்!" என்றேன் நான்.

"சித்திதான் 'அத்தானோடு அடிக்கடி பேசக் கூடாது' என்று கோபித்துக் கொண்டாள்" என்றாள் பிரேமா.

"இப்பதான் ஆத்தில் ஒருவருமில்லையே, பேசலாமோ?" என்றேன்.

"என்ன அத்தான்! நான் வேணுமென்றா பேசாமலிருந்தேன்? என் மனது உங்களிடம் பேச வேண்டுமென்று துடியாய்த் துடித்துக் கொண்டு இருக்கிறது. அது எனக்குன்னு தெரியும்."

"ஓ எனக்குக்கூடத் தெரியுமே, நீ என்னைப் பார்க்கும் திருட்டுப் பார்வையிலிருந்தே!" என்றேன் நான்.

"நான் என்ன, உங்களுக்குத் திருடியா?"

"ஆம், சந்தேகமென்ன? என் உள்ளத்தையே திருடியவள்தான் நீ!" என்று நான் லேசாக அவள் கன்னத்தில் தட்டினேன். நாணத்தினால் அவள் முகம் சிவந்தது. "போதும், உங்கள் விளையாட்டு!" என்று சொல்லிக்கொண்டே அவள் உள்ளே ஓடி விட்டாள். அதற்குள் கோயிலுக்குப் போனவர்களும் திரும்பி வந்து விட்டார்கள். மறு நாள் ஊருக்குப் புறப்படும்போது நான் பிரேமாவுடன் பேச முடியவில்லை. ஆனால் வண்டியில் ஏறும்பொழுது, பிரேமா கண்ணீர் நிறைந்த கண்களுடனும், ஏங்கிய முகத்துடனும் ஏதோ பறி கொடுத்தவள் போல் ரேழி வாசல் படியில் நின்றுகொண்டிருந்தாள். நாங்கள் பட்டணம் வந்து சேர்ந்தோம். அவ்வப்போது மாமாவிட

★ "அம்மா! பேரக் குழந்தைகள் இல்லை என்றாயே! இதோ......"



பேரக் குழந்தைகள்

செல்லம்

வயிற்றுப் பிழைப்புக்காக எல்லோரையும்போல் நானும் சட்டப் பரீட்சை பாஸ் செய்து விட்டு, வாசலில் ஒரு போர்டையும் தொங்க விட்டு விட்டேன். வரும்படியும் சுமாராக வந்து கொண்டிருந்தது. ஆனால் மனதில் மட்டும் நிம்மதி இல்லை. ஆபீஸிலிருந்து அலுத்து வீட்டிற்கு வந்தால், எனக்கு எல்லாம் சூன்யமாகவே பட்டது.

"எத்தனை நாளைக்குத்தான் இப்படி இருப்பாய்? என்னை மகிழ்விக்கவாவது ஒரு கல்யாணம் செய்து கொள்ள மாட்டாயா? எப்பொழுதுதான் நான் ஒரு பேரப் பிள்ளையைப் பெற்றெடுத்துச் சீராட்டுவது? சங்கரா, சொல்வதைக் கேள். வீட்டிற்கு லக்ஷ்மி வேண்டாமோ?" என்று தினமும் எச்சரிக்கத் தொடங்கிவிட்டாள் என் தாயார்.

"ஆகட்டும், ஆகட்டும்" என்று நான் காலத்தைக் கடத்திக்கொண்டு வந்தேன்.

பாழும் பரீட்சை பரீட்சை என்று நான் என் வாழ்க்கையையே பரீட்சை செய்துகொண்டு விட்டேன். பாவம், பிரேமா என்ன செய்வாள்? என்னால் அவளும் தன் நம்பிக்கையை இழந்தாள். நானும் பிரேமாவும் சிறு வயது முதல் ஒன்றாய் வளர்ந்தவர்கள். பிரேமா எனது மாமாவின் பெண். அவளுக்குத் தாயார் கிடையாது. எனது தகப்பனார் காலமாய் விட்டதால், நான் என் மாமா வீட்டிலேயே வளர்ந்து வந்தேன். பிரேமாவுக்கு நான்தான் பாடம் சொல்லிக் கொடுப்பேன். கணக்குத் தெரியாமல் விழிக்கும்போதெல்லாம் நான் அவள் தலையில் குட்டுவேன். பிரேமா 'ஓ'வென்று அலறுவாள். எனக்குக் கோபம் கோபமாக வரும். புத்தகத்தை எடுத்து முகத்தில் எறிந்து, "தொலைந்துபோ! எதிரில் வராதே!" என்று விரட்டுவேன்.

அவளும் அழுது கொண்டே உள்ளே போவாள். உடனே என் தாயார், "சங்கரா என்ன, பிரேமாவை இப்பவே அடிக்க ஆரம்பித்து விட்டாய்? நாளைக்குக் கல்யாணம் செய்துகொண்டால் என்ன பாடு படுத்துவாயோ?" என்பாள்.


"நானேதான் இந்த அசடைக் கல்யாணம் செய்து கொள்ள வேண்டுமோ? என்னால் முடியாது!" என்பேன் நான்.

"சற்று நேரத்திற்கெல்லாம், "அத்தான்! விளையாட வருகிறாயா?" என்று பிரேமாவே



சமையல் சங்கீதம் ஆரம்பமாகிவிட்டது

நமது சமையலறைகளின் இருளும், நிசப்தமும் ஒழிந்தன. காமதேனு வந்தது; பொரியலும் சமையலும் பரபரவென்று நடக்கின்றன. ஆகா! என்ன ருசியான லட்டு, ஜாங்கிரி, பேணி, உப்புமா, ஸொஜ்ஜி பஜ்ஜி! வாருங்கள் வேண்டியமட்டும் சாப்பிடலாம்! கசிவற்ற, மணமற்ற பொரியல் சாதனமான காமதேனு சமையலுக்கு மிகச்சிறந்தது. ஆரோக்கியமளிக்கும் வைடமின்கள் மிகுந்தது. உயர்தர நெய்யைப் போன்று மணல் மணலாக உள்ள காமதேனு பரிசுத்தமானது, கைபடாதது. 4 காலன், 10 பவுண்டு, 5 பவுண்டு கொண்ட சீல் வைத்த டின்களில் விற்கப்படுகிறது. காமதேனுவை உபயோகிப்பதால் சிக்கனமும் உண்டு; நெய், வெண்ணெயைப் போன்ற குணமுள்ளதாயினும் விலையில் மட்டும் மலிவு.





சிறந்த சமையற்காரர்கள்
வேண்டுவது

காமதேனு
வனஸ்பதி

தயாரிப்பவர்கள் :

மேட்டூர் கெமிகல் & இண்டஸ்ட்ரியல் கார்ப்பொரேஷன் லிமிடெட்.
மேட்டூர்டாம் — தென்னிந்தியா

மானேஜிங் ஏஜண்டுகள் :
சேஷசாயி பிரதர்ஸ் லிட்.,
திருச்சிராப்பள்ளி.

சோல் விற்பனை ஏஜண்டுகள் :
அலைட் இண்டஸ்ட்ரியல் டிஸ்ட்ரிபியூட்டர்ஸ்
லிட்., 120, அரமனைக்காரத் தெரு, மதராஸ்.

காலக்ஷேபம்

முழு முட்டாள்

உபாத்தியாயர் (நின்றுகொண்டே):—உங்களுக்குள் முழு முட்டாள் யார்? அப்படி யாராவது இருந்தால் எழுந்து நில்லுங்கள்.

ஒரு பையன் மெதுவாக எழுந்து நின்றான்.

உபாத்தியாயர்:—சந்தோஷம்! நீ முழு முட்டாளென்று ஒப்புக்கொள்கிறாயா?

பையன்:—இல்லை ஸார்! முட்டாளா யிருப்பவன் எழுந்திருக்க வேண்டும் என்று சொல்லிய பிறகு நீங்கள் நின்று கொண்டிருப்பதைப் பார்க்க எனக்கு மனம் ஒப்பவில்லை. தங்களுக்குத் துணையாகவே நானும் எழுந்தேன். —எம். என். மார்க்கண்டன்.

★

புரியவில்லை!

கோபு:—என்ன ஸார்? அவரைத் தெரியுமோ உங்களுக்கு?

சுப்பு:—யாரைச் சொல்கிறீர்?

கோபு:—அவர்தான் ஸார், உம்முடன் கூடப் படித்தவராம். தாடி வைத்துக் கொண்டிருக்கிறார்.

சுப்பு:—அதென்னமோ போங்கள்! தாடி வைத்துக் கொண்டு என்னுடன் ஒருவரும் படிக்கவில்லை. —என். கே. ஸ்ரீநிவாசன்.

★

ரொம்ப சரி!

ராமு:—பிட்டு, உன்னைப் பார்த்து நான் 'கழுதை' என்று அழைத்தால் உனக்குக் கோபம் வருமா, வராதா?

பிட்டு:—கண்டிப்பாய் வரும்.

ராமு:—சரி, ஒரு கழுதையைப் பார்த்து நான் 'பிட்டு' என்று கூப்பிட்டால் வராதே?

பிட்டு:—வராது!

ராமு:—ரொம்ப சரி, பிட்டு!

—கே. நடராஜன்.

★

காரணம்!

பாட்டி:—சரத் துணியைக் கட்டிக்கொண்டு சுற்றுகிறாயே; ஜலதோஷம் பிடித்துக் கொள்ளப் போகிறது?

பேரன்:—ஜலதோஷம் பிடித்துக் கொள்ளாது பாட்டி: வெந்நீரில் நனைத்த துணியைத்தான் கட்டிக் கொண்டிருக்கிறேன்.

—இ. ரா. சு.

வந்த காரணம்!

சடையன்:—எங்கள் ஊர் எவ்வளவோ பரவாயில்லை. ஒரு ரூபாய் இருந்தால் நாலு படி பால் கிடைக்கும்.

நண்பன்:—பின் இங்கு எதற்காக வந்தாய்?

சடையன்:—அந்த ரூபாய் இல்லாததால் நான் வந்தேன். —எம். கே. சவுண்டப்பன்.

★

அப்படியா!

ஒரு சுருட்டு வியாபாரி:—நான் புகையிலை திருடிச் சுருட்டு பண்ணி விற்கிறேனாதலால் குறைந்த விலைக்கு விற்கிறேன். நீ எப்படி அதை விடக் குறைந்து விற்கிறாய்?

மற்றவன்:—நான் சுருட்டையே திருடி வருகிறேன். —கே. என். ராஜகோபாலன்.

★

வாஸ்தவந்தான்!

எஜமானி:—டேய், பச்சை மிளகாய் அகப்படவே இல்லை. எங்கேயாவது கண்ணில் பட்டா வாங்கிண்டு வாடா என்றேன், ஏன்டா வாங்கிக் கொண்டு வரவில்லை?

வேலைக்காரன்:—அம்மா; பச்சை மிளகாய் கண்ணிலே பட்டா எரியுமேன்னு சும்மா வந்துவிட்டேனம்மா! —ஜே. அருணமத்.

★

சரியான விடை

தகப்பனார் (சட்டென்று தன் மகனைப் பார்த்து):—அடே, ஜப்பான் தீவுகள் எந்தப் பக்கத்தில் இருக்கின்றன?

பையன்:—96-ஆம் பக்கத்தில் இருக்கின்றன, அப்பா! —மணியன்.

★

கட்டாது!

மஹா கருமியான செட்டியாரிடம் வேலை பார்த்து வந்த பிரமானந்த செட்டியாரிடம் பணிவுடன் வந்து "எனக்கு தயவு செய்து நாளைக்கு மட்டும் லீவு கொடுக்க வேண்டும்.



நாளைக்கு எனக்கு ஷஷ்டி அப்தபூர்த்தி" என்றார்.

செட்டியார்:—அதுபாடு வருஷத்திற்கு ஒரு முறை இப்படி நான் லீவ் கொடுத்துக் கொண்டே இருந்தால் கட்டிவராது. அடுத்த ஷஷ்டி அப்தபூர்த்திக்கு வந்து லீவு கேட்காதேயும். —ஆர். வெங்கடராமன்.




ஆட்டிடையன் ஆடுகளிடம் போய்ச் சேர சரியான வழியைக் கண்டு பிடியுங்கள்.

"அணில்கள் வண்டியில் கொண்டுவந்த கொட்டைகளில் பாதிக் கொட்டை என் பிள்ளையைச் சேர்ந்தது" என்று கண்டிருந்தது. விசாரணையன்று ஆந்தை நியாயஸ்தலத்தில் ஏகக் கூட்டம். அணில்கள் இரண்டும் வண்டி நிறையக் கொட்டைகளுடன் வந்து சேர்ந்தன. விசாரணை ஆரம்பமாயிற்று. "அணில் குட்டி பாதிக்கொட்டை தன்னைச் சேர்ந்தது என்று சொல்வது பொய்; எல்லாக் கொட்டைகளும் எங்களுடையது!" என்று இரண்டு அணில்களும் சாதித்தன. அணில் குட்டியின் சாட்சிகள், "அணில்கள் சொல்வது பொய், பொய்!" என்று கத்தின. கோர்ட்டின் பியூன் குரங்கு, "ஸைலன்ஸ், ஸைலன்ஸ்!" என்று இரைந்தது. உடனே ஆந்தையார், அணில் குட்டியைப் பார்த்து, "நீ என்ன சொல்லுகிறாய்?" என்று கேட்டது.


"ஆந்தையாரே! இந்த அணில்கள் சொல்லுவது பொய்; ஒரு பாதிக்கொட்டை என்னைச் சேர்ந்ததுதான். நான் வண்டியில் ஏறிச் சவாரி செய்துகொண்டு வரும்பொழுது, வழியில் கிடந்த ஒரு கொட்டையை எடுத்துக் கடித்துக்கொண்டு வந்தேன். இறங்கும்பொழுது என் வாயில் மிகுதி பாதிக்கொட்டை இருந்தது. அது தவறி வண்டிக்குள் விழுந்துவிட்டது. இதோ, அந்தப் பாதிக் கொட்டை!" என்று சொல்லிக்கொண்டே, அது வண்டிக்குள் குதித்து அதில் இருந்த பாதிக் கொட்டையை எடுத்து ஆந்தைக்குக் காட்டிற்று! "பூ! இவ்வளவு தானா? எங்கள் கொட்டைகளில் சரி பாதியைத்தான் கேட்கிறாயாக்கும் என்றல்லவா நினைத்தோம்!" என்று சொல்லி இரண்டு அணில்களும் சிரித்தன.

அதைக் கேட்டு நியாயாதிபதி ஆந்தையார்கூடச் சிரித்தார். "இந்தப் பாதிக் கொட்டைக்கா இத்தனை அமர்க்களம்?" என்று எல்லாப் பிராணிகளும் தங்கள் ஏமாற்றத்தை மறந்து அவருடன் சேர்ந்து சிரித்தன.



காட்டில் வழக்கு

— ராஜி —



ஒரு நாள் கீழே விழுந்து கிடக்கும் கொட்டைகளையெல்லாம் பொறுக்கித் தங்கள் தள்ளுவண்டியில் போட்டுத் தள்ளிக்கொண்டு, இரண்டு அணில்கள் உல்லாஸமாகப் பாடிக்கொண்டே வந்தன. கொட்டைகள் என்றால் அணில்களுக்கு மிகவும் பிரியம் அல்லவா? அதனால்தான் அவைகளுக்கு அத்தனை சந்தோஷம்! அப்பொழுது எதையோ வாயில் வைத்துக் கடித்துக் கொண்டிருந்த ஒரு அணில குட்டி, "நானும் வேடிக்கையாக வண்டியில் உட்கார்ந்து கொண்டு வரட்டுமா?" என்று கேட்டது. இரண்டு அணில்களும் அதற்குச் சம்மதிக்கவே, அணில் குட்டி வண்டியில் ஏறி உட்கார்ந்து கொண்டது. வண்டி நிறையக் கொட்டைகள் இருந்ததைப் பார்த்ததும் அணில் குட்டியின் நாக்கில் ஜலம் சொட்டிற்று. "வண்டியிலிருக்கும் கொட்டையில் பாதிக் கொட்டையாவது தனக்குக் கிடைத்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்!" என்று அந்த அணில் குட்டி எண்ணிற்று.

இரண்டு அணில்களும் தங்கள் வீடு நெருங்கியவுடன் அணில் குட்டியைப் பார்த்து, "நீ சவாரி செய்தது போதும்; வீட்டுக்குப் போ!" என்று அதைக் கீழே இறக்கிவிட்டன. கீழே இறங்கியதுதான் தாமதம்; அணில் குட்டி, "என் பாதிக் கொட்டையைக் கொடு!" என்று ஒரே அழுகையாக அழ ஆரம்பித்துவிட்டது. விஷயம் என்னவென்று தெரிந்துகொள்ள அங்கே ஒரு பெரிய கூட்டம் கூடிவிட்டது. கூட்டத்திலிருந்த பிராணிகள் யாவும் அணில் குட்டியின் சார்பாகப் பேசின. ஆனால், "நாங்கள் அலைந்து சம்பாதித்த கொட்டைகளில் ஒன்றுகூட ஒருவருக்கும் கொடுக்க மாட்டோம்!" என்று இரண்டு அணில்களும் ஒரே அடியாய் மறுத்துவிட்டன. அதைக் கேட்ட பிராணிகள் யாவும் அணில் குட்டிக்குத் தங்கள் அனுதாபத்தைத் தெரிவித்துவிட்டுக் கலைந்தன.

அணில்குட்டி அழுது கொண்டே வீடு வந்து சேர்ந்தது. அதன் தாயாரும், தகப்பனாரும் என்ன சமாதானம் செய்தும் அது சமாதானம் அடையவில்லை. ஆகவே, அணில் குட்டியின் தகப்பனார், நியாயத்தைக் கோரி ஆந்தைக் கோர்ட்டுக்கு மனுப் போட்டது. அந்த மனுவில்,



தாயார்:—வாசவழியில் தேளைக் கொட்டி விட்டேன் என்கிறாயே; நீயா கொட்டினாய்?

பையன்:—இல்லே அம்மா, வண்டு கொட்டிவிட்டது......

தாயார்:—வண்டு எப்படிடா தேளைக் கொட்டும்?

பையன்:—தேளை இல்லே அம்மா; என் கையைத் தான் கொட்டி விட்டது. —சாமா.

சாதாரண ஒரே வார்த்தை . . . நர்ஸ்



கிடையாது; அந்த அதிகாரம் எமனுக்குத்தான்!'' என்ற சட்டத்தை சிறைவாசம், தடியடி இதெல்லாம் ஒன்றுமில்லாமலே நாங்கள் வாழ்க்கையில் பின்பற்றுவதென்று தீர்மானித்து விடுகிறோம்.

இத்தனையும் இரண்டே நிமிஷத்தில் என் கற்பனை உலகில் நடந்தேறி விடுகின்றன! — அப்புறம் நான் அவனை எப்படி மறப்பது? — அவனுக்காக எதையும் செய்யத் தயாராகி விடுகிறேன்.

அவனுக்காக அவன் அன்று செய்த குற்றத்தை நாமே செய்ததாக ஒப்புக்கொள்ள வேண்டும். அப்பா கண்டிப்புக்காரர்தான் என்றாலும், போலீஸ் லாக்-அப்பில் நம்மைப் பார்த்ததும் அவர் மனம் இரங்கிவிடும்; மன்னித்து விடுவார். அப்புறம் கோதையைப் பற்றி அவரிடம் சொல்ல வேண்டியது; அவளை எப்படியாவது கல்யாணம் செய்து கொண்டு, ஜம்மென்று வாழ்க்கையை ஆரம்பிக்க வேண்டியது!

சரி, தீர்மானித்தாகிவிட்டது; இன்றே செய்துவிட வேண்டியதுதான்.

★

அன்றே செய்தும் விட்டேன். ஆனால் என்ன ஏமாற்றம்?

என் அப்பாவைப் பற்றி நான் என்ன நினைத்தேன்? கடைசியில் அவர் என்ன சொன்னார்?

''என் பிள்ளையாயிருந்தால் மட்டும் என்ன? அயோக்கியனுக்கு நான் ஒரு போதும் அநுதாபம் காட்ட மாட்டேன்!''

என்ன ஈரமில்லாத நெஞ்சம்?

முடிவு என்ன? ஒரு வருடச் சிறை. ஏற்றுக் கொண்டேன். அநுபவித்தேன்.

ஆனால் அப்படி அநுபவித்ததிலும் நான் ஆனந்தத்தைத்தான் கண்டேன்!

அதற்குக் காரணம் கோதைதான் என்று சொல்லவும் வேண்டுமா?

அவள் அன்று இருபாகிநி எனக்கு அடிக்கடி கடிதம் எழுதிக் கொண்டிருந்தாள். அவை யெல்லாம் வெறும் கடிதங்கள்தானா? கிடையவே கிடையாது. அவளுடைய உணர்ச்சியிருந்த உள்ளத்தின் படங்கள்!

அவள் எழுதிய கடிதங்களில் ஒரே ஒரு கடிதத்தைத்தான் நான் படித்தேன். பாக்கியை ஏன் படிக்கவில்லை?

அந்தக் கடிதங்கள் அத்தனை பெரிய ஆபத்தை விளைவிக்கக் கூடியவையாயிருந்தன. ஒவ்வொரு கடிதத்திலும் அவள் தன் உள்ளக் கிளர்ச்சியை அப்படியே அள்ளிக் கொட்டியிருந்தாள். அவற்றைப் படித்தால் என் ஆசைத் தீ அளவில்லாமல் மூண்டு விடும்; அதை அடக்கச் சக்தியற்று நான் சிறையிலிருந்து தப்பி ஓட முயல்வேன்; அதிகாரிகள் என்னைச் சுட்டு விடுவார்கள். அப்புறம் நான் இந்த ஜன்மத்தில் அவளைக் கல்யாணம் செய்து கொள்ள முடியுமா?

அப்பாவைப் பற்றி எவ்வளவோ சொல்லலாம். ஆனால் அவரைப் பற்றி எனக்கென்னமோ ஒன்றும் சொல்ல மனமில்லாமலிருக்கிறது!

கடைசியில் விடுதலை. விழுந்தடித்துக் கொண்டு ஓடி வந்தேன்.

கோதை இன்னதென்று தெரியாத ஏதோ ஒரு வியாதியால் இறந்து விட்டாள் என்ற சேதி!

''இதைப் பற்றி எனக்கு ஏன் முன்னமேயே தெரிவிக்கவில்லை?'' என்று நான் இருபாகிநியைக் கேட்டேன்.

அவன், ''அதனால் உமக்கும் ஏதாவது ஆபத்து வந்துவிடுமோ என்று பயந்தேன்'' என்றான். அட, பாவி!



''அப்பா! சர்வாதிகாரி யென்றால் யார்?''

''அம்மா உன்னை போகட்டும், சொல்கிறேன்.''

★

அதென்ன வியாதி? அன்பே அவளைக் கொன்று விட்டதா?

அப்படியானால் ஆண்டவன் என்ன செய்தான்?

ஆமாம், எனக்காக அவளைக் காப்பாற்றி வைக்காத அந்தக் கடவுள் என் எதிரிதான்!

அன்றல்ல; இன்றும் என்றும்!

தேன். இந்த விஷயம் அப்பொழுது என் கவனத்துக்கு வந்ததும், அதை வியாஜமாக வைத்துக் கொண்டு நான் அவனுக்கு உதவி செய்வதென்று தீர்மானித்தேன். ஆகவே, நான் அவனைப் பார்த்து, "இப்படியே உன் அண்ணனை வைத்தலை மறைவாக



இன்னும் இரண்டு நாளைக்கு இருக்கச் சொல்லு. நான் எப்படியாவது அவரை அந்த ஆபத்திலிருந்து விடுவிக்கிறேன்" என்றேன்.

"உங்களுக்குக் கோடி புண்ணியமுண்டு" என்று அவன் எனக்குத் தலை வணங்கிவிட்டுத் திரும்பினான்.

நான், "உன் பெயர்?" என்றேன்.

அவன், "கோதை!" என்றான்.

★

"கண்டதும் காதல் எப்படி உண்டாகிவிடும்?" என்று சிலர் கேட்கிறார்கள். நான் கேட்கிறேன்: "எந்தக் காதலாவது காணாமலே உண்டாகி விடுகிறதா?"

கோதை! — கண்டதும் அவள் என் உள்ளத்தில் கோயில் கொண்டு விட்டாள். நானும் கற்பனை உலகில் அவளுடன் சஞ்சரிக்க ஆரம்பித்து விட்டேன்.

அவள் என்னைப் பார்த்துச் சிரித்துக் கொண்டே 'ஓடு, ஓடு' என்று ஓடுகிறாள். நானும் 'கோதை, கோதை!' என்று கூவிக்கொண்டே அவளுக்குப் பின்னால் ஓடுகிறேன்.

கடைசியில் அவள் கரத்தையும் தீண்டிவிடுகிறேன்!

அங்கே ஒரு பூந்தோட்டம். எத்தனையோ கோடி மனிதர்களுக்கு ஒரே ஒரு மனிதன் ராஜாவாகித் தன்னுடைய சட்ட திட்டங்களால் அவர்களை அடக்கி ஆள்வதுபோல், அந்தத் தோட்டத்திலிருந்த அத்தனை பூங்கொடிகளையும் தன் இஷ்டப்படி கட்டி ஆண்டு கொண்டிருக்கிறான் ஒரே ஒரு தோட்டக்காரன். "அவன் போட்ட பந்தலுக்குள்ளேயே நாம் அடங்கி வாழ்வதா?" என்று அகம்பாவம் கொண்ட சில பூங்கொடிகள், அந்தப் பந்தலைவிட்டு வெளியே வந்து விழுந்து விழுந்து சிரித்துக் கொண்டிருக்கின்றன—அந்தத் தோட்டக்காரனைப் பார்த்துத்தான்! — இது அவனுக்குத் தெரியுமா? தெரிந்தால், "என் உதவியின்றி உங்களால் அவ்வளவு ஒழுங்காக வாழ முடியுமா?" என்று அவன் கேட்கமாட்டானா?

அழகைக் கண்டு மயங்காத ஜீவன் எது? அதிலும், காதலுக்கே காரண புருஷன் சௌந்தர்ய தேவன் தானே? எனவே, அழகுத் தெய்வத்தின் ஆலயம்போல் விளங்கும் அந்தத் தோட்டத்திற்குள் நாங்கள் நுழைகிறோம். பச்சைப் பசேரென்று இருக்கும் புல் தரை, எங்களை 'வா, வா!' என்று வருந்தி அழைத்து ஆசனம் தருகிறது. நாங்கள் 'கலகல' வென்று சிரித்துக் கொண்டே உட்காருகிறோம்.

உடனே, கொஞ்சல் — குலாவல் — பிணக்கு எல்லாம்!

"இந்த உலகிலேயே நீதான் அழகு!" என்று நான் அவளைப் பார்த்துச் சொல்கிறேன்; "இந்த உலகிலேயே நீதான் அழகன்!" என்று அவள் என்னைப் பார்த்துச் சொல்கிறாள்!

மறு நாள் நினைத்துப் பார்த்தால் சிரிப்புச் சிரிப்பாய் வருமே என்றுகூட எண்ணாமல், நாங்கள் அப்பொழுது என்னவெல்லாமோ பிதற்றிக் கொள்கிறோம்.

அதற்குள் பொழுது சாய்ந்து விடுகிறது. அத்தனை அவசரமாக மேற்குத் திசையில் மறைந்து விட்ட அந்த ஆதவனைச் சபித்துக் கொண்டே நாங்கள் வீடு திரும்புகிறோம். திரும்பும்போது இன்னதென்று சொல்ல முடியாத ஒரு இன்பம்; எதற்கென்று தெரியாத ஒரு சிரிப்பு; மனதில் தன்னை மறந்த ஒரு மகிழ்ச்சி; அச்சத்திலும் ஒரு ஆனந்தம்! — "மது மறைந்துண்டவன் மகிழ்ச்சிபோல்!" என்று உவமை சொல்லிய கவி, காதலை எவ்வளவு தூரம் அனுபவித்திருக்க வேண்டும்!

அப்புறம் கல்யாணப் பேச்சு ஆரம்பமாகிறது: ஜாதகம் பார்க்கிறார்கள்; முகூர்த்தம் குறிக்கிறார்கள்; பத்திரிகை போடுகிறார்கள்; பந்துமித்திரர்களுக்கு அனுப்புகிறார்கள்; பந்தலும் போடுகிறார்கள்!

மேளக்காரன் வெளுத்து வாங்குகிறான்; நாதஸ்வரக்காரன் ஜமாய்க்கிறான்; ஆயிரக்கணக்கானவர்களுக்கு முன்னால் நான் அவளுக்கு மாலையிடுகிறேன்!

"இனிமேல் ஒருவரை விட்டு ஒருவர் பிரிந்துபோகும் அதிகாரம் நமக்குக்

கடவுள் என் எதிரி



விந்தன்

மாடி அறையில் தனியாக உட்கார்ந்து மௌனம் சாதித்துக் கொண்டிருந்தேன். அப்பொழுது முன் பின் தெரியாத ஒரு பெண் எனக்கு முன்னால் தோன்றி விம்மி விம்மி அழுதாள்.

நான் ஒன்றும் புரியாமல் விழித்தேன்.

அவள் அழுகையை கடுகடுவே அடக்கிக் கொண்டு, "சிவபாதம் பிள்ளையின் புதல்வர் நீங்கள்தானே?" என்று கேட்டாள்.

"ஆமாம்."

"உங்கள் பெயர்?"

"சஞ்சீவி."

"தயவு செய்து எனக்கொரு உதவி செய்ய வேண்டும்."

"என்ன உதவி?"

"என் அண்ணாவை உங்களுக்குத் தெரியுமோ?"

"தெரியாதே!"

"சமீபத்தில் வங்காளப் பஞ்ச நிவாரணத்துக்காக, இந்தப் பக்கம் நிதி திரட்டிக் கொண்டிருந்தாரே, அவரை உங்களுக்குத் தெரியாதா?"

"யார் அது? கிருபாநிதியா?"

"ஆமாம், அவர்தான் என் அண்ணா!"

"ஓஹோ! அவரைப் பற்றி இப்பொழுது என்ன?"

"அவர் ஒரு தப்பான காரியம் செய்து விட்டார்."

"என்ன காரியம்?"

"ஒரு நாள் அவர் உங்கள் அப்பாவிடம் வந்து வங்க நிதிக்காக உதவி கோரினார்......"

"ஆமாம், அதில் என்ன தப்பு?"

"அதில் ஒன்றும் தப்பில்லை; அதற்குப் பிறகு தான் என் அண்ணா தப்பு பண்ணி விட்டார்."

"என்ன தப்பு?"

"உதவி கோரியதற்கு உங்கள் அப்பா ஒரே வார்த்தையில் 'இல்லை' என்று சொல்லி யிருக்கலாம். ஆனால் என் அண்ணாவின் கஷ்டகாலம் அவர் அப்படிச் சொல்ல வில்லை. 'முதலில் உமது பஞ்சத்தைத் தீர்த்துக் கொள்ளும்; அப்புறம் வங்கப் பஞ்சத்தைத் தீர்க்கப் பாரும்' என்று என் அண்ணாவின் ஏழ்மை நிலையைப் பற்றி என்னவெல்லாமோ குறை கூறினாராம். அந்த ஆத்திரத்தில் அதி தீவிரவாதியான என் அண்ணா தன் சகாக்களின் பேச்சைக் கேட்டுக் கொண்டு, அன்றிரவு உங்கள் வீட்டுக் கஜானாவில் கையை வைத்து விட்டார். அந்தக் களவாடிய பணத்தை மேற்படி நிதிக்கும் அனுப்பி வைத்து விட்டார். இப்பொழுது உங்கள் அப்பா கொடுத்த தகவலின்பேரில் போலீஸார் என் அண்ணாவைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள். எந்த நிமிஷத்திலும் அவர்கள் அண்ணாவைக் கைது செய்து விடலாம். எனக்கோ அவரைப் பிரிந்தால் வேறு கதி கிடையாது. இதற்கு நீங்கள்தான் ஏதாவது உதவி செய்ய வேண்டும்."



ஒரு நிமிஷம் நான் யோசித்துப் பார்த்தேன். அவளுடைய அண்ணா வங்க நிதிக்கு உதவி கோரிய அன்றுதான் நானும் அதற்காக என் அப்பாவிடம் உதவி கோரி, வேண்டிய வசவுகள் வாங்கி யிருந்



பலே ஸென்ஸார்!

ஜயம்

ஜானகியின் கல்யாணத்திற்கு இன்னும் நாலைந்து நாட்கள் தான் இருந்தன. "என்ன! இந்தப் பஞ்ச காலத்திலே கல்யாணப் பத்திரிகையைக் கார்டில் அச்சடித்து அனுப்பி வைத்தால் போதாதோ? இல்லா விட்டால் கவரைத் திறந்தபடி விட்டு, 'புக் - போஸ்ட்'டில் அனுப்பி வைத்தாலும் மூக்காலணாவோடு ஒழியுமே! இப்படி என் பத்திரிகையைக் கவரில் அனுப்பித் தண்டச் செலவு செய்கிறீர்கள்?" என்று கேட்டாள் பங்கஜம்.

"அடி, அசடே! இப்பொழுது நாம் எழுதுகிற கடிதங்களையெல்லாம் ஸென்ஸார் செய்கிறார்களோ, இல்லையோ? நாம் ஒன்றரையணா செலவுக்குப் பயந்து கார்டு அச்சடித்துப் போட்டுவிட்டால், அது காலா காலத்தில் போய்ச் சேர்ந்துவிடும். எல்லாரும் புறப்பட்டு வந்து விட்டால், அவர்களை உபசரித்து, மரியாதை செய்து, ரயிலுக்குப் பணம் கொடுத்து அனுப்புவதற்குள், இந்த யுத்த காலத்தில் ஓட்டாண்டியாக வேண்டியதுதான். இப்பொழுதோ இந்தக் கவர் ஸென்ஸார் ஆபீஸில் நாலு நாள் தங்கிய பிறகு அவரவர்கள் கைக்குப் போய்ச் சேரும். அதற்குள் நம்மாத்துக் கல்யாணமே முடிந்துவிடும்! பழி நம்பேரில் வராது. யோசனை எப்படி?" என்றார் ராமச்சந்திர அய்யர்.

●

"அடீ, லல்லூ! உன் தங்கைக்கு ஆண் குழந்தை பிறந்திருக்கிறதாம். உன்னை உடனே அனுப்பி வைக்கும்படி உங்கப்பா எழுதி யிருக்கிறார். உன் தங்கைக்குத் தலைக்கு ஜலம் விடும்வரை அங்கேயே இருக்க வேண்டுமாம்."

"அப்படியா? குழந்தை எப்பொழுது பிறந்தானாம்?"

"அவன் பத்தாம் தேதி விடியற் காலை நான்கு மணிக்குப் பிறந்தானாம். அவன் பிறந்த அன்றே உங்கப்பா நமக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்."

"அட ராமா! 10உ எழுதிய கடிதம் 25உதானா வந்து சேர்ந்தது? இதற்குள் அவனுக்கு ஜலம்கூட விட்டாயிருக்குமே?"

"இப்பொழுதுதான் எல்லாக் கடிதாசிகளையும் ஸென்ஸார் செய்து அனுப்புகிறார்களே! அதுதான் இவ்வளவு தாமதம். இதோ, கடிதாசியின் மேல் ஸென்ஸார் முத்திரை! கார்டு எழுதி யிருந்தால் சற்று சீக்கிரம் வந்திருக்கும். அதனாலென்ன, எனக்கு ரொம்ப ரொம்ப நல்லதாய்ப் போச்சு! இல்லா விட்டால் என்னை இங்கே சாப்பாட்டுக்குத் திண்டாட விட்டுவிட்டு, நீ மாத்திரம் ஜம்மென்று பிறந்தகம் போய்விட்டிருப்பாய்!" என்றான் கோபு.

●

"மகா-ா-ா-ஸ்ரீ மாப்பிள்ளை அவர்களுக்கு, இப்பவும் இவ்விடம் சக்கு உள்பட அனைவரும் க்ஷேமம். அவ்விடத்திய க்ஷேமத்திற்கு அடிக்கடி கடிதம் எழுதவும்.

இந்த ஸென்ஸார் கட்டுப்பாடு அமுலுக்கு வந்த பிறகு, நம் சக்கு படும் அவஸ்தை சொல்லத் தரமல்ல. அவள் தன் மனதைத் திறந்து உங்களுக்குக் கடிதம் எழுத முடியாமல் தவியாய்த் தவிக்கிறாள். எதை எழுதினாலும் ஸென்ஸார் பார்த்து விடுவான் என்று அவளுக்குப் பயம். மனத்திலிருப்பதை வெளியிடாமல் அவள் உயிரோடிருக்கவும் முடியாது. குழந்தை சதா காலமும் கண்ணீரும் கம்பலையுமா யிருப்பதைக் காண எனக்குச் சகிக்கவில்லை. அவள் நலத்தைக் கோரி நீங்கள் உடனே காலேஜுக்கு ஒரு 'லீவு' போட்டு விட்டுப் பெட்டி, படுக்கையுடன் உடனே புறப்பட்டு வந்து விடுங்கள். யுத்தம் முடிந்து இந்த ஸென்ஸாரும் ஒழிந்தால் மேலே படித்துக் கொள்ளலாம்.

விஸ்வநாத அய்யர்."

இவ்விதம், ஸென்ஸார் செய்யும் பல அநுகூலங்களைப் பார்க்கும்போது, "பலே ஸென்ஸார்!" என்று சொல்லத் தோன்றுகிறதோ, இல்லையோ?



போர்ட்டர் :—நான் தூக்கிக்கொண்டு வருகிறேன், கொடுக்கமாட்டீர்களா? ஒரு அணா என்னிடம் இருந்தால் [illegible]

பிரயாணி :—அந்த ஒரு அணா என்னிடம் இருந்தால் நான் தூக்கிக்கொண்டு வருவேனா ?—சர்தார்.



யுத்த டீ
கடினமான காலங்களில்
இந்தியன் டீ அருந்துங்கள்
IK 223



அவருக்கும் பிள்ளைகளுக்கும் வைராக்கியம் வளர்ந்தது. பிள்ளைகள் கடனுக்காகத் தாம் ஜவாப்தாரி யில்லை என்று அவர் பத்திரிகைகளில் விளம்பரம் செய்தார். கடைசியாக ஒருநாள் அவர்களை வீட்டை விட்டுத் துரத்தி விட்டுக் கதவையும் அடைத்து விட்டார்.

4

"இதற்குப் பிறகுதான் இந்தக் கதையின் முக்கிய சம்பவம் நடந்தது. ஜமீன்தாரின் மனம் அன்று மிகவும் புண் பட்டுப் போயிருந்தபடியால், அவருக்குத் தேறுதலாக சில வார்த்தைகள் சொல்ல நினைத்தான் வடிவேலு. ஆனால், ஜமீன்தார் அவர் அறையைவிட்டு அன்று முழுதும் வெளியில் வரவே இல்லை. வடிவேலு வாசற்படியிலேயே வெகு நேரம் காத்திருந்தான். உள்ளேயிருந்து சத்தமே வராமலிருந்ததைப் பார்த்து அவனுக்கு ஏதோ சந்தேகம் தட்டிற்று.

"கடைசியில் கதவைத் தட்டினான். ஜமீன்தார் வந்து கதவைத் திறந்தார். ஆனால், வெறுமே வந்து கதவைத் திறக்க வில்லை. உரக்கச் சிரித்துக் கொண்டே வந்து கதவைத் திறந்தார். வடிவேலு பிரமித்து நின்று விட்டான். அவரது கண்களும் கோவைப் பழம் போல் சிவந்திருந்தன. 'ஹா! வடிவேலு! என் பிரியமான வடிவேலு! உன்னைத் தான் இத்தனை நேரம் தேடிக்கொண் டிருந்தேன்' என்று சொல்லிவிட்டு அவர் உரக்கச் சிரித்தார்.

"உலகமே வடிவேலுவுக்குத் தலை கீழாகி விட்டது போலவும், அண் டங்கள் ஒன்றோடொன்று மோதுவது போலவும் தோன்றிற்று. வெகு நேர மாகியும் அவனால் சமாளித்துக் கொள்ள முடியவில்லை. எது தம் குடும்பத்தைக் கெடுத்துத் தம்மைக் கவலையில் தள்ளிற்றோ, அதைக் கொண்டே தம் கவலையை மறக்கத் தீர்மானித்து விட் டார் என்று வடிவேலு உணர்ந்து கொண்டான். அப்பொழுது ஜமீன் தார் மேலும் உரக்கச் சிரித்துக் கொண்டே ஒரு வெள்ளிப் பேழை யைத் திறந்து அதிலிருந்த வைர மாலையை எடுத்தார். அதன் பிரகாசம் அவன் கண்களைக் கூசச் செய்தது. அது அவரது மனைவியின் வைர மாலை. அதுவரை வெகு ரகசியமாகக் காப் பாற்றி வந்த மாலை.

"'வடிவேலு! இது உனக்குத்தான். எடுத்துக்கொள்!' என்று ஜமீன்தார் அந்த மாலையை அவனிடம் கொடுத்தார்.

"'எனக்கா? மாட்டேன். ஒரு நாளும் மாட்டேன்!' என்றான் வடிவேலு.

"'வேண்டாம் என்கிறாயா! வாங்கிக் கொள் என்றால் நீயும் என் பேச்சைத் தட்டுகிறாயா?'

"வடிவேலு பயங்கரமாக விழித்தான். இந்தச் சமயத்தில் அவர் சொன்னதைக் கேட்பதுதான் சரியென்று தோன் றிற்று. மாலையை எடுத்துப் போய் வைத்திருந்து சுயப் பிரக்ஞை வந்ததும் கொண்டு வந்து கொடுப்பதே நல்லது என்று தீர்மானித்தான்.

"'இந்தா! எடுத்துக்கொள்! ஓடு! நிற்காதே!' என்று கூவினார் ஜமீன்தார். வடிவேலு அதை வாங்கிக்கொண்டு, மனத்தில் பெரும் பளுவுடன் குடிசையை நோக்கி ஓட்டமாக ஓடி வந்தான். குடிசையில் ஆழமாக ஒரு குழியைத் தோண்டி அதற்குள் மாலையைப் புதைத்ததும் அவனுக்குச் சற்று நிம்மதி ஏற்பட்டது.

"வடிவேலு போன சிறிது நேரத்திற் கெல்லாம் சிவசங்கரனும் விநாயகமும் அப்பாவின் அறைக்கு வந்தார்கள். வேறு

எதற்கும் இல்லை; தகப்பனார் ரகசியமாக வைர மாலை வைத்திருக்கிறார் என்பதைக் கேள்விப் பட்டு அதை அடித்துக் கொண்டு போகத்தான். ஆனால் பேழை திறந்திருப்பதையும், அதன் அருகில் தகப்பனார் சிரித்துக்கொண்டும் பேசிக் கொண்டும் இருப்பதைப் பார்த்ததும் அவர்களுக்குத் 'திக்' கென்றது. அறை முழுதும் தேடியும் நகை அகப்படவில்லை. விசாரித்ததில், அப்பொழுதுதான் அங்கே வடிவேலு வந்து போனதாகத் தெரிந்தது.

"அன்றிரவு போலீஸார் வடிவேலுவின் குடிசையைச் சோதனை போட்டு மாலையை எடுத்துக்கொண்டு, அவனையும் கைது செய்தார்கள்.

"திருட்டுக் குற்றத்திற்காக அவன் விசாரிக்கப்பட்டான். நிரபராதியான தன் மேல் குற்றம் சுமத்தப்பட்டதைக் கூட அவன் பெரிதாக நினைக்கவில்லை. மூன்று வருஷம் தண்டனை என்று மாஜிஸ்ட்ரேட் அறிவித்தபோது கூட அவன் கவலைப்படவில்லை.

"ஆனால், விசாரணையின்போது வெளியான ஒரு விஷயம் மட்டும் அவனை அதிரச் செய்து விட்டது. அது 20,000 ரூபாய் பெருமானமுள்ள அந்த வைர மாலையை அவன் திருடி விட்டதால், ஜமீன்தாருக்குச் சித்தப் பிரமை உண்டாகி விட்டதென்று எதிர்த் தரப்பில் வாதித்ததுதான்.

"'இதென்ன விபரீதம்? நாம் நினைத்தது என்ன, நடந்தது என்ன? என்னமோ புத்தி மாறாட்டத்தால் நம்மிடம் மாலையைக் கொடுக்கிறார், வாங்கிக் கொண்டு திருப்பிக் கொடுத்து விடலாம் என்றல்லவா நாம் நினைத்தோம். கடைசியில் அந்த மாலை காணாமற் போனதால்தான் அவருக்குப் புத்தி மாறாட்டம் உண்டாகிவிட்டது என்கிறார்களே, இது என்ன அநியாயம்? புத்தி மாறாட்டம் ஏற்பட்டதற்கு நிஜக் காரணத்தைச் சொன்னால் இங்கே யார் நம்புவார்கள்?' என்று வடிவேலு தன்னைத் தானே நொந்து கொண்டான்."

"முடிவு என்ன?"

"அவனுக்கு மூன்று வருஷச் சிறை வாசம் கிடைத்தது. மேற்சொன்ன சம்பவம் நடந்த பிறகு, ஜமீன் கோர்ட் ஆப் வார்ட்ஸ் கையில் போய்ச் சேர்ந்தது — அந்த மாலையும் கூடத்தான்! ஆகையால் பையன்கள் அதில் கை வைக்க முடியவில்லை.

"சமீபத்தில் ஜமீன்தார் இறந்து போனார். அவர் புத்தி சுவாதீனமாயிருந்தபோது, அவர் எழுதிய கடைசி உயிலில் அந்த வைர மாலையைத் தமக்குப் பிரியமான வடிவேலுவிடம் கொடுக்க வேண்டுமென்று கண்டிருந்தது."

"வடிவேலுவுக்கா?"

"ஆமாம், எவன் மாலையைத் திருடியதாகக் குற்றம் சாட்டப்பட்டானோ, அவனுக்கேதான்!"

"வேடிக்கைதான்! அப்புறம்?"

"அந்த உயிலின்படி வைர மாலையைச் சிறையிலிருந்து விடுதலையான வடிவேலுவுக்கே கொடுத்து விட்டார்கள்!"

"இப்பொழுது அது அவன் கையில் இருக்கிறதா?"

"அதுதான் இல்லை. ஜமீன்தார் இறந்து சில மாதங்களுக்கெல்லாம் மூத்த பையனும் இறந்து போனான். சின்னவன் விநாயகம் மட்டும் இருக்கிறான். குடும்பத்தில் இவ்வளவு விபத்து ஏற்பட்ட பிறகு, அந்த அதிசயத்தைக் கேளுங்கள், பிள்ளையாண்டானுக்குப் புத்தி திரும்பிவிட்டது. இப்பொழுது கெட்ட வழக்கம் ஒன்றும் கிடையாது. பழைய ஞாபகத்தினால் அவன் வெளியில் வரக்கூட வெட்கப்படுகிறானாம். ஒரு நாள், வடிவேலு அந்த வைர மாலையைக் கொண்டு வந்து விநாயகத்தினிடம் கொடுத்து, 'இந்தா விநாயகம்! இது உன் சொத்து! நான் உங்கள் அடிமை!' என்றானாம்.

"'இது என்ன பைத்தியக்காரத்தனம், மாமா! எத்தனையோ வருஷங்களாய் எங்கள் வீட்டில் உழைத்த உனக்கு, வெகுமதியாக மூன்று வருஷச் சிறைவாசம் வாங்கிக் கொடுத்தேனே, அதற்கா இந்த மாலையை எனக்கு வெகுமதியாகக் கொடுக்கிறாய்?" என்று மனமுருகிக் கேட்டானாம் விநாயகம்.

"மூன்று வருஷம் அல்ல; நீ முப்பது வருஷத் தண்டனை வாங்கிக் கொடுத்தாலும் நான் சந்தோஷமாகவே ஏற்றுக் கொள்வேன். நீ நான் வளர்த்த குழந்தைதானே! நான் அந்த மூன்று வருஷமும் சிறையில் ஒவ்வொரு விநாடியும் என்ன வேண்டிக் கொண்டிருந்தேன் என்கிறாய்? 'கடவுள் உங்களுக்கு நல்ல புத்தியைக் கொடுக்கவேண்டும்' என்றுதானே! கடைசியில் அவர் என்னை மோசம் செய்யவில்லை. அதுவே எனக்குப் போதாதா?" என்று சொல்லி வடிவேலு ஆனந்தக் கண்ணீர் வடித்தானாம்.

"இதைக் கேட்ட விநாயகம் தன்னை மறந்து வடிவேலுவைக் கட்டி அணைத்துக் கொண்டானாம். இதுதான் கதை" என்று கூறி முடித்தார் நண்பர்.

தார்கள். வடிவேலுவுக்கு உலகமே சுவர்க்கமாக இருந்தது. "மாமா!" என்று அவர்கள் தன்னைக் கூப்பிடும்போது அவன் அந்த இன்பத்தில் இந்த உலகையே மறந்தான்!

"வடிவேலுவின் இன்பத்தைக் கண்டு விதிக்கே பொறுக்கவில்லை போலிருக்கிறது.

"ஒருநாள் சகோதரர்கள் இருவரும் வீட்டுக்குத் திரும்பி வந்தபோது, அவர்கள் அருகே சென்ற வேலாயுதம் எதையோ மோப்பம் பிடித்து விட்டு, பொறிகலங்கி நின்று விட்டான். பிறகு சமாளித்துக் கொண்டு அவர்கள் முகத்தைப் பார்த்தான். கண்கள் 'ஜிவ்' வென்று சிவந்திருந்தன. 'ஹாஹா! உம்மைப்போல் மாமா இந்த உலகத்தில் உண்டா? நீ எமலோகத்துக்குப் போனாலும் நாங்களும் கூடவே வருவோம்!' என்று இருவரும் சிரித்துக் கொண்டே உளறினார்கள்.


"அன்று இரவு முழுதும் வடிவேலு குழந்தைபோல் அழுது கொண்டிருந்தான். 'ஐயோ! யாரோ பாவிகள் குழந்தைகளைக் கெடுத்து விட்டார்களே! அவர்கள் தலையில் இடிவிழ!' என்று கதறினான்.

"'அப்பாவுக்குத் தெரிந்தால் அவர் பிராணனை விட்டாலும் விட்டு விடுவார். இந்தத் துர் வழக்கத்தை விட்டு விடுங்கள்' என்று எத்தனையோ தரம் வடிவேலு சொல்லிப் பார்த்தும் பிரயோசனம் இல்லை.

3

"**ப**டிப்பெல்லாம் முடிந்து பையன்கள் ஊருக்குத் திரும்பி வந்தார்கள். தன் வாயினால் சொல்ல வேண்டாமென்று வடிவேலு இவ்விஷயத்தை மறைத்து வைத்திருந்தான். சகோதரர்களும் கொஞ்ச நாளைக்கு அதை நிறுத்தி வைத்திருந்தார்கள். ஆனால் எத்தனை நாளைக்குத்தான் மூடமுடியும்? ஒருநாள் பிள்ளைகள் பக்கத்து ஊருக்குப் போய் குடித்து விட்டுத் தலைகால் தெரியாமல் திரும்பி வந்தார்கள்.

"ஜமீன்தார் அதைப் பார்த்துப் புழுப்போல் துடிதுடித்தார். அப்பாவுக்கு விஷயம் தெரிந்து விட்டதை அறிந்ததும் சகோதரர்கள் முன்பிருந்த பயத்தையும் ஒதுக்கிவிட்டு நடக்க ஆரம்பித்தார்கள். இந்த அவமானத்தையும் துயரத்தையும் தாங்க முடியாமல் தந்தை தவித்தார். கண்ணினும் மேலாகக் கருதி வளர்த்து வந்த குழந்தைகள், உயிரினும் மேலாக நேசித்து வந்த



குழந்தைகள், இப்படி அயோக்கியராய்ப் போவதைப் பார்த்தால் யாருக்குத்தான் மனம் கலங்காது?

"ஜமீன்தாருக்கு வாழ்க்கை வெறுத்து விட்டது. எதிலும் அவர் சிரத்தை கொள்ளவில்லை. ஆகவே, ஜமீன் விவகாரங்கள் குட்டிச் சுவராய்ப் போய்க் கொண்டிருந்தன. துக்ககரமான இந்த வேளையில்கூட ஜமீன்தாருக்கு ஒரே ஒரு சந்தோஷம் இருந்து வந்தது. 'நல்ல வேளையாக, நீ இந்தக் காட்சியைப் பார்ப்பதற்கு இல்லாமல் போய் விட்டாயல்லவா? மெத்த சந்தோஷம்!' என்று அவர் காலஞ் சென்ற தம் மனைவியை நினைத்து ஆனந்தப்பட்டார்.

"பாரசூட் இல்லாமல் ஆகாய விமானத்திலிருந்து கீழே குதிப்பவனைப்போல் சிவசங்கரனும் விநாயகமும் தலைகால் தெரியாமல் அதள பாதாளத்தில் விழுந்து கொண்டிருந்தார்கள்.

"பையன்கள் அட்டகாசம் வரவர அதிகமாகிக் கொண்டு வந்தது. வீட்டிலுள்ள நகைகளையும் ஒவ்வொன்றாய் எடுத்து வெளியில் விற்க ஆரம்பித்தார்கள். தகப்பனார் கண்டிக்கவே,



வெகுமதி

வஸந்தன்

சில தினங்களுக்கு முன் நானும் என் நண்பரும் கடைத் தெரு வழியாகப் போய்க் கொண்டிருந்தோம். "அதோ பாருங்கள்!" என்று நண்பர் திடீரென்று கூவினார். "ஏதோ லாரி-டிராம் விபத்தாக்கும்; நாலைந்து பேர் செத்து வைத்திருக்கப் போகிறார்கள்; இவ்வளவுதானே!" என்று நான் அலட்சியமாக எதிரே பார்த்தேன். அவர் சுட்டிக் காண்பித்தது எந்த விபத்தையும் அல்ல; சற்று தூரத்தில் எங்களை நோக்கி வந்துகொண்டிருந்த ஒரு ஆசாமியைத்தான். நரைத்த மீசையுடனும், வழுக்கைத் தலையுடனும் சுமார் ஐம்பது வயதுள்ள அந்தக் கிழவன், எங்களை நெருங்கி வந்து விட்டான்.

அந்தக் கிழவன் என் நண்பருக்கு ஒரு கும்பிடு போட்டான். அவனுடன் சில வார்த்தைகள் பேசி அனுப்பிவிட்டு, "ஸார்! அந்தக் கிழவன் எங்கள் ஊர்க்காரன். அவனைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?" என்று கேட்டார்.

"அவனைப் பற்றி நீங்கள் ஏதோ கதை சொல்லப் போவதாக நினைக்கிறேன்!" என்றேன்.

"கதை என்றால் கட்டுக்கதை அல்ல; நிஜக்கதை. ரொம்ப ஆச்சரியமான கதை......!"

"ஓஹோ! ஆள் மாறாட்டம், மோட்டார் 'டாஷ்,' குறைந்தது இரண்டு கொலைகள் — இவ்வளவும் உண்டோ, இல்லையோ?"

"அதெல்லாம் ஒன்றும் கிடையாது; கதையைக் கேளுங்கள்" என்று ஆரம்பித்தார் என் நண்பர்.

2

"நான் சொல்லப் போகும் சம்பவம் ராமநாதபுரம் ஜில்லாவிலுள்ள ஒரு ஜமீன் கிராமத்தில் நடந்தது. அதுதான் நான் பிறந்த ஊர். வீரப்பட்டி ஜமீன்தார் என்றால் எங்கள் ஜில்லாவில் தெரியாதவர்கள் கிடையாது. ஜில்லாவில் எந்தப் பொதுக் காரியம் நடந்தாலும் அவரில்லாமல் நடக்காது. அவருக்குப் பிடிக்காத ஜில்லா கலெக்டர்களை இருபத்துநாலு மணி நேரத்தில் வேறு ஜில்லாவுக்கு மாற்றி விடுவார்கள் என்றால் அவர் செல்வாக்குக்கு வேறு அத்தாட்சி வேண்டியதில்லை.

"இவ்வளவு செல்வாக்கு இருந்தும் ஒரே ஒரு குறை ஜமீன்தாரை வாட்டிக் கொண்டிருந்தது. சின்னஞ்சிறு வயதில் இரண்டு குழந்தைகளை விட்டு, அவர் மனைவி காலமாகி விட்டாள். மறு கல்யாணம் செய்துகொள்ள அவர் இஷ்டப்படவில்லை. சிவநேசச் செல்வரும், தூய வாழ்க்கையும் உடைய ஜமீன்தார் குழந்தைகளின் சந்தோஷமே தமது பாக்கியம் என்று அவர்களைச் சீராட்டி வளர்த்து வந்தார்.

"இப்பொழுது நான் பேசிக் கொண்டிருந்தேனே, அந்த வடிவேலுதான் குழந்தைகளைக் கவனித்துக் கொள்வதற்காக அமர்த்தப் பட்டிருந்தான்.

"குழந்தைகள் இரட்டைக் குழந்தைகள். ஒருவரை யொருவர் ஒரு கணமும் பிரிய மாட்டார்கள். வடிவேலுவையும் மூன்றாவது குழந்தையாக சேர்த்துக் கொள்ள வேண்டியதுதான் என்று ஜமீன்தார் அடிக்கடி நினைப்பதுண்டு. ஏனெனில், குழந்தைகள் இருவரும் வடிவேலுவின் தோளை விட்டுக் கீழே இறங்கவே மாட்டார்கள்.

"குழந்தைகள் இருவருக்கும் பத்து வயதாயிற்று. மூத்தவன் சிவசங்கரன்; இளையவன் விநாயகம். அவர்கள் படிப்பிற்காகச் சென்னைப் பட்டணத்துக்கு வந்தார்கள். மயிலாப்பூரில் அவர்களுக்குச் சொந்தமான பங்களா இருந்தது. வயதான அத்தையும், சமையற்காரனும், வடிவேலுவும் குழந்தைகளுடன் பட்டணம் வந்தார்கள்.

"பல வருஷங்கள் சென்றன. குழந்தைகள் பெரியவர்களாகிக் கொண்டிருக்

உங்கள் மகனுக்கு 50% அதிகப் படிப்பு வசதி



இன்று இவன் சிறுவன்தான். அவன் வருங்காலத்தைப் பற்றி நீங்கள் இன்பக் கனவுகள் காண்பது இயற்கையே.

அவனுக்குச் சிறந்த கல்வியை அளிக்கத் தேவையான பணத்தை கடைசி நேரத்தில் ஒருமிக்கப்பெற உங்களால் முடியாது. புத்திசாலித்தனமான பெற்றோர்கள், தங்கள் பிள்ளைகள் வருங்காலத்தில் கீர்த்தியுடன் விளங்க வேண்டுமென்ற எண்ணத்துடன் அவர்கள் படிப்புச் செலவுக்காகப் பணம் சேர்க்கிறார்கள். அத்தகைய பெற்றோர்களைப் போல நீங்கள் இருக்க விரும்புகிறீர்களா?

பையன் படிப்புக்காக எவ்வளவுதான் சேர்த்து வைத்திருந்தாலும், சமயம் வரும்போது "அவனுக்காக இன்னும் கொஞ்சம் சேர்த்திருக்கலாமே" என்றுதான் சொல்லுவீர்கள். நாஷனல் சேவிங்ஸ் சர்ட்டிபிகேட்டுகள் வாங்கி சேமிப்பதன் மூலம் அவனுக்கு நீங்கள் அதிகம் சேர்த்து வைக்க முடியும். அப்படி ஏன் செய்யக் கூடாது? நாஷனல் சேவிங்ஸ் சர்ட்டிபிகேட் ஒவ்வொன்றும் இன்று ரூ. 10-க்கு கிடைக்கும். 12 வருஷங்களுக்குப் பின் அதன் உத்திரவாதமுள்ள மதிப்பு ரூபாய் 15. உங்கள் புத்திசாலித்தனமான போக்கினாலே உங்களுடைய பையனின் கல்வி பாதி அளவிற்கு மேம்பட்டிருக்கிறது. முதல் மூன்று வருஷங்களுக்குப் பிறகு எப்பொழுது வேண்டுமானாலும் நாஷனல் சேவிங்ஸ் சர்ட்டிபிகேட்டுகளைப் பணமாக மாற்றிக் கொள்ளலாம். இந்த சர்ட்டிபிகேட்டுகளில் முதலிட்ட தொகைகளுக்கு வருமான வரி கிடையாது. ஒவ்வொருவரும் ரூ. 5,000 வரைக்கும் இந்த சர்ட்டிபிகேட்டுகளை வாங்கலாம்.

உங்கள் சேமிப்பை யெல்லாம் லாபமும், பத்திரமும் உள்ள

நாஷனல் சேவிங்ஸ் சர்ட்டிபிகேட்டுகளை

வாங்குவதில் உபயோகியுங்கள்.

இன்றே தொடங்குங்கள்!

பதிவு செய்தல் — ஒரு நல்ல முன்னேற்பாடு.

அஸாம், வங்காளம், பீஹார், ஒரிஸா, சென்னை மாகாண வாசிகளின் சௌகரியத்துக்காக, லக்ஷ்மணபுரியில் ஐக்கிய மாகாண போஸ்ட் மாஸ்டர் ஜெனரலின் மேற்பார்வையில் ஒரு மத்தியப் பதிவு ஆபீஸ் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. டிபென்ஸ் சேவிங்ஸ் சர்ட்டிபிகேட்டுகள், தபாலாபீஸ் காஷ் சர்ட்டிபிகேட்டுகள், நாஷனல் சேவிங்ஸ் சர்ட்டிபிகேட்டுகளை வைத்திருப்பவர்கள் தங்கள் சர்ட்டிபிகேட்டுகளின் விபரங்களை இங்கு இலவசமாகப் பதிவு செய்து கொள்ளலாம். இதன் மூலம், சர்ட்டிபிகேட்டுகள் காணாமற் போனாலுஞ் சரி, அழிந்து விட்டாலுஞ் சரி, தங்கள் உரிமையை நிரூபிப்பது சுலபம். பூரா விபரங்களையும் உங்களூர் தபாலாபீஸில் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்.

ஸேவிங்ஸ் பாங்கி உள்ள எந்தத் தபாலாபீஸிலும் நாஷனல் சேவிங்ஸ் சர்ட்டிபிகேட்டுகளை வாங்கலாம்.

CPU—420



திருடனைப் பிடிக்கப் போன தைரியசாலி படிக்கட்டில் வேஷ்டி மாட்டிக்கொண்டது தெரியாமல் சத்தம் போடுகிறார்!

பெற்றுத் திரும்பி வருவானா? அவனை நாங்கள் எப்போது பார்ப்போம்? தீராத துக்கத்தில் மூழ்கிக் கிடக்கிறோம். என்னைப் போல் துக்கம் அனுபவித்த மனிதன் இவ்வுலகில் வேறு ஒருவனும் இருந்ததில்லை" என்றான்.

மகரிஷி சொன்னார்:

"துக்கத்தில் மனதைச் செலுத்தாதே! அஸ்திரங்களும் வரங்களும் பெற்றுக் கொண்டு அருச்சுனன் வந்து விடுவான். பகைவர்களையும் ஜயிப்பீர்கள். உன்னைப்போல் துர்ப்பாக்கியன் உலகத்தில் இருந்ததில்லை என்கிறாய்! அது சரியல்ல, உன்னைக் காட்டிலும் மிகத் துயரத்துக்கு ஆளான நளன் சரித்திரம் உனக்குத் தெரியவில்லை போலிருக்கிறது. நிஷத தேசத்து அரசனைப் பற்றி நீ கேட்டதில்லையா? பந்தய ஆட்டத்தில் இறங்கி புஷ்கரனால் வஞ்சிக்கப்பட்டு நாடும் செல்வமும் எல்லாம் இழந்துக் காட்டுக்குத் துரத்தப்பட்டான். வனவாச காலத்தில் அவனுடன் சகோதரர்களாவது, பிராமணர்களாவது இருக்கவில்லை. கலி புருஷன் அவனைப் பிடித்துக் கொண்டதன் பயனாக நளன் தன் விவேகத்தையும் குணத்தையும் இழந்து புத்தித் தடுமாறி, தன்கூட வந்த மனைவியையும் ஏமாற்றிக் காட்டில் அவளைத் தனியாக விட்டு விட்டு ஓடிப் போனான். அதைவிடத் துக்கம் வேறு என்ன?

"நீயோ தேவர்களுக்கு ஒப்பான வீர சகோதரர்களாலும் பிராமணர்களாலும் சூழப்பட்டு வனவாசம் செய்கிறாய். ஒப்பற்ற பாஞ்சாலியும் கூட இருக்கிறாள். உன்னுடைய மதியும் கலங்கமற்று நல்ல நிலையிலிருக்கிறது. நீ துயரப் படலாகாது. நீ பாக்கியவான்" என்று கூறினார் மகரிஷி.

பிறகு ரிஷி நளனுடைய சரித்திரத்தை யுதிஷ்டிரனுக்கு விஸ்தாரமாகச் சொன்னார்.

நளன் கதை பாரதத்தில் இருபத்தெட்டு அத்தியாயங்களாகும். அதன் முடிவில் ரிஷி சொல்லுகிறார்:—

"பாண்டவனே! நளன் மிகவும் பயங்கரமான துக்கத்தை அடைந்து முடிவில் க்ஷேமத்தை அடைந்தான். நீ அவனைப் போல் கலியால் பிடிக்கப்படாமலும் தனியாக இல்லாமலும் சகோதரர்களுடனும் திரௌபதியுடனும் இருந்து கொண்டு தருமத்தையே சிந்தித்துக் கொண்டும் வேத வேதாங்கங்களை ஓதிய பிராமணர்களால் எப்போதும் சூழப்பட்டும் புண்ணிய கதைகளைக் கேட்டுக் கொண்டும் இருக்கிறாய். துயரப்பட வேண்டாம். மனித வாழ்க்கையில் சோதனைகள் நேருவது புதிதல்ல."

இவ்வாறு பிருகதச்வ மகரிஷி நளன் கதையைச் சொல்லி யுதிஷ்டிரனுக்குத் தேறுதல் வார்த்தைகள் கூறினார்.

சொல்லுகிறான். சத்தியமே காக்கத் தக்கது; ராஜ்யமன்று. கோவிந்தன் ஒருவனே என்னை உள்ளபடி அறிந்தவன். கேசவன் நமக்குச் சொல்லும் காலத்தில் யுத்தம் செய்வோம். இப்போது விருஷ்ணிகுல வீரர்கள் திரும்பிப் போகக் கடவர். தருமம் தவறாமல் இருங்கள். பிறகு ஒரு காலத்தில் கூடுவோம்" என்று யுதிஷ்டிரன் அவர்களுக்குச் சமாதானம் சொல்லி அனுப்பினான்.

* * *

அஸ்திரங்கள் பெறுவதற்காகப் போன அருச்சுனன் வெகு காலம் திரும்பி வரவில்லை. பீமனுடைய துக்கமும் கோபமும் முன்னைவிட அதிகமாயிற்று. யுதிஷ்டிரனைப் பார்த்து அவன் சொல்லலானான்:

"மகாராஜாவே! நம்முடைய உயிரெல்லாம் அருச்சுனனிடத்தில் இருப்பது உமக்குத் தெரியும். உம்முடைய உத்தரவின் பேரில் போனவன் என்ன ஆனானோ தெரியவில்லை. அவனுக்கு ஏதேனும் ஆபத்து நேரிட்டு அவன் இறந்தால் நம்முடைய கதி என்ன? அருச்சுனன் இல்லாவிடில் பாஞ்சாலனும் சாத்யகியும் கிருஷ்ணனுங் கூட நம்மைக் காப்பாற்ற முடியாது. அருச்சுனன் இறந்தானால் அந்தத் துக்கத்தை என்னால் தாங்க முடியாது. உம்முடைய விளையாட்டால் நாம் இந்தத் துன்பங்களை எல்லாம் அடைந்தோம். அற்பர்களாகிய நம்முடைய பகைவர்கள் பலமுள்ளவர்களானார்கள். வனவாசம் செய்வது க்ஷத்திரியனுடைய தருமம் அல்ல, அரசு புரிவதே க்ஷத்திரியன் கடமையாகும். ஏன் நமக்கு உரிய தருமத்தை விட்டுவிட்டு இவ்வாறு பிடிவாதம் செய்கிறீர்? அருச்சுனனை வனத்திலிருந்து திருப்பி அழைத்து கோவிந்தனையும் வரவழைத்து உடனே திருதராஷ்டிரன் மக்கள் மேல் போர் புரிவோம். அந்தத் துராத்மா சகுனியையும் கர்ணனையும் துரியோதனனையும் வதம் செய்து நான் திருப்தி அடைவேன். பிறகு நீர் வேண்டுமானால் காட்டுக்குப் போய்த் தவம் செய்யலாம். உடனே செய்ய வேண்டிய காரியத்தைத் தாமதம் செய்வது பெருங் குற்றமாகும். மோசம் செய்தவனை மோசத்தால் கொல்லுவது பாவமல்ல. ஒரு பகலும் இரவும் சேர்ந்து ஒரு வருஷத்துக்குச் சமானமாகச் சில விரதங்களைச் செய்து முடிக்கலாம் என்பது வேத வசனம். இன்றையிலிருந்து பதின்மூன்று நாட்கள் விரதமிருந்து முடித்தோமானால் பிரதிக்ஞை முடிந்து போகும். எனக்கு விடை கொடும்; தீயானது புதரை எரிக்க ஆசைப்படுவது போல் துரியோதனனைக் கொல்ல ஆசைப்படுகிறேன்."

பீமன் இவ்வாறு சொன்னதைக் கேட்ட தருமபுத்திரன் தம்பியைக் கட்டி அணைத்துக் கொண்டு, "அன்பிற்குரியவனே! பதின்மூன்று வருஷங்கள் முடிந்ததும் காண்டீபம் ஏந்திய வீரனான அருச்சுனனும் நீயும் யுத்தம் செய்து துரியோதனனைக் கொல்லுவீர்கள். சந்தேகமில்லை. சரியான காலம் வரும் வரையில் பொறுத்துக் கொள்வாய். பாவத்தில் மூழ்கிய துரியோதனனும் அவனைச் சேர்ந்தவர்களும் தப்ப மாட்டார்கள். சந்தேகமில்லை" என்று சமாதானப்படுத்தினான்.

* * *

இவ்வாறு சோகத்தால் பீடிக்கப்பட்டு சகோதரர்கள் வாதாடிக் கொண்டிருக்கும்போது பிருகதசுவர் என்கிற மகரிஷி பாண்டவர்களுடைய ஆசிரமத்துக்கு வந்து சேர்ந்தார். அவருக்குச் செய்ய வேண்டிய பூஜையைச் செய்து களைப்புத் தீர்த்துக் கொள்ளச் செய்த பின் யுதிஷ்டிரன் அவரருகில் உட்கார்ந்து சொன்னான்:—

"பகவானே! வஞ்சகர்கள் நம்மைச் சூதாட்டத்திற்கு அழைத்து மோசம் செய்து நம்முடைய தனத்தையும் ராஜ்யத்தையும் பறித்துக் கொண்டார்கள். அதன் பயனாக நானும் ஒப்பற்ற வீரர்களான என்னுடைய சகோதரர்களும் பாஞ்சாலியும் வனவாசம் செய்கிறோம். தம்பி அருச்சுனன் அஸ்திரங்கள் பெறப் போனவன் வெகு காலமாயும் திரும்பவில்லை. அவன் இல்லாமல் நாங்கள் உயிர் இழந்தவர்கள் போல் இருக்கிறோம். அருச்சுனன் அஸ்திரங்களைப்





வியாசர் விருந்து

ஞாயம் புதிதல்ல

சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்

பாண்டவர்கள் வனவாசத்திலிருந்த பொழுது அவர்களைப் பார்க்க ஒரு சமயம் பலராமனும் கோவிந்தனும் பரிவாரத்துடன் வந்து சேர்ந்தார்கள்.

பாண்டவர்களைப் பார்த்துப் பலராமன் மிக்கத் துயரப்பட்டுக் கிருஷ்ணனுக்குச் சொல்லலானான்:

"கிருஷ்ணா! தருமமும் அதருமமும் வாழ்க்கையில் பயன் தருவதில்லைபோல் தோன்றுகிறது. துரியோதனனைப் பார், பூமியை ஆள்கிறான்; மகாத்மாவான யுதிஷ்டிரன் மரவுரி உடுத்திக்கொண்டு காட்டில் வாசம் செய்கிறான். யுதிஷ்டிரன் காட்டையும் சுகத்தையும் இழந்து காட்டிலிருப்பதையும் துரியோதனனும் அவனுடைய துஷ்ட சகோதரர்களும் விருத்தி அடைந்து சுகமாக இருப்பதையும் பார்த்துப் பிரஜைகளுக்குக் கடவுள் நம்பிக்கை போய் விட்டது. உலகத்தில் தருமா தருமங்களின் பலனைப் பார்த்தால் சாஸ்திரங்களில் தருமத்தைச் சிலாகிப்பது வெறும் பேச்சாகத் தோன்றுகிறது. பூமி ஆசை கொண்ட திருதராஷ்டிரன் எமன் முன் நிற்கும் போது தன் நடத்தைக்கு என்ன சமாதானம் சொல்லப் போகிறான்? குற்றமற்ற பாண்டவர்களும் யாக வேதியில் பிறந்த பாஞ்சாலியும் வனவாசம் செய்வதைப் பார்த்து மலைகளும் பூமியுமே துயரப்படுகின்றன!" என்றான்.

பக்கத்திலிருந்த சாத்யகி, "பலராமா! புலம்புவதற்கு அல்ல இது சமயம்! யுதிஷ்டிரர் ஏதும் செய்யச் சொல்லாமலிருந்தாலும் என்ன செய்ய வேண்டுமோ அதை நாம் காலம் விளைக்காமல் செய்யவேண்டும். நீயும் கிருஷ்ணனும் நம்மைச் சேர்ந்தவர்களும் உயிருடன் உறவினர்களாக இருக்க, இந்தப் பாண்டவர்கள் ஏன் வனவாசம் செய்ய வேண்டும்? பந்துக்களாகிய நாம் பாண்டவர்களுக்கு நேர்ந்த கஷ்டத்தை நீக்குவதற்கு அவர்கள் ஏவாமலே முயற்சி செய்ய வேண்டும். நம்முடைய குலத்தாரை ஒன்று கூட்டித் துரியோதனனை எதிர்ப்போம். விருஷ்ணி குலப் படை துரியோதனன் சேனையை யமலோகத்துக்கு அனுப்ப வேண்டும். இந்த வேலைக்கு நீயும் கிருஷ்ணனுமே போதும். கர்ணனுடைய அஸ்திரங்களை நொறுக்கி அவன் தலையை வெட்டித் தள்ள ஆசைப்படுகிறேன். துரியோதனாதியரை வதம் செய்து இழந்த ராஜ்யத்தை யுத்தத்தில் மீட்டி அபிமன்யுவிடம் ஒப்புவிப்போம். வேண்டுமானால் பாண்டவர்கள் வனவாசப் பிரதிக்ஞையை நிறைவேற்றலாம். இதுவே நமக்குப் புகழைத் தரும்படியான காரியம்" என்றான்.

இதையெல்லாம் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்த வாசுதேவன், "நீங்கள் சொல்லுவது சரியே! ஆனால் பாண்டவர்கள் தங்கள் கைகளால் ஜயிக்கப்படாத பூமியை விரும்ப மாட்டார்கள். பாஞ்சாலியும் அவ்வாறே எண்ணுவாள். யுதிஷ்டிரர் பூமிக்கு ஆசைப்பட்டோ அல்லது பிறரைக் கண்டு பயந்தோ தம்முடைய தருமத்தை ஒரு போதும் விட மாட்டார். பிரதிக்ஞை முடிந்ததும் பாஞ்சால ராஜனும் கேகயனும் சேதிராஜனும் நாமும் ஒன்று சேர்ந்து பாண்டவர்களுக்குத் துணையாக யுத்தம் செய்து பகைவர்களை வதம் செய்வோம்" என்றான்.

இதைக் கேட்ட யுதிஷ்டிரன் மகிழ்ச்சி அடைந்தான். "மாதவன் சரியாகச்

ஸ்ரீ வெங்கடேஸ்வர ஸங்கீத ஸபை — திருச்சி

17 - 9 - 1944 ஞாயிற்றுக்கிழமை (மஹாளய அமாவாசை) மாலை 5 - 30 மணிக்கு

மலைக்கோவில் நூற்றுக்கால் மண்டபத்தில்

திருவாங்கூர் ஸமஸ்தான வித்வான்கள்

சென்னை	ஸ்ரீ. G. N. பாலசுப்ரமண்யம் B. A. (Hons.)	—	பாட்டு
கும்பகோணம்	.. ராஜமாணிக்கம் பிள்ளை	—	வயலின்
பாலக்காடு	.. மணி அய்யர்	—	மிருதங்கம்
பழனி	.. சுப்ரமணிய பிள்ளை	—	கெஞ்சிரா

டிக்கெட் (வரியுள்பட) ரூ. 1—8—0, 0—12—0.

டிக்கெட் கிடைக்குமிடம் :— "கான்பூர் ஹவுஸ்" சின்னக்கடைத் தெரு.

இடத்திற்கு முந்துங்கள் ! S. G. RATNAM, Organiser

ஒலி பெருக்கி ஏற்பாடு :— ஸ்ரீ ராம் ஸௌண்ட் ஸர்வீஸ் — திருச்சி

இருமல்

இதைப் போல் அபாயகரமானது



இருமலுக்கும் ஜலதோஷத்திற்கும்

உயர்ந்த மருந்து

ஸிரோலின்

'ரோச்'



சரஸ்வதி கான சபா — சிதம்பரம்

17-9-44 அமாவாசை யன்று ஞாயிறு மாலை 5-30 மணிக்கு

ராஜா அண்ணாமலை டவுன் ஹாலில்

ஸ்ரீமதி N. C. வஸந்த கோகிலம் & பார்ட்டி

அதி அற்புத கான மழை !

●

டிக்கெட் : ரூ. 3, 2, 1.

இடத்திற்கு முந்துங்கள் ! R. S. ராமானுஜம், செக்ரடரி.

பின்னக் கண்ணனுக்கு நோகாதா?'' என்றாள் கமலி.

கண்ணபிரான் சிறிது வெட்கத்துடன், ''தெரியாத்தனந்தான், கமலி! மன்னித்து விடு! யுத்தத்துக்குப் போகிற அவசரத்தில் மறந்து விட்டேன்!'' என்றான்.

''என்ன, யுத்தத்துக்குப் போகிறாயா?'' என்று கமலி பாய்ந்து வந்து கண்ணனின் கழுத்தைத் தன் இரு கரங்களாலும் சேர்த்துக் கட்டிக் கொண்டாள்.

''ஆமாம், கமலி! ஒற்றர் தலைவன் சத்ருக்னன் மகேந்திர சக்கரவர்த்தியிடமிருந்து ஓலை கொண்டு வந்திருக்கிறான். மாமல்லர் போர்க்களத்துக்குப் போகச் சக்கரவர்த்தி அநுமதி கொடுத்து விட்டார். இன்னும் அரை நாழிகையில் மாமல்லர் கழுக்குன்றத்துக்குக் கிளம்புகிறார், கமலி!......''

''நீயும் கிளம்புகிறாயா, கண்ணா! நிஜமாகவா?''

''இது என்ன கேள்வி, கமலி! மாமல்லர் போனால் நான் அவருடன் போகாமல் எப்படியிருக்க முடியும்?''

''மாமல்லர் சக்கரவர்த்தியின் திருக்குமாரர்; நாளைக்குப் பல்லவ சிம்மாசனத்தில் ஏறப் போகிறவர். அவர் போர்க்களத்துக்குப் போய் யுத்தம் செய்ய வேண்டும். நீ ஏன் போக வேண்டும்? எந்த ராஜா வந்தாலும் எந்த ராஜா போனாலும் நமக்கு என்ன வந்தது, கண்ணா!''

''இது என்ன, கமலி, இப்படிப் பேசுகிறாய்? நேற்று வரை நீ இப்படியெல்லாம் பேசினதே இல்லையே? நாம் பிறந்த நாட்டுக்கு அபாயம் வந்திருக்கும்போது, நம் நாட்டில் அன்னியர்கள் படையெடுத்து வந்திருக்கும்போது, நமக்கென்ன என்று நாம் வீட்டில் இருப்பதா?...''

''நாட்டுக்கு அபாயம், நகரத்துக்கு அபாயம் என்று ஓயாமல் சொல்கிறாயே, கண்ணா! அப்படி என்ன அபாயம் வந்து விட்டது? ஒன்றையும் காணோமே? சக்கரவர்த்திதான் நேரே போய் எட்டு மாதமாய் யுத்த களத்தில் இருக்கிறாரே, போதாதா? நீங்கள் போய் என்ன புரட்டி விடப் போகிறீர்கள்?'' என்று கமலி கேட்டாள்.

''பல்லவ நாட்டுக்கு இது போல்லாத காலம், கமலி! வடக்கேயிருந்து வாதாபி சக்கரவர்த்தி மகா பெரிய சைன்யத்துடன் வந்து கொண்டிருக்கிறான். அந்த சைன்யத்தைத்தான் மகேந்திர பல்லவர் தடுத்து நிறுத்திக் கொண்டிருக்கிறார். இந்தப் பக்கத்தில் கங்கநாட்டு ராஜாவுக்கு அதற்குள் அவசரம் பொத்துக் கொண்டு விட்டது. புலிகேசிக்கு முன்னால் தான் காஞ்சிக்கு வந்து விடவேண்டுமென்று மேற்குத் திக்கிலிருந்து வந்து கொண்டிருக்கிறான். கங்க நாட்டு ராஜாவின் பெயர் என்ன தெரியுமா, கமலி! 'துர்விநீதன்!' — துரியோதனனுடைய மறு அவதாரம் இவன்தான் போலிருக்கிறது. இந்த துர்விநீதனை எதிர்க்கத்தான் மாமல்லர் கிளம்புகிறார், கமலி! நானும் கிளம்புகிறேன். மனப்பூர்வமாக, உற்சாகமாக எனக்கு விடை கொடு!'' என்று கண்ணன் உருக்கமான குரலில் கேட்டான்.

''கண்ணா! நான் என்ன செய்யட்டும்? என் மனதில் ஏனோ உற்சாகமில்லை. என் தங்கை சிவகாமியை நினைக்க நினைக்க மனச் சோர்வு அதிகமாகிறது. அவளுடைய தலைவிதி என்னவோ என்று எண்ண எண்ண, ஏக்கமாயிருக்கிறது.''

''ஆகா! எப்பேர்ப்பட்ட அசடு நான், கமலி! முக்கியமான விஷயத்தைச் சொல்லாமல் விட்டு விட்டேனே? மகேந்திர சக்கரவர்த்தியைப் பற்றி நீ என்ன வெல்லாமோ சந்தேகப்பட்டாயே, கமலி! அதெல்லாம் சுத்தத் தப்பு! சக்கரவர்த்தி என்ன சொல்லி அனுப்பியிருக்கிறார், தெரியுமா? மாமல்லரைப் போர்க்களத்துக்குப் போவதற்கு முன்னால் நேரே ஆயனர் வீட்டுக்குச் சென்று, ஆயனரையும் சிவகாமியையும் உடனே காஞ்சிக் கோட்டைக்கு அனுப்பச் சொல்லியிருக்கிறார். ஒரு வேளை நானே அவர்களை ரதத்தில் ஏற்றிக்கொண்டு வந்து இங்கே விட்டு விட்டுப் போனாலும் போவேன். மகேந்திர பல்லவரைப் பற்றி இப்போது என்ன சொல்கிறாய், கமலி! அவர் நல்லவரா, பொல்லாதவரா?'' என்று கண்ணபிரான் தலை நிமிர்ந்து கர்வத்துடன் கேட்டான்.

''எப்படியாவது எல்லாம் நன்றாக முடியட்டும், கண்ணா! நீயும் போர்க்களத்திலிருந்து க்ஷேமமாய்த் திரும்பி வரவேண்டும்!'' என்று கமலி கூறிய போது, அவளுடைய கண்களிலிருந்து நீரருவி பெருகியது.

அந்த சமயத்தில் தெருவில் விரைவாகக் குதிரை பாய்ந்து வரும் சத்தம் கேட்டது. கண்ணன், கமலி இருவரும் பலகணி வழியாய் வீதியில் பார்த்தார்கள். நாலு கால் பாய்ச்சலில் சென்ற குதிரைமீது ஒருவன் போய்க் கொண்டிருந்தான். அவனுடைய முகம் சட்டென்று ஒரு கணம் கண்ணன் வீட்டுப் பக்கம் திரும்பி மறு கணம் எதிரே நோக்கியது.

அந்தக் கணத்தில் கமலி, "கண்ணா! அவன்தான்! அந்தக் குதிரையில் போகிறவன்தான் அன்றைக்கு வந்து மாமாவுடன் பேசிக் கொண்டிருந்தவன்! அவன் யார், உனக்குத் தெரியுமா?" என்று கேட்டாள்.

"தெரியும், கமலி! அவன்தான் ஒற்றர் தலைவன் சத்ருக்னன். போர்க்களத்திலிருந்து வருகிறான். மகேந்திர சக்கரவர்த்தியிடம் போய் விட்டு வருகிறான். ஏதோ விசேஷச் செய்தி கொண்டு வருகிறான். இதோ போய்த் தெரிந்து கொண்டு வருகிறேன்" என்று கூறி விட்டுக் கண்ணன் வெளியேறினான்.

* * *

ஒரு நாழிகைக்கெல்லாம் வீட்டு வாசலில் கடகடவென்ற சத்தத்துடன் ரதம் வந்து நின்றது. கண்ணபிரான் ரதத்தின் முன் தட்டிலிருந்து குதித்து உள்ளே ஓடி வந்து, ரதத்தின் சத்தம் கேட்டுச் சமையற் கட்டிலிருந்து வந்து கொண்டிருந்த கமலியின் மேல் மோதிக் கொண்டான். மோதிக் கொண்டவன், அவள் கீழே விழுந்து விடாமல் தடுத்துக் கொள்பவனைப்போல் பாசாங்கு செய்து, அவளுடைய முதுகைத் தன் இரு கரங்களாலும் வளைத்துத் தாங்கித் தன்னுடன் சேர்த்து அணைத்துத் தழுவிக் கொண்டான்.

"விடு, கண்ணா, விடு! அதோ அப்பா வருகிறார்!" என்றாள் கமலி.

"அப்பாவும் ஆச்சு, ஆட்டுக் குட்டியும் ஆச்சு!" என்றான் கண்ணன். எனினும், அவனுடைய கைகளின் பிடி தளர்ந்தது; கமலி திமிறிக் கொண்டு விலகினாள்.

கண்ணன் சுற்று முற்றும் பார்த்து விட்டு அப்பாவைக் காணாமல், "பார்த்தாயா? ஏமாற்றி விட்டாயே?" என்றான்.

"அவ்வளவு என்ன உனக்குப் பரபரப்பு?



கேட்டேன். இந்த விஷயமெல்லாம் அவர்கள் பேசிக் கொண்டிருந்தார்கள். அதோடு.........."

"அதோடு என்ன, கமலி!"

"இன்னொரு முக்கிய விஷயமும் பேசினார்கள்."

"சொல்லு!"

"சிவகாமிக்கு மாமல்லர் ஓலை எழுதுவதும், அதை நீ கொண்டு போய்க் கொடுத்து வருவதும் மாமாவுக்குத் தெரிந்திருக்கிறது. கண்ணா! அதை அந்தப் புது மனிதரிடம் மாமா சொல்லிக் கொண்டிருந்தார்!"

"ஆஹா! அந்தக் கிழக் கோட்டான், அந்த இராவண சந்நியாசி, அந்த ருத்திராட்சப் பூனை அப்படியா செய்து கொண்டிருக்கிறது?" என்றான் கண்ணபிரான். தன்னுடைய தந்தையைப் பற்றித்தான் இவ்வளவு மரியாதையான வார்த்தைகளைச் சொன்னான்!

அதைப் பொறுக்காமல் கமலி அவனுடைய வாயைப் பொத்தினாள்.

"அந்தப் புது மனிதன் யார் தெரியுமா, கமலி?" என்று கண்ணன் கேட்டான்.

"தெரியாது; அன்றைக்கு முன் நான் பார்த்ததே இல்லை" என்றாள் கமலி.



"இதை தெரிந்து கொள்ள அபாரமான அறிவு வேண்டியதில்லை. குதிரைக்கு இருக்கும் அறிவு கூடப் போதுமே!"

"அப்படியானால் அந்த அறிவைச் செலுத்தி இன்னும் கொஞ்சம் யோசித்துப் பார்! ஆயனச் சிற்பியின் மகள் வயிற்றிலே பிறக்கும் பிள்ளையைப் பல்லவ சிம்மாசனத்தில் ஏற்றி வைக்க முடியுமா?"



"ஏன் முடியாது? அதிலே என்ன கஷ்டம்? நமது அரண்மனைச் சிம்மாசனம் அப்படி ஒன்றும் அதிக உயரமில்லையே? நான் ஒருவனாகவே தூக்கி உட்கார்த்தி வைத்து விடுவேனே?"

"நீ விளையாடுகிறாய், கண்ணா! ஆயனச் சிற்பியின் பேரன் பல்லவ சிம்மாசனத்தில் ஏறுவதற்கு நாட்டார்-நகரத்தார் சம்மதிப்பார்களா? ஆட்சேபிக்க மாட்டார்களா?"

"நாட்டார் - நகரத்தாரைச் சம்மதிக்கச் செய்வது என் பொறுப்பு. கமலி! நீ பார்த்துக் கொண்டே இரு! இரண்டு கையிலும் இரண்டு குதிரைச் சாட்டையை எடுத்துக்கொண்டு போய் நாட்டார் — நகரத்தாரின் முதுகில் வெளு வெளு என்று வெளுத்துச் சம்மதிக்கும்படி செய்கிறேன். இல்லையா, பார்!"

"நாட்டார் — நகரத்தார் ஆட்சேபிப்பது மட்டுமல்ல, கண்ணா! மகேந்திர பல்லவரின் சித்தப்பா பேரன் ஒருவன் வேங்கிபுரத்தில் வளர்ந்து கொண்டிருக்கிறானே, உனக்குத் தெரியாதா? அந்த ஆதித்த வர்மன் பல்லவ சிம்மாசனத்துக்குப் போட்டிக்கு வரலாமல்லவா?"

"வரமாட்டான், கமலி, வரமாட்டான். வேங்கிபுரம் போய்விட்டது. வேங்கியோடு ஆதித்த வர்மனும் நாசமாய்ப் போய்விட்டான். இனிமேல் வரமாட்டான்!"

"இன்னொரு காரணமும் இருக்கிறது, கண்ணா! நமது குமார சக்கரவர்த்தி மற்ற தேசத்து இராஜ குமாரர்களைப் போல் அல்லவே! ஆசைக்குச் சிவகாமியைக் கலியாணம் செய்து கொண்டு பட்டத்துக்கு இன்னொரு இராஜ குமாரியைக் கலியாணம் செய்து கொள்ள மாமல்லர் இணங்க மாட்டார் அல்லவா? அவருடைய சுபாவம் மகேந்திர சக்கரவர்த்திக்கும் நன்றாய்த் தெரியும். ஏக பத்தினி விரதங் கொண்ட இராமனைப் போன்றவர் அல்லவா நமது மாமல்லர்?"

"ஆமாம், கமலி! சந்தேகமே இல்லை. மாமல்லர் அது விஷயத்தில் இராமனையும் கண்ணனையும் போன்றவர்!......"

"என்ன? இராமனையும் கண்ணனையும் போன்றவரா?"

"கோகுலத்துக் கண்ணனை நான் சொல்லவில்லை. அந்த அயோத்தி ராமனையும் இந்தக் காஞ்சிக் கண்ணனையும் போன்றவர்!" என்று கண்ணபிரான் தன்னைச் சுட்டிக் காட்டிக் கொள்ளவே, கமலிக்குச் சிரிப்பு பிறிட்டுக் கொண்டு வந்தது.

சற்றுப் பொறுத்துக் கண்ணபிரான், "கமலி! எனக்கு ஓரே அதிசயமாயிருக்கிறது! இவ்வளவு மர்மமான இராஜரீக விவகாரங்கள் எல்லாம் உனக்கு எப்படித் தெரிந்தது?" என்று கேட்டான்.

"எல்லாம் எனக்காகத் தெரிந்துவிடவில்லை, கண்ணா! நானாக யோசித்ததில் கொஞ்சம் தெரிந்தது; ஒட்டுக் கேட்டதில் கொஞ்சம் தெரிந்தது."

"என்னத்தை ஒட்டுக் கேட்டாய்!"

"நாலைந்து நாளைக்கு முன்னால் நீ வீட்டில் இல்லாதபோது இங்கே ஒரு மனிதர் வந்திருந்தார், கண்ணா! அவரும் மாமாவும் வெகு நேரம் இரகசியம் பேசிக் கொண்டிருந்தார்கள். சிவகாமியின் பெயர் காதில் விழவே நான் சுவர் ஓரமாய் நின்று ஒட்டுக்

மானமாயிற்றே, கமலி! அவர் எதற்காகத் தடை செய்ய வேண்டும்?"

"அசட்டுக் கண்ணா! ஆயனச் சிற்பியின் மகள் மேல் அபிமானமாயிருப்பது ஒரு விஷயம். அவளைக் குமார சக்கரவர்த்திக்குக் கல்யாணம் செய்து வைப்பது வேறு விஷயம். என் தங்கச்சி வயிற்றில் நாளைக்குப் பிள்ளைக் குழந்தை பிறந்தால், என்னவெல்லாம் சிக்கல் ஏற்படும் என்று யோசித்துப் பார்!......இந்த யோசனையெல்லாம் சின்னக் கண்ணனால் எனக்கு வந்தது என்று சொன்னேனே, அதன் காரணம் இப்போது விளங்குகிறதா?"

"விளங்கவேயில்லை, கமலி!" என்றான் கண்ணன்.

"உனக்கு ஒன்றுமே விளங்காது, கண்ணா! குதிரைகளோடு பழகிப் பழகிக் குதிரைகளுக்கு இருக்கிற அறிவுதான் உனக்கும் இருக்கிறது..."

"இதோ பார், கமலி! நீ என்னைப் பற்றி என்ன வேணுமானாலும் சொல்லு; கேட்டுக் கொள்கிறேன். என் குதிரைகளைப் பற்றி மட்டும் ஒன்றும் சொல்லாதே! குதிரைகளுக்கு உள்ள அறிவு மனிதர்களுக்கு இருந்தால் இந்த உலகம் எவ்வளவோ க்ஷேமமாயிருக்கும்!" என்றான் கண்ணன்.

அத்தியாயம் 16

இராமனும் கண்ணனும்

குதிரைகளைப் பற்றிக் கமலி கேவலமாகப் பேசியதில் கண்ணனுக்கு ரொம்பவும் கோபம் என்று தெரிந்தது. சற்று நேரம் அவன் பேசாமல் வேறு பக்கம் பார்த்துக் கொண்டிருந்தான். கமலியும் ஏதோ யோசனையில் ஆழ்ந்திருந்தாள்.

எனவே, கண்ணன் தன்னைத்தானே சமாதானப் படுத்திக் கொண்டு பேச வேண்டியதாயிற்று.

"நீ என்னதான் சொல்கிறாய், கமலி! மாமல்லர் உன் தங்கையைக் கலியாணம் செய்து கொள்வதற்குச் சக்கரவர்த்தி ஏன் குறுக்கே நிற்க வேண்டும்?" என்று கேட்டான்.

"தானாகத் தெரியாதவர்களுக்குச் சொல்லியும் தெரியப் போவதில்லை" என்றாள் கமலி.

"மாமல்லர் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறார், தெரியுமா? அப்பாவிடம் சமாசாரத்தைச் சொல்ல வேண்டியதுதான். அவர் சம்மதம் கொடுத்து விடுவார் என்று எண்ணிக் கொண்டிருக்கிறார். இந்த யுத்தம் முடியட்டும் என்றுதான் காத்துக் கொண்டிருக்கிறார். இராஜ்யத்திலே பகைவர்கள் படை எடுத்து வந்து பெரிய யுத்தம் நடந்து கொண்டிருக்கும்போது அப்பாவிடம் கலியாணத்தைப் பற்றிப் பேச அவருக்குச் சங்கோசமாயிருக்கிறதாம், கமலி! மாமல்லருக்கு அப்பாவிடம் அளவில்லாத பக்தி என்பது உனக்குத் தெரியுமோ, இல்லையோ?"

"தெரியும், தெரியும். பிள்ளைக்கு அப்பாவிடம் அளவில்லாத பக்தி. அப்பாவுக்குப் பிள்ளையிடம் அபாரமான வாஞ்சை. அதனால்தான் மாமல்லரின் மனத்தை மாற்றுவதற்கு இப்படியெல்லாம் சக்கரவர்த்தி சூழ்ச்சி செய்கிறார்."

"அது மாத்திரம் முடியாத காரியம், கமலி! சக்கரவர்த்தியினால் கூட மாமல்லரின் மனதை மாற்ற முடியாது. அது எனக்குத் தெரியும். ஆனால் சக்கரவர்த்தி ஏன் இம்மாதிரி முயற்சி செய்ய வேண்டும்? அதுதான் தெரியவில்லை."

"கண்ணா! இத்தனை நாளாய் நீ அரண்மனைச் சேவகம் செய்கிறாய்; ஆனாலும் அரண்மனை சமாசாரம் ஒன்றும் உனக்குத் தெரியவில்லை. இராஜாக்களும் இராஜ குமாரர்களும் கலியாணம் செய்து கொள்வதென்றால் நீயும் நானும் கலியாணம் செய்து கொள்வது போலவா? மாமல்லர் கல்யாணம் செய்து கொண்டால், அவருக்குப் பிறக்கும் பிள்ளைக் குழந்தை ஒரு நாள் இந்தக் காஞ்சி சிம்மாசனத்தில் ஏறவேண்டியிருக்குமல்லவா?"

யோசித்துப் பார்த்தால், இதெல்லாம் நல்லதுக்கில்லை யென்று தோன்றுகிறது. கண்ணா! நான் சிவகாமிக்கு உடன்பாடாகப் பேசி அவள் ஆசையை வளர்த்ததும் தப்பு; நீ மாமல்லரின் ஓலைகளை அவளுக்குக் கொண்டுபோய்க் கொடுத்துக் கொண்டிருந்ததும் தப்பு!............"

"கமலி, கமலி, இப்பேர்ப்பட்ட ஞானோதயம் உனக்கு எப்படி உண்டாயிற்று? எப்போது உண்டாயிற்று?" என்று கண்ணன் பரிகாசக் குரலில் கேட்டான்.

"இது பரிகாசப் பேச்சு அல்ல, கண்ணா! நினைத்துப் பார்க்கப் பார்க்க எனக்கு எப்படியோ இருக்கிறது. துக்கம், துக்கமாய் வருகிறது. இந்த ஞானோதயம் எனக்கு எப்போது ஏற்பட்டது என்று கேட்டாயல்லவா? சொல்லட்டுமா? கொஞ்சமாவது வெட்கமில்லாமல் நீ 'சின்னக் கண்ணன்' 'சின்னக் கண்ணன்' என்று சொல்கிறாயே, அவன் என் வயிற்றில் வந்த பிறகுதான்!"

"இதென்ன கூத்து, கமலி! உன் தங்கை சிவகாமி மாமல்லரைக் கல்யாணம் செய்து கொள்வதற்கும் இனிமேல் பிறக்கப் போகிற சின்னக் கண்ணனுக்கும் என்ன சம்பந்தம்?" என்று கூறிக் கண்ணபிரான் கல கலவென்று சிரித்தான்.

"சிரித்தாகி விட்டதா, கண்ணா!"

"ஆகிவிட்டது!"

"அப்படியானால், நான் கேட்பதற்கு மறுமொழி சொல்லு! சக்கரவர்த்தி மாமல்லரைக் காஞ்சிக் கோட்டைக்கு வெளியே போகக்கூடாதென்று எதற்காகக் கட்டளை யிட்டு விட்டுப் போனார்?"

"அதிலே என்ன அதிசயம் கமலி! அதிசயமும் இல்லை, இரகசியமும் இல்லை. மகேந்திர சக்கரவர்த்திக்கு மாமல்லர் ஏக புத்திரர் அல்லவா? யுத்த களத்திலே சக்ரவர்த்திக்கு ஏதாவது நேர்ந்து விட்டால், அடுத்தபடி பட்டத்துக்கு வர வேண்டியவராவது பத்திரமா யிருக்க வேண்டுமே என்றுதான். மந்திர மண்டலத்தாருக்கு அவ்விதமே சக்கரவர்த்தி கட்டளை யிட்டு விட்டுப் போயிருக்கிறார் என்பது பிரசித்தமாயிற்றே..."

"பத்திரமா யிருக்க வேண்டுமென்றால், அதற்காகக் கோட்டைக்குள்ளேயே ஒளிந்து கொண்டிருக்க வேண்டுமா, கண்ணா! மாமல்லர் என்ன அவ்வளவு பயங்கொள்ளியா? கையினால் ஆகாதவரா? அல்லது அறியாக் குழந்தையா?"

"என் புத்திக்கு எட்டினது அவ்வளவுதான்! உண்மையான காரணம் உனக்குத் தெரிந்திருந்தால் நீதான் சொல்லேன், கமலி!"

"சொல்லட்டுமா? சிவகாமியின் மேல் மாமல்லருக்கு ஏற்பட்டிருக்கும் பிரியம் சக்கரவர்த்திக்கு எப்படியோ தெரிந்து விட்டது. அதை வளர விடக்கூடாது என்பது அவருடைய எண்ணம். கோட்டைக்கு வெளியில் போனால் எப்படியும் மாமல்லர் சிவகாமியைப் பார்க்கப் போவார் என்றுதான் அவரைக் கோட்டைக்குள்ளேயே இருக்கும்படி கட்டளை யிட்டு விட்டுப் போனார்!"

"அப்படியானால் உங்கள் மகேந்திர சக்கரவர்த்திக்கு எங்கள் மாமல்லரைப் பற்றித் தெரியாதென்றுதான் அர்த்தம். அவ்வளவு சுலபமாக மாமல்லரின் மனதை மாற்றிவிட முடியுமா, கமலி!"

"மகேந்திர சக்கரவர்த்தியின் தந்திர மந்திர சாமர்த்தியங்கள் உனக்குத் தெரியாது, கண்ணா! அவர் ஒரு காரியத்தை நினைத்து விட்டால், எப்படியாவது அதை நிறைவேற்றியே தீர்வார் என்று உலகத்துக்கெல்லாம் தெரியுமே?"



"ஆனால் சக்கரவர்த்திக்கும் உன் தங்கையின் மேல் ரொம்ப அபி

ரும் படுகிற கஷ்டத்தை நினைத்தால், ஸ்திரீகளைக் கடவுள் எதற்காகப் படைக்கிறார் என்று தோன்றுகிறது."

"உண்மைதான்! ஆண் பிள்ளைகளைப் போன்ற நிர்மூடர்கள் இருக்கிற உலகத்தில் பெண்களைப் பகவான் படைக்கக் கூடாதுதான். உங்களால் நாங்கள் படுகிற கஷ்டம் எவ்வளவு என்பதை உணர்ந்து கொள்ளக்கூட உங்களுக்குச் சக்தி இல்லை."

"இது என்ன அபாண்டம், கமலி! உங்களை நாங்கள் என்ன கஷ்டப் படுத்துகிறோம்?"

"சற்று முன்னால் என்ன சொன்னாய், கண்ணா! 'யுத்தத்துக்குப் போய் நான் செத்துப் போகப் போகிறேன், நீ வீட்டிலே சுகமாயிரு' என்று சொன்னாயே, அது என்னைக் கஷ்டப் படுத்துகிறதல்லவா? தங்கச்சி சிவகாமியை எட்டு மாத காலமாக மாமல்லர் போய்ப் பார்க்காமலிருக்கிறாரே, கண்ணா, அது அவளைக் கஷ்டப் படுத்துகிறதாகாதா? ஒரு நாளைக்கு உன்னைப் பார்க்காவிட்டால் எனக்கு என்னமோ போலிருக்கிறதே!"

"உன் தங்கச்சிக்கு மாமல்லரைப் பார்ப்பதில் அப்படி ஒன்றும் ஆசை பொங்கிக் கொண்டிருப்பதாகத் தெரியவில்லையே, கமலி!"

"உனக்கு எப்படித் தெரியும்! பெண்களின் கஷ்டம் புருஷர்களுக்குத் தெரியாது என்றுதான் நான் சொன்னேனே?"

"காஞ்சிக்கு வந்து விடும்படி சக்கரவர்த்தி சொல்லி அனுப்பி ஒரு வாரம் ஆகியும் இன்னும் வரவில்லையே? மாமல்லரைப் பார்க்கும் ஆசையிருந்தால் வந்திருக்க மாட்டாளா?"

"கண்ணா! நீ தெரியாமல் பேசுகிறாய். பெண்களுக்கு மனத்தில் எவ்வளவு ஆசையிருந்தால்தான் என்ன? அதை வெளிக் காட்டிக் கொள்ள முடியுமா? என் தங்கை காஞ்சிக்கு வரவேண்டுமென்று இஷ்டப்பட்டால் போதுமா? அவள் அப்பா சம்மதிக்க வேண்டாமா? மாமல்லர் ஆண் பிள்ளை; சக்கரவர்த்தியின் குமாரர். அவராலேயே தம் இஷ்டப்படி ஒரு காரியம் செய்ய முடியவில்லையே? அப்படியிருக்கும்போது, பேதையாகிய சிவகாமி என்ன செய்வாள்! அப்படியே சிவகாமி அப்பாவைத் தொந்தரவு படுத்தி அழைத்துக் கொண்டு இங்கே வருகிறாள் என்று வைத்துக்கொள்; மாமல்லர் அவளை எப்படி எங்கே பார்ப்பார்? கண்ணா! காட்டின் மத்தியிலுள்ள தாமரைக் குளக்கரையில் மாமல்லர் சிவகாமியின் காதலர்; அங்கே அவர்கள் இருவரும் சமமானவர்கள். காஞ்சியில் அப்படியில்லையே? இங்கே மாமல்லர் சக்கரவர்த்தியின் குமாரர்; சிவகாமி ஏழை ஆயனச் சிற்பியின் மகள் தானே? இங்கே சிவகாமி வந்துதான் என்ன பிரயோஜனம், கண்ணா?"

"உன்னை என்னமோ என்று நினைத்தேன், கமலி! நீ மகா புத்திசாலி! எதையும் ரொம்ப நன்றாய் யோசித்துச் சொல்கிறாய்!"

"ஆமாம், கண்ணா! கொஞ்ச நாளாக நான் இதைப் பற்றியேதான் யோசித்துக் கொண்டிருக்கிறேன். யோசிக்க, யோசிக்க, வருத்தமாயிருக்கிறது. என் தங்கச்சி சிவகாமி எதற்காக மாமல்லர்மேல் காதல் கொண்டாள் என்று இருக்கிறது. இந்தத் தகாத காதலினால் சிவகாமிக்கு நன்மை உண்டாகுமா என்று பயமாயிருக்கிறது. கிளி கிளியுடனும், குயில் குயிலுடனும் கூடி வாழ வேண்டும். மரக் கிளையில் வாழும் பச்சைக் கிளி உச்சி வானத்தில் பறக்கும் கருடனுக்கு மாலையிட ஆசைப்பட்டால் அதனால் கிளிக்குச் சுகம் உண்டா, கண்ணா?"

"இதென்ன கமலி, இப்படிப் பேசுகிறாய்? கொஞ்ச நாளைக்கு முன்னெல்லாம் நீதானே உன் தங்கைக்கு இணை மூன்று உலகத்திலும் இல்லை என்றும், மன்னாதி மன்னர்களெல்லாம் அவள் காலில் வந்து விழுவார்களென்றும் சொல்லிக் கொண்டிருந்தாய்? சிவகாமியின் காதலைப் பெற்றது மாமல்லரின் அதிர்ஷ்டம் என்று கூடச் சொன்னாயே?"

"ஆமாம், கண்ணா! என் தங்கை மேலுள்ள ஆசையினால் அப்படியெல்லாம் சொன்னேன். ஆசையிருக்குமிடத்தில் அறிவு மழுங்கி விடுமல்லவா? அப்புறம் ஆர அமர



அத்தியாயம் 15

கிளியும் கருடனும்

"கமலி!"

"கண்ணா!"

"நான் செத்துப் போகலாமென்று பார்க்கிறேன்!"

"யார் குறுக்கே விழுந்து மறிக்கிறார்கள்?"

"சின்னக் கண்ணன் தான்!"

"உனக்கு வெட்கமாயில்லையா?"

"ஆமாம், கமலி! வெட்கமாய்த்தானிருக்கிறது!"

"எதற்கு?"

"நாளைக்குச் சின்னக் கண்ணன் பிறந்து வளர்ந்து பெரியவனாகும்போது, என்னைப் பற்றி என்ன நினைப்பான்? அவன் அம்மா வயிற்றில் இருந்தபோது நாட்டில் பிரமாதமான யுத்தம் நடந்து கொண்டிருந்தது. அவனுடைய அப்பன் அப்போது குண்டுச் சட்டியிலே குதிரை ஓட்டிக் கொண்டிருந்தான் என்று கேள்விப்பட்டால் என்னைப் பற்றி எவ்வளவு கேவலமாக எண்ணுவான்?"

"நீ யுத்தத்துக்குப் போவதை யார் வேண்டாம் என்று சொன்னார்கள்?"

"மாமல்லருக்கு ஏன் நான் ரத சாரதியானேன் என்று இருக்கிறது. அவராலேதானே நானும் இந்தக் கோட்டைக்குள்ளேயே அடைந்து கிடக்க வேண்டியிருக்கிறது?"

"இல்லாமற் போனால் நீ வெட்டி முறித்து விடுவாயாக்கும்!"

"நீ வேணுமானால் பாரேன்! எப்படியும் ஒரு நாளைக்கு மாமல்லர் யுத்தத்துக்குப் போகாமல் இருக்க மாட்டார். அப்போது நானும் போகிறேனா, இல்லையா, பார்! கமலி! ஒரு வேளை நான் போர்க்களத்தில் வீர சொர்க்கம் அடைந்தால், என்னைப் பற்றிச் சின்னக் கண்ணனுக்குச் சொல்லுவாயல்லவா?"

"ஆகட்டும், ஆகட்டும்! வீட்டுக்குள்ளே உட்கார்ந்து வீரம் பேசுவதிலே உனக்கு இணை இந்தப் பல்லவ ராஜ்யத்திலேயே கிடையாது என்று கண்ணம்மாளிடம் சொல்கிறேன்."

"என்ன சொன்னாய்? கண்ணம்மாளா?"

"ஆமாம்; சின்னக் கண்ணனாய்த்தானிருக்கவேண்டுமென்று அவ்வளவு என்ன நிச்சயம்? கண்ணம்மாளாய்த்தானிருக்கட்டுமே?"

"போதும், போதும்! பூலோகத்தில் பெண்களே பிறக்கக் கூடாது என்று நான் சொல்வேன். உன்னாலே நானும், உன் தங்கையாலே மாமல்ல

பாதுகாப்புள்ளதும் ஊக்கமூட்டத்தக்கதுமான நற்கால சேமிப்பு

இந்திய அரசாங்கப் பரிசுப் பத்திரங்கள்

பரிசுப் பத்திரங்கள் பூரணப் பாதுகாப்புள்ளவை. அதன் சொந்தக்காரர்கள் பெரும் பரிசுகள் பெறுவதற்கும் சந்தர்ப்பங்களுண்டு. ரூபா. 100, முதல் ரூபா. 5,000 வரை பரிசு வரச்செய்யலாம். அவை ஆரம்பமானதிலிருந்து வருஷத்திற்கு இரண்டு முறை பரிசு அடையக்கூடிய சந்தர்ப்பங்களுண்டு. அதற்கிடையில் போட்டமுதலின் மதிப்பு குறையாதிருக்கும். 1949-ம் வருஷம் ஜனவரி மாதம் 15-ம் தேதிக்குப் பிறகு பத்திரப்பணம் திருப்பிக் கொடுக்கப்படும்.

10 ரூபாய் அல்லது 100 ரூபாய் பத்திரத்தை நீங்கள் வாங்கலாம். இவ்வளவுக்குத்தான் பத்திரங்கள் வாங்கலாமென்ற நியதியில்லை.

ஜனவரி 15-ம் தேதியும் ஜூலை 15-ம் தேதியும் பரிசுகள் சீட்டுக்குலுக்கி எடுக்கப்படுகின்றன. 1945-ம் வருஷம் ஜனவரி 15-ம் தேதி பரிசுச் சீட்டுகள் குலுக்கப்படும்போது 1944-ம் வருஷம் டிசம்பர் மாதம் 17-ம் தேதிக்கு முன்னதாக வாங்கப்பட்ட பத்திரங்கள் சேர்த்துக்கொள்ளப்படும்.

பரிசுகளாவன

★

எல்லாப் பரிசுத் தொகைகளுக்கும் வருமானவரி, சூபர் வரி, அதிக லாபவரி, [illegible] வரி, ஆகியவை கிடையாது

★

ஒரு லட்சம் ரூ. 100 பத்திரத் தொகுதி

1 பரிசு	ரூ. 50,000 வீதம்	...	ரூ. 50,000
2 பரிசுகள்	ரூ. 20,000 ,,	...	ரூ. 40,000
2 ,,	ரூ. 5,000 ,,	...	ரூ. 10,000
ஒரு லட்சம் பத்திரங்கள் கொண்ட ஒரு தொகுதிக்கு அரை வருஷத்திற்கு கொடுக்கும் மொத்தப் பரிசுத் தொகை		...	ரூ. 1,00,000

முழுவதும் விற்பனையான ரூ. 10 கொண்டதுள்ளவொரு தொகுதிக்கும்

1 பரிசு	ரூ. 2,500 வீதம்	...	ரூ. 2,500
2 பரிசுகள்	ரூ. 1,250 ,,	...	ரூ. 2,500
5 பரிசுகள்	ரூ. 500 ,,	...	ரூ. 2,500
10 பரிசுகள்	ரூ. 250 ,,	...	ரூ. 2,500
ஒரு லட்சம் பத்திரங்கள் கொண்ட ஒரு தொகுதிக்கும் ஒரு அரை வருஷத்தில் கொடுக்கப்படும் பரிசுத்தொகை		...	ரூ. 10,000


கிடைக்குமிடங்கள் :— இந்திய ரிசர்வ் பாங்கி, இந்திய இம்பீரியல் பாங்கி, இந்திய அரசாங்க [illegible] செய்யும் பிற [illegible] இந்திய [illegible] சம்பந்தமான அரசாங்க [illegible] எல்லா இந்திய [illegible] கிடைக்கும்.

மேற்கண்ட இடங்களில் பரிசுத் தொகைகள் வழங்கப்படும். ஆகஸ்டு மாதம் 15-ம் தேதி பிப்ரவரி மாதம் 15-ம் தேதி [illegible] பிறகு [illegible] பரிசுத் தொகைகள் வழங்கப்படும். 1949-ம் வருஷம் ஜனவரி மாதம் 15-ம் தேதி குலுக்கப்படும் பரிசு [illegible] பத்திரமும் சேர்த்துக் கொள்ளப்படும். 10 ரூபாய்த் தொகுதிக்குக் கொடுக்கப்படும் பரிசுத் தொகைகள் [illegible] கொடுக்கப்படும். 100 ரூபாய்த் தொகுதியில் பாதி [illegible] பாதி பாதுகாப்பு பத்திரமாகவும், அரசாங்கத்தின் பத்திரங்களாகவும் பரிசுத் தொகைகள் கொடுக்கப்படும். பரிசுகள் குலுக்கி எடுக்கப்பட்ட பிறகு அடுத்த வரும் ஆகஸ்டு 15-ம் தேதி பிப்ரவரி 15-ம் தேதிக்குள் [illegible] பத்திரங்களின் [illegible] பத்திரங்களின் எண்கள் பிரசுரிக்கப்படும்.

இந்திய அரசாங்க நிதி இலாகா வெளியிட்டது.


AAA [illegible]

உங்களுடைய கண்கள் விரைவில் களைப்படைகின்றனவா?



உங்கள் கண்கள் விரைவில் களைப் படைந்தாலும், நீர் பெருக் கெடுத்தாலும், சிவந்தாலும், இருண் டாலும் — ஒவ்வொரு காலும் ஐகுல் சிகிச்சை உங்களுக்குத் தேவை. நீண்டகால பரிசோதனை யால் கண்டு பிடிக்கப்பட்ட ஐகுல் உங்களது கண்களுக்கு இணையில்லாதது. வைத்திய முறைப்படி அதிலடங்கிய மருந் துச் சேர்க்கை உங்கள் களைப் புற்ற கண்களுக்கு விரைவாக வும், ஜாக்கிரதையாகவும், வலி யில்லாமலும் சுகத்தை அளிக்கின் றது. காலை, மாலை, நித்திரைக்கு முன், இரண்டு சொட்டுகள் ஐகுல் விட்டுக்கொண்டால் உங் களது கண் பூரண ஆரோக்கியத் துடனிருக்கும். மூக்குக் கண்ணாடி உபயோகிப்பதினின்றும் நீங்கள் விடுதலை பெறலாம்.

ஐகுல் சிறந்த தேர்ச்சிபெற்ற கண் வைத்தியர்களால் பரிசோ திக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது. இன்றே ஒரு பாட்டில் வாங்குங் கள். பாட்டில் ஒன்றின் விலை ரூ. 3. தபால் செலவு, பாக்கிங் செலவு அணா 12. ப்ரத்தியேகம்.



Eykul

EYE DROPS

பிரிட்டிஷ் டிரேடிங்கோ.
டிபார்ட்மெண்ட் E. 7.

ஸோசென்ஸ் பார்மஸூடிகல் வொர்க்ஸ் & மான்யுபாக்சரர்ஸ், தாமஸ் குக் & ஸன்ஸ் பில்டிங், 327, ஹார்ன்பி ரோடு, பம்பாய்.

அன்னை கஸ்தூரி பா

ஞாபகார்த்த நிதிக்காக

ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி

இசைக் கச்சேரி

டவர் டாக்கீஸ் — தஞ்சாவூர்

ஞாயிறு 24-9-44 மாலை 5-15 மணிக்கு

தஞ்சாவூர் ஜில்லாவாசிகளும் பக்கத்து ஜில்லாக்களி லுள்ளவர்களும் கச்சேரிக்கு விஜயம் செய்து அன்னை கஸ்தூரிபாயின் ஞாபகார்த்த நிதிக்குத் தாராளமாய்க் கைங்கர்யம் செய்யக் — கேட்டுக் கொள்ளுகிறோம். —

டிக்கட் விரங்கள்: ரூ. 25, ரூ. 10, ரூ. 5, ரூ. 2

கச்சேரிக்கு ரூ. 100. கன்கொடை அளிப்பவர்களுக்குத் தனி இடம் ரிஸர்வ் செய்யப்பட்டிருக்கிறது.

கீழ்க்கண்ட இடங்களில் டிக்கெட்டுகள் கிடைக்கும்:

தஞ்சாவூர்

1. டவர் டாக்கீஸ்.
2. ஆனந்தா லாட்ஜ்.
3. டி. கே. சுப்ரமணியம், 'கல்கி' ஏஜண்டு.

கும்பகோணம்

1. வி. ராமசாமி முதலியார், B. A., வைஸ்-சேர்மன், முனிசிபல் கௌன்ஸில்.
2. டி. எஸ். ஆர். & கோ.
3. ஸ்ரீ. எஸ். ஆராவமுதம், 'கல்கி' ஏஜண்டு.

மாயவரம்

1. வி. சாமி ஐயங்கார், பட்டமங்கலம் தெரு.
2. வி. கனகசபை செட்டியார், சேர்மன், முனிசிபல் கௌன்ஸில்.
3. ஏ. வி. வெங்கடராமன், 'கல்கி' ஏஜண்டு.

நாகப்பட்டணம்

1. ஏ. என். பி. திருவம்பலம் செட்டியார், சேர்மன், முனிசிபல் கௌன்ஸில்.
2. மெஸர்ஸ் ராமன் & கம்பெனி, 'கல்கி' ஏஜண்டுகள்.

திருவாரூர்

1. ஸ்ரீ. துரைசாமி செட்டியார், முனிசிபல் கௌன்ஸிலர், விஜயபுரம்.
2. மெஸர்ஸ் ஏ. என். ரத்னம் & கோ., 'கல்கி' ஏஜண்டுகள்.

மன்னார்குடி

1. கே. எஸ். சாம்பசிவ ஐயர், குன்னியூர் ஹவுஸ்
2. என். பழனிவேலு பிள்ளை, 'கல்கி' ஏஜண்டு.

மைக், ஒலிபெருக்கி ஏற்பாடுகள்:

திருச்சி ரேடியோ சேல்ஸ் & சர்வீஸ்

வான சஞ்சாரம்

"இசைத் தேனீ"

சென்ற மாதம் 30ல சென்னை ரேடியோ நிலையத்தில் லக்ஷ்மியும் சரஸ்வதியும் பாடியது ஒருவருக் கொருவர் பக்க வாத்தியம் வாசித்தது போல் அழகாயிருந்தது. நயமான குரல்; இழைவும் பிடிகளும் சௌக்க நடையும் கொண்டது இவர்கள் வழி. குறிப்பாய் இவர்கள் பாடிய ஆனந்த பைரவி ராகம் பூரண ஸ்வரூபத்தை விளக்கும் பெரிய வளைவு குழைவுகளுடன் காணப்பட்டது. 'எந்துட நிலசிதே' என்ற உருப்படி ஒழுங்கும் அழுத்தமும் சேர்ந்த சங்கதிகளோடு கச்சிதமாயிருந்தது.

31ல காலையிலும் மாலையிலும், இனிமையும் கனிப்பும் கொண்ட ஒருஸ்திரீயின் குரல் கேட்டது. அரிய சாதகத்தினால் ஏற்படும் பிருகவும் பாணியும் அவரது பாட்டில் காணப்பட்டன. கரஹரப்பிரியா, அடாணா, பைரவி முதலிய ராகங்கள் சரளமாய் வெளிவந்தன. 'இந்த வரம் தருவாய்' 'நானே நல்ல நாள்' என்ற உருப்படிகள் பலே பேஷ்! ஸ்ரீமதி ருக்சம்மாளுக்கு அந்த நாள் நல்ல நாள்தான்!

அன்றிரவு திருச்சியில் தஞ்சை லக்ஷ்மி நாராயணன் கச்சேரி எதிர்பார்த்ததற்கு மேலாகவே இருந்தது. கல்யாணி, சாவேரி, காம்போதி, தன்யாசி, வாசஸ்பதி என்று ஒரே ராகக் களஞ்சியமாக்கி விட்டார். எல்லாவற்றிலும் சாவேரியே சிறப்பாய் விளங்கியது. இவரது சாரீரமும் பாணியும் எல்லாருக்கும் தெரிந்தவை. நிரவல்களும் ஸ்வரப்ரஸ்தாரங்களும் அழகு கற்பனைகளாய் இலங்கின. முன்னெல்லாம் எல்லா ஸ்தாயிகளிலும் ஒரே மாதிரியாய்த் தொண்டையைக் கொடுத்து வந்தார். இப்போது படித்துக்கொண்டு விட்டார். மேல் ஸ்தாயி சஞ்சாரங்களில் கொஞ்சம் அடக்கி அழகு படுத்திக் காட்டினார்.

செப்டம்பர் மாதம் 1ல, திருச்சியில் தஞ்சை பாலகிருஷ்ண பிள்ளையின் கச்சேரி. இவருக்குச் சற்றுப் பருத்த சாரீரம்தான். ஆனால் சமத்காரமாய் வேண்டியபடி அடக்கி யடக்கிப் பாடினார். ராகங்களும் உருப்படிகளும் விருவிருப்பாக இருந்தன. கச்சேரியைக் காபியுடன் ஆரம்பித்து பேகடா, ஜயந்தஸேனா, சங்கராபரணம் முதலிய ராகங்களையும் அவற்றின் உருப்படிகளையும் ஒரு கை பார்த்தார். தோடி, பந்துவராளி இவைகளோடல்லாமல் ஒரு ராகமாலிகையையும் வழங்கினார். 'தனக்குத்தானே' என்று வரும் உருப்படியின் நிரவலைக் கொட்டி யளந்தார்.

இளம் பிடில் வாத்தியக்காரர்களில் ஆர். என். கோபாலகிருஷ்ணன் சாதுர்யசாலி. 3ல சென்னையில் கல்யாணியை அலாதியாய் வாசித்தார். இழைவும் கமகப் பிடிகளும் ஏராளம். ஜகன்மோஹினி ராகம் மோஹிக்கத்தக்கதாகவே யிருந்தது.

அன்று திருச்சியிலிருந்து கேட்ட சேஷாத்தம் பிள்ளையின் வீணைக் கச்சேரியும் அப்படியே. பேஹாக், பைரவி, சுத்த சாவேரி ராகங்கள் சரளமாய் இழைந்து வந்தன.

4ல ரேடியோவைத் திறந்ததுதான் சரி. திருச்சியிலிருந்து ஜும் என்று கந்தசாமிப் பிள்ளையின் நாதஸ்வர கானம் மங்களமாய்க் காதில் விழுந்தது. நாதஸ்வரக்காரர்களுக்கும் வாசஸ்பதி ராகத்துக்கும் அதிகப் பிடித்தம் போலும். அத்துடன் ஷண்முகப்ரியாவையும் ஜமாய்த்து விட்டார்.

அன்று இரவு, அதே நிலையத்தில் நடந்த மைலம் வஜ்ரவேலு முதலியாரின் கச்சேரி எதிர்பார்த்த அளவு இல்லை. கொஞ்சம் வேலைப்பாட்டுக்கு ஆரம்பித்தார். தொண்டை அடிக்கடி மக்கர் பண்ணிவிட்டது. கமலா மனோஹரி, ஆரபி இவைகளில் சிரமப்பட்டார். சங்கராபரணத்தில் சிறிது சரக்குக் காட்டினார்.

ரேடியோ ஊசியைச் சென்னைக்குத் திருப்பினேன். கிட்டப் போவதற்குள்ளேயே, கடுகு வெடிப்பது போல் பட பட வென்று சரமாரியான பிர்க்காப் பொழிவு காதில் விழுந்தது. அதில் கைதேர்ந்தவர் ரங்கராஜனின்றி வேறு யாராக இருக்க முடியும்? மோஹன ராக இறுதியில் 'ராம' என்பார்: அதில் ஒரு கூடை பிர்க்கா. 'லோகாபிராமா' என்பார்: அதில் ஒரு கூடை பிர்க்கா. பைரவி ராகத்திலோ ஒரு வண்டி. நிரவல், ஸ்வரம் எல்லாம் அப்படியே. இக்காலத்தில் உணவு ஆடை இவைகளுக்கெல்லாம் 'ரேஷன்' உண்டு. ஆனால் ரங்கராஜன் பிர்க்காவுக்கு மட்டும் 'ரேஷன்' கிடையாது!

கேட்டுப் பாருங்கள்!

செப்டம்பர் மீ 10ல திருச்சியில் திருப்பாம்புரம் சுவாமிநாதப் பிள்ளையின் புல்லாங்குழல். இப்போதெல்லாம் வானொலியில் கலந்து வரும் இடி முழக்கங்கள் இடங்கொடுத்தால் இன்பமாய்க் கேட்கலாம்.

11ல சென்னையில் "பாரதி கண்ட கண்ணன்" என்னும் நாடகம் நடத்துகிறார்கள். திருச்சியில் 8 மணிக்குச் சில பாரதியார் கீதங்கள் பாடுகிறார்கள்.

மன்னார்குடி சாம்பசிவன் அன்று சென்னை நிலையத்தில் சங்கீதம் பாடுகிறார்.

12ல சென்னையில் ஸ்ரீமதி [illegible] ராமகிருஷ்ணன் பாட்டு நடக்கிறது.

13ல திருச்சியில் திருப்பாம்புரம் சிவசுப்ரமணியப் பிள்ளை முத்துத் தாண்டவர் பாடல்களைப் பாடுகிறார்.

14ல திருச்சியில் ஒரு நல்ல கச்சேரி. ஸ்ரீ டி. எம். தியாகராஜன் பாடுகிறார்.

அவ்வளவு நல்ல பாட்டைச் சென்னையிலும் அஞ்சல் செய்வார்களோ என்று அஞ்சவேண்டாம்! அப்படியெல்லாம் செய்துவிட மாட்டார்கள்!

15ல திருச்சியில் குளிக்கரை பிச்சையப்பா பிள்ளை நாதஸ்வரமும், கே. ஏ. ராதாகிருஷ்ணப் பிள்ளை வாய்ப் பாட்டும் நடைபெறுகின்றன.

16ல சென்னையில் மைசூர் வெங்கடகிரியப்பாவின் கர்நாடக வீணைக் கச்சேரி. அன்று இளம்பாடகர் என். ராஜகோபாலன் பி. ஏ. மாலை 5-30க்கும் இரவு 10 மணிக்கும் வாய்ப் பாட்டுப் பாடுகிறார். வாய்ப்பான பாட்டாகவும் இருக்கும் என்று தெரிகிறது.

சந்திப்பு




1943-ம் வருஷம் மார்ச்சு மாதம் கடைசி வாரத்தில் சென்னை வந்திருந்த போது ராஜாஜியை அவருடைய வீட்டில் சந்தித்துப் பேசினர். அச்சமயம் 'டைரக்டர் டங்கன்' எடுத்த படங்களில் இதுவரை பிரசுரமாகாத சில படங்களை இங்கே காணலாம்.





பிலிப்ஸ் - ராஜாஜி





ஜனாதிபதி ரூஸ்வெல்ட்டுக்கு அவருடைய விசேஷ பிரதிநிதி வில்லியம் பிலிப்ஸ் சென்ற வருஷத்தில் எழுதிய கடிதம் இப்போது வெளியாகி அமெரிக்காவையும் இங்கிலாந்தையும் இந்தியாவையுங்கூட ஒரு கலக்குக் கலக்கிவிட்டிருக்கிறது. மேற்படி வில்லியம் பிலிப்ஸ் சென்ற



நிரத்துக்குக் குறிப்பிட்ட தேதியை நிர்ணயித்து விடவேண்டுமென்றும், அதற்கிடையில் தேசியத் தலைவர்கள் அடங்கிய அரசாங்கத்தை ஏற்படுத்த வேண்டுமென்றும், அப்போதுதான் ஜப்பானுடன் நடத்தும் யுத்தத்தில் இந்தியர்கள் முழு மனதுடன் ஈடுபடுவார்கள் என்றும், இது விஷயத்தில் தலையிட்டு பிரிட்டிஷாரை வற்புறுத்த அமெரிக்காவுக்குப் பாத்தியதை உண்டு என்றும் மிஸ்டர் பிலிப்ஸ் வற்புறுத்தியிருக்கிறார்.

உண்மையும், நியாயமும் பொருந்திய இந்த விஷயங்களை வைத்துக்கொண்டு அமெரிக்காவில் ஸெனட்டர் சாண்ட்லர் முதலிய சிலர் பெருங் கிளர்ச்சி செய்து வருகிறார்கள். சில அமெரிக்கப் பத்திரிகைகளும் இது விஷயத்தை அமர்க்களப்படுத்தி வருகின்றன.

மேற்படி பிலிப்ஸ் கடிதம் வெளியிடும், அது சம்பந்தமான கிளர்ச்சியும் இந்தியாவுக்கு அநுகூலமானவை என்பதில் ஐயமில்லை. இதெல்லாம் பிரிட்டிஷ் இராஜ தந்திரிகளுக்கு வேப்பங் காயை விடக் கசப்பாக இருப்பதிலும் ஆச்சரியம் கிடையாது.

ஆனால், இதனாலேயே இந்தியா சுதந்திரம் அடைந்துவிடப் போகிறது, நாம் கையைக் கட்டிக்கொண்டு சும்மா உட்கார்ந்திருக்கலாம் என்று எண்ணினோமானால் மறுபடியும் ஏமாந்து போகும்படிதான் நேரிடும்.

அமெரிக்க நண்பர்களுடைய கிளர்ச்சியும் உதவியும் மிகவும் உபயோகமானவைதான். ஆனால் அந்தத் துணை வலியை உபயோகப்படுத்திக் கொள்வது நமது சொந்த பலத்தைப் பொறுத்திருக்கிறது.

பிடிவாத பிரிட்டிஷாரிடமிருந்து நாம் சுதந்திரம் பெற வேண்டுமானால், அதற்கு நாம் உபயோகிக்கக்கூடிய நமது சொந்த பலம் ஒற்றுமை பலம் ஒன்றுதான்.

அந்த அடிப்படையான பலம் இருந்தால்தான், அமெரிக்கா முதலிய இடங்களிலிருந்து கிடைக்கும் துணை பலத்தை நாம் பயன்படுத்திக்கொள்ள முடியும்.

ஆகையினால்தான், இம்மாதம் 9௳ பம்பாயில் நடக்கும் காந்தி-ஜின்னா சந்திப்பு வெற்றியளிக்க வேண்டுமென்று பிரார்த்திக்கிறோம்.

அதனாலேயே, அந்தச் சந்திப்புக்கு இடையூறு செய்கிறவர்கள் எப்பேர்ப்பட்ட தேசத் துரோகமான காரியம் செய்கிறார்கள் என்பதை எண்ணிப் பெரிதும் வருந்துகிறோம்.

எனவே, இந்தியாவுக்குச் சிநேகிதர்கள் வேண்டுமானால், அமெரிக்காவிலேதான் நாம் பார்க்க வேண்டும். இன்றல்ல, நேற்றல்ல, சுவாமி விவேகானந்தரின் காலத்திலிருந்து அமெரிக்காவில் இந்தியாவின் உண்மையான நண்பர்கள் சிலர் இருந்து வந்திருக்கிறார்கள். இன்றைக்கும் இருந்து வருகிறார்கள்.

இரண்டு வருஷத்துக்கு முன்பு பிரசித்தி பெற்ற "லைப்" பத்திரிகையின் ஆசிரியர் இந்தியப் பிரச்னையைத் தடபுடலாய்க் கிளப்பி பிரிட்டிஷ் ராஜதந்திரிகளைக் கிடுகிடுக்கச் செய்து விட்டதை நேயர்கள் அறிவார்கள்.

அமெரிக்காவின் அபிப்பிராயத்துக்கு நல்ல செல்வாக்கும் சக்தியும் இருக்குமென்பதிலும் சந்தேகமில்லை. ஏனெனில், இந்த யுத்தத்தை இப்போது ஜயித்துக் கொண்டு வருகிறவர்கள் முக்கியமாக அமெரிக்கர்கள்தான்.

"அமெரிக்க சைன்யங்கள் பெல்ஜியத்தில் புகுந்து விட்டன," "அமெரிக்கப் படைகள் ஆண்ட்வர்ப்பைக் கைப்பற்றின," "அமெரிக்கர்கள் ஜெர்மனிக்குள் கால் வைத்து விட்டார்கள்" என்பது போன்ற செய்திகளையே பத்திரிகைகளில் படிக்கிறோம்.

இன்று ஜெர்மனியாரை ஜயிக்கும் அமெரிக்கர்தான் நாளைக்கு ஜப்பானையும் ஜயிக்கப் போகிறார்கள் என்பதில் சந்தேகமில்லை.

இவ்விதம் ஜயத்துக்குப் பெரிதும் காரண பூதர்களாயிருந்த அமெரிக்கர்களின் அபிப்பிராயத்தைச் சமாதான மகாநாட்டிலோ அதற்குப் பிறகோ பிரிட்டிஷார் சுலபமாக உதறித் தள்ளிவிட முடியாது.

எனவே, அமெரிக்காவில் இந்தியாவைப் பற்றிய சிநேகபாவம் எவ்வளவுக்கு வளர்கிறதோ, அவ்வளவுக்கு நமக்கு நன்மை. இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்துக்கும் பலம் என்பதில் சந்தேகமில்லை.

இதையெல்லாம் தீர்க்க திருஷ்டியுடன் முன் கூட்டியே உணர்ந்த தலைவர் ஒருவர் நமது தமிழ் நாட்டில் இருந்தார் என்பதை நினைக்க நமக்கு எவ்வளவோ பெருமையாயிருக்கிறது. காங்கிரஸ் தலைவர்கள் எல்லாம் சிறையில் அடைக்கப்பட்டுத் தேசத்தில் மகத்தான சோர்வு குடிகொண்டிருந்த காலத்தில் ராஜாஜி மட்டும் சும்மா இல்லை. அமெரிக்காவுக்கு இந்தியாவின் கட்சியை எடுத்துச் சொல்லும் காரியத்தில் தீவிரமாக ஈடுபட்டிருந்தார். அந்தக் காரியத்தை அவர் சென்னையிலிருந்தபடியே எவ்வளவு திறமையாகச் செய்தார் என்பதை, 1943 ஏப்ரல் 1உ வெளியான நமது "கல்கி" அட்டைப் படவிளக்கத்தில் நன்கு காணலாம். அதை அப்படியே இங்கு பிரசுரிக்கிறோம்:—

"'அமெரிக்காவில் இந்தியக் காங்கிரஸுக்கு ஒரு பிரசார ஸ்தாபனம் இருக்கிறது' என்று ஸர் ஜாப்ருல்லா கான் சொல்லுகிறார். இது உண்மையானால் அந்தப் பிரசார ஸ்தாபனத்தின் தலைமைக் காரியாலயம் தற்சமயம் தியாகராஜ நகர் பஸ்லுல்லா ரோட் 18-ம் நம்பர் வீட்டில்தான் இருக்க வேண்டும் என்று கருதுகிறோம்! இந்தக் காரியாலயத்தைத் தன்னந் தனியாக நடத்திக்கொண்டிருப்பவர் ராஜாஜிதான். அமெரிக்கப் பத்திரிகைப் பிரதிநிதிகள் சுமார் நூறு பேர் இன்று இந்தியாவில் இருக்கிறார்கள். இவர்களுக்கெல்லாம் இந்தியக் கோரிக்கையின் நியாயத்தைத் தெளிவாக விளங்கச் செய்பவை மேற்படி 18-ம் நம்பர் வீட்டிலிருந்து இடைவிடாமல் வெளியாகும் ராஜாஜியின் அறிக்கைகளாகும். அவர்களில் பலர் ராஜாஜியை நேரில் பார்த்தும் விஷயங்களைத் தெளிவாக்கிக் கொள்கிறார்கள். சென்ற வாரத்தில் ஒரு 18-ம் நம்பர் வீட்டுக்கு அமெரிக்கப் பிரஸிடெண்டின் பிரதிநிதி மிஸ்டர் வில்லியம் பிலிப்ஸ் விஜயம் செய்த போது எடுக்கப்பட்ட இன்னும் சில படங்களை உள்ளே காணலாம்."

மிஸ்டர் வில்லியம் பிலிப்ஸின் சகோதர தேசத்தவரான டைரக்டர் டங்கன் அப்போது எடுத்த படங்களில் வேறு சிலவற்றை இந்த இதழிலும் வெளியிட்டிருக்கிறோம்.

மிஸ்டர் வில்லியம் பிலிப்ஸ் ராஜாஜியை அவருடைய இல்லத்தில் சந்தித்துப் பேசிய பிறகுதான், இப்போது பத்திரிகைகளில் தடபுடல் படும் பிரசித்தி பெற்ற கடிதத்தை அமெரிக்க பிரஸிடெண்ட் ரூஸ்வெல்ட்டுக்கு எழுதினார் என்பதை நேயர்கள் கவனிக்க வேண்டும்.

பிரஸிடெண்ட் ரூஸ்வெல்ட்டின் சொந்தப் பிரதிநிதிக்கு ராஜாஜி ஒரு டம்ளர் இளநீர் கொடுத்துவிட்டு. அதே சமயத்தில் அவர் மனதில் இந்தியாவின் கட்சியையும் தெளிவாகப் பதியவைத்து விட்டார் என்பதில் சந்தேகமில்லை.

* * *

பிலிப்ஸ் கடிதத்தின் விவரத்தைத் தினசரிப் பத்திரிகைகளில் நேயர்கள் படித்திருப்பார்கள். இந்தியாவின் சுதந்

அமெரிக்காவையும் அமெரிக்கர்களையும் பற்றி நாம் ஏன் இவ்வளவு கவனம் செலுத்துகிறோமென்றால், அதன் காரணத்தையும் இரண்டாயிரம் வருஷத்துக்கு முன்பே திருவள்ளுவர் தமது குறளில் சொல்லி யிருக்கிறார். சென்ற இதழில் நாம் எடுத்துக் காட்டியிருந்த,

"வினைவலியும் தன்வலியும்
மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச்செயல்"

என்னும் குறளில், துணை வலியை எதுகையிலும் மோனையிலும் வைத்து முக்கியம் கொடுத்திருப்பதைக் கவனிக்கவும். சண்டையில் இறங்குகிறவர்கள் சிநேகிதர்களின் மூலம் நமக்குக் கிடைக்கக்கூடிய பலத்தையும் நன்கு ஆராய்ந்து தெரிந்து கொள்வது அவசியம் என்பது வள்ளுவர் வாக்கு.

பெரிய தேசங்களுக்குள் நடக்கும் யுத்தங்களுக்கு மேற்படி குறள் பொருந்துவது போலவே, இந்தியாவின் சுயராஜ்யப் போராட்டத்துக்கும் பொருத்தமா யிருக்கிறது.

பிரிட்டிஷ் இராஜ தந்திரிகளுடன் போராடி இந்தியா சுயராஜ்யம் பெற்றாக வேண்டும்.

பிரிட்டிஷாரின் பலம் எவ்வளவு, அவர்களுடைய பிடிவாதம் எவ்வளவு, அவர்களுடைய இராஜதந்திர சாமர்த்தியம் எவ்வளவு — என்பதையெல்லாம் நாம் நன்கறிந்திருக்கிறோம்.

பிரிட்டிஷார், முந்நூறு வருஷத்துக்கு மேலாக உலகமெல்லாம் பரவிய சாம்ராஜ்யத்தைக் கட்டி ஆண்டு அநுபவப்பட்டவர்கள். "பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தைக் கலைத்து விடும் உத்தேசம் எனக்குக் கிஞ்சித்தும் கிடையாது" என்று சர்ச்சிலும் பட்டவர்த்தனமாகச் சொல்லி யிருக்கிறார். பிரிட்டிஷாரின் பொது மனோபாவத்தைத்தான் அவர் வெளியிட்டிருக்கிறார்.

இப்படிப்பட்ட பிடிவாதமும் சாம்ராஜ்ய ஆசையும் இராஜ தந்திர சாமர்த்தியமும் உள்ளவர்களிடமிருந்து இந்தியர்களாகிய நாம் சுதந்திரம் பெற்றாக வேண்டும்.

அப்பேர்ப்பட்ட காரியத்துக்கு நம்மிடமுள்ள பலம் எவ்வளவு என்றும் நமக்குத் தெரியும். நூற்றைம்பது வருஷத்துக்கு மேலாக அன்னிய ஆட்சியின் கீழ் இருந்ததினால் நம்மில் பலருக்குச் சுதந்திர உணர்ச்சியே அற்றுப் போயிருக்கிறது. சுதந்திர உணர்ச்சி இருந்தாலும் அதற்காகப் போராடுவதற்கு வேண்டிய சக்தியும் நீடித்த மன உறுதியும் உள்ளவர்கள் வெகு சிலர் தான். இந்தச் சிலருடைய முயற்சிக்கும் இடையூறாகச் சமூக வேற்றுமைகளும் சாதி பேதங்களும் குறுக்கே நிற்கின்றன.

மூன்று வருஷத்துக்கு முன்பு யுத்த நிலைமையில் பெரும் நெருக்கடி ஏற்பட்டிருந்தபோது, மேற்படி இடையூறுகளை யெல்லாம் கடந்து இந்தியா சுதந்திரம் அடையும் சந்தர்ப்பம் ஒன்று ஏற்பட்டிருந்தது. அதை எப்படியோ நாம் கைநழுவ விட்டு விட்டோம்.

இப்போதோ, பிரிட்டிஷாரின் கட்சி மேலோங்கி ஜயத்துக்கு மேல் ஜயம் அடைந்து வருகிறார்கள்.

ஐரோப்பிய யுத்தம் வெகு சீக்கிரத்தில் முடிந்து விடும் போலிருக்கிறது.

இந்த நிலைமையில் பிரிட்டிஷாரிடம் போராடி இந்தியா சுதந்திரம் பெறுவதற்குத் துணை வலியைப் பற்றியும் நாம் சிந்திக்க வேண்டியது அத்தியாவசியமாகும்.

அப்படித் துணைவலி தேடும்போது எங்கே தேடலாம்?

ஜெர்மனியிலும் ஜப்பானிலும் தேடலாமென்று ஒரு காலத்தில் சிலர் நினைத்தார்கள். பாவம்! ஸுபாஷ் சந்திரபோஸ்கூட அந்த நோக்கத்துடன் இந்தியாவை விட்டு வெளியேறினார். அது எவ்வளவு பெரிய தவறு என்பது இப்போது வெட்ட வெளிச்சமாகி விட்டது.

பண்டித ஜவாஹர்லால்ஜீ முதலிய நமது காங்கிரஸ் தலைவர்கள் சிலர் சீன நாட்டில் சிநேகிதர்களைத் தேடினார்கள். இது நல்ல காரியந்தான். ஆனால், சீனாவே மற்ற தேசங்களின் உதவியை எதிர்பார்த்திருக்கும் நிலைமையில் அந்நாட்டினால் நமக்குப் பெரிய உதவி எதுவும் கிடைத்து விடாது.

அவ்விதமே ருஷியாவிலிருந்தும் நாம் உதவி எதிர்பார்க்க முடியாது. இந்தப் பயங்கரமான யுத்தத்திற்குப் பிறகு ருஷியர்கள், ஒரே சுடுகாடாய்ப் போன தங்கள் நாட்டைப் புனர் நிர்மாணம் செய்வதிலேயே பூரணமாய் ஈடுபட்டிருப்பார்கள். போதாததற்கு, போலந்துடனும் பால்கன் நாடுகளுடனும் அவர்கள் மல்லுக் கொடுத்துக் கொண்டிருக்க நேரும். இந்தியாவைப் பற்றிக் கவனம் செலுத்தவே அவர்களுக்கு நேரம் இராது.

யோக்கியர்களும் உளர்!

காலம் கலிகாலம்; நல்லவர்களுக்குப் பொல்லாத காலம்; அமெரிகளும், அநேகமாய் அயோக்கியர்களும் ஆதிக்கம் செலுத்தும் காலம்; சர்ச்சில்களும் சாம்ராஜ்ய வாதிகளும் கொம்மாளம் அடிக்கும் காலம்; சாஸ்திரிகளும் சவர்க்கார்களும் காந்தியைச் சபிக்கும் காலம்; — இப்பேர்ப்பட்ட காலத்திலும் ஏன் பொழுது விடிகிறது, ஏன் மழை பெய்கிறது, ஏன் பூமி விளைகிறது என்று கேட்டால், உலகத்தில் இந்தக் காலத்திலும் கூட யோக்கியர்கள் சிலர் உளர் போலும்! அவர்கள் உண்மையைச் சொல்வார்கள் போலும்! அந்த உண்மை தப்பித் தவறிச் சில சமயம் பத்திரிகைகளிலும் வந்து விடும் போலும்! தந்திக் கம்பிகளும், கம்பியில்லாத் தந்திகளும் சில சமயம் உண்மையைக்கூட ஏற்றுக்கொண்டு அனுப்பும் போலும்!

— இந்த மாதிரி உற்சாக மளிக்கும் எண்ணங்கள் நமக்கு உண்டாகி யிருப்பதற்குக் காரணம் என்ன வென்பதை நேயர்கள் அறிவார்கள். அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்ட்டின் சொந்தப் பிரதிநிதியாக இந்தியாவுக்கு வந்திருந்த பிலிப்ஸ் கடித மர்மம் வெளியானதும், அதனால் பிரிட்டிஷ் குட்டு உடைபட்டதும், அமெரிக்காவில் இவை யெல்லாம் பற்றி ஏக அமர்க்களமா யிருப்பதுந்தான்.

பிரான்ஸில் இறங்கிய அமெரிக்க சைன்யங்கள் படுவேகமாக முன்னேறி பெல்ஜியத்தை விடுதலை செய்து ஜெர்மனியின் எல்லைக்குள்ளேயே புகுந்திருக்கின்றன. தலை தெரியாத பெருமையையும் கால் தரியாத பூரிப்பையும் அளிக்கக்கூடிய மேற்படி வெற்றிச் செய்திகளுக் கிடையே, அமெரிக்கப் பத்திரிகைகளில் இந்தியப் பிரச்னையும் அடிபடுகிறது. அதைப் பற்றிக் காரசாரமான விவாதம் நடக்கிறது. அமெரிக்க செனட் சபையில் தீர்மானமும் வரப்போகிறது என்றால், உலகத்தில் யோக்கியர்கள் சிலரும் உளர் என்ற முடிவுக்கு நாம் வந்தே தீரவேண்டி யிருக்கிறது. சர்ச்சில்களும், அமெரிகளும் "உலகத்தில் யோக்கியர்கள் அநாவசியம்" என்று என்னதான் தீர்மானமான அபிப்பிராயம் கொண்டிருந்த போதிலும், அவர்கள் விருப்பத்தின்படி எல்லாக் காரியங்களுமே நடப்பதாயில்லை. "நாங்கள் இருக்கும் இடத்தில் யோக்கியர்கள் வேண்டாம்" என்று வேண்டுமானால் அவர்கள் சொல்லலாம்; "எங்களுடைய இங்கிலாந்தில் பிலிப்ஸ் போன்றவர்களுக்கு இடமில்லை" என்று அவர்கள் வற்புறுத்தலாம். ஆனால், உலகத்திலேயே யோக்கியர்கள் இருக்கக்கூடாது என்று அவர்கள் கண்டிப்புச் செய்யும் படியான காலம் நல்லவேளையாக இன்னும் ஏற்படவில்லை. அது வரையில் உலகத்துக்கு க்ஷேமந்தான்.

*

இந்தியா தேசம் இந்தியர்களுக்குச் சொந்தமானது.

இந்தியாவை இந்தியர்கள் ஆள வேண்டியது நியாயம்; இந்தியாவில் இந்தியர்கள் சுதந்திரமாய் வாழ வேண்டியது தர்மம்.

இந்தியா, பிரிட்டிஷாருடைய சொத்து அல்ல. இந்தியாவை பிரிட்டிஷார் ஆளுவதற்கு எந்தவித நியாயமும் இல்லை; அது தர்மமும் இல்லை.

இவை யெல்லாம் யாதொரு சந்தேகத்துக்கும் இடமில்லாத உண்மைகள்.

ஆனாலும், இந்த உலகத்தில் எப்போதும் உண்மை மேலோங்கி நிற்பதில்லை; நியாயமும் தர்மமும் தலைநிமிர்ந்து நிற்பதில்லை.

தர்ம நியாயப்படி உலகத்தில் எல்லாம் நடப்பதா யிருந்தால், இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியே ஏற்பட்டிராது.

உலகத்தில் உண்மையை நிலைநாட்டுவதற்குப் பாடாதபாடு பட வேண்டி யிருக்கிறது. நியாயத்தையும் தர்மத்தையும் ஸ்தாபிப்பதற்குப் பிரம்மப் பிரயத்தனம் செய்யவேண்டி யிருக்கிறது.


ஆகவே, உலகத்தில் யாராவது உண்மையைச் சொன்னார்கள், நியாயத்தையும் தர்மத்தையும் ஆதரித்துப் பேசினார்கள் என்று கேட்டால் நாம் சந்தோஷப்பட வேண்டியதுதான். அதிலும், பிரிட்டனுக்கு விரோதமான உண்மையைச் சொன்னார்கள், இந்தியா விஷயத்தில் தர்ம நியாயத்தைச் சொன்னார்கள் என்றால் இரட்டிப்புச் சந்தோஷப்பட வேண்டும்.


அப்படிப்பட்ட உண்மையும் தர்ம நியாயமும் அமெரிக்காவில் அமெரிக்கர்களால் எடுத்துச் சொல்லப்பட்டது என்றால், நாம் மூன்று மடங்கு சந்தோஷமடைய இடமிருக்கிறது.

-உம்மன்


பிரிட்டிஷ் பிரசாரத் திரை
இதோ பாருங்கள், இந்தத் திரைக்குள்ளே இருக்கும் இந்தியனை! இவன் அதிராஜ விசுவாசி; சண்டையில் மகா சூரன்! நம் கட்சியில் பூரணமாக இருக்கிறான்.
அமெரி
அமெரிக்க மாமா
ரொம்ப சரி; ஆனால் இவர் யார்?
உண்மை இந்தியன்
பிலிப்ஸ்
அமெரி
அமெரிக்க மாமா
சமீபத்தில் வெளியான பிலிப்ஸின் கடிதம் அமெரிக்காவில் பிரிட்டிஷ் பிரசாரத் திரையைக் கிழித்து இந்தியாவின் உண்மை நிலையை வெளிப்படுத்தியிருக்கிறது.

நிகழ்ச்சிச் சித்திரம்





கல்கி

மலர் 4 | தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 6

என்ன சேதி?

குப்பையில் போடு!


இங்கிலீஷ் பாஷையை — வெப்ஸ்டர் அகராதி உள்பட — குப்பையில் போட வேண்டியதுதான்! ஸர் ஆர். கே. ஷண்முகத்தின் லயோலா காலேஜ் பிரசங்கத்தைப் படித்த பிறகு நாம் வேறு எந்த முடிவுக்கும் வருவதற்கில்லை. ஆங்கில பாஷைக்கு உள்ள முக்கியத்தைப் பற்றி இத்தனை காலமும் நாமே ஒரு காரணத்தைக் கற்பித்துக் கொண்டிருந்தோம். ஆங்கில பாஷை அகில உலக பாஷை என்றும், சர்வ தேசிய விவகாரங்களில் இந்தியா சரி சமானமாக ஈடுபடுவதற்கு ஆங்கில பாஷை மிகவும் உபயோகமாயிருக்குமென்றும் எண்ணியிருந்தோம். ஆனால் உண்மை என்ன? அமெரிக்கா பிரிட்டன் வுட்ஸில் நடந்த நாணயச் செலாவணி மகாநாட்டுக்குப் பல தேசப் பிரதிநிதிகளும் வந்திருந்தார்கள். அவர்களில் ருஷியப் பிரதிநிதிகளும் இருந்தார்கள். இந்த ருஷியப் பிரதிநிதிகளுக்கு இங்கிலீஷ் பாஷையில் ஒரு வார்த்தைகூடத் தெரியாதாம். ஆனாலும் அவர்கள் கோரிய காரியங்களையெல்லாம் ஒன்று விடாமல் சாதித்துக் கொண்டார்களாம். ஸர் ஆர். கே. ஷண்முகம் உள்ளிட்ட இந்தியப் பிரதிநிதிகள் ஆங்கில பாஷையை அநாயாசமாய்க் கையாளக் கூடியவர்களாயிருந்தும் இவர்களுடைய கோரிக்கை ஒன்று கூட நிறைவேறவில்லையாம்! இதைப் பார்த்தபோது, ஸர் ஆர். கே. ஷண்முகத்துக்குப் பிரமாதமாகக் கோபம் வந்து "தமிழிலேயே பேசிவிடலாமா?" என்றுகூடத் தோன்றியதாம். ஆனால் அவ்வளவு நல்ல யோசனையைக் காரியத்தில் நிறைவேற்றும் துணிச்சல் துரதிர்ஷ்டவசமாக அவருக்கு உண்டாகவில்லை. அடுத்த க்ஷணமே ஆங்கில பாஷை மோகமானது அவருடைய நல்ல அறிவை வந்து மூடிக்கொண்டு விட்டது! இதையெல்லாம் லயோலா கலாசாலையில் அவர் எடுத்துச் சொல்லி வருத்தப் பட்டதுகூட ஆங்கில பாஷையிலேதான் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்! இந்தியாவிலிருந்து இங்கிலீஷ்காரர்களை விரட்டுவதற்கு முன்னால் இங்கிலீஷ் பாஷையையல்லவா விரட்டியாக வேண்டும் போலிருக்கிறது?

வாழ்க பாரதி!

தமிழுக்கும் தமிழகத்துக்கும் புத்துயிர் தந்த கவி சுப்பிரமணிய பாரதியாரின் ஞாபகத்தை வருஷம் 365 நாளும் தமிழர்கள் கொண்டாட வேண்டும் என்று நாம் கருதுகிறோம். ஏன் 365 நாள் என்று வரையறை செய்கிறோமென்றால், வருஷத்தில் அதற்கு மேல் அதிக நாட்கள் இல்லாமையினாலேதான்! 'இறைவனைப் பேசாத நாள் எல்லாம் பிறவா நாளே!' என்று அப்பர் ஸ்வாமிகள் அருளியதுபோல், தமிழராய்ப் பிறந்தவர்களுக்குப் பாரதியாரைப் பற்றிப் பேசாத நாள் எல்லாம் பிறவாத நாள் என்றே சொல்ல வேண்டும். அப்படி வருஷத்தில் 364 நாள் அநியாயமாய்ப் போய்விட்டாலும் ஒரு நாளாவது பிறந்த நாள் ஆகட்டும் என்று செப்டம்பர் 11உ தினத்தை பாரதியார் ஞாபக தினமாக ஏற்படுத்தியிருக்கிறார்கள். அந்த ஒரு தினத்திலாவது தமிழ் நாடெங்கும் "வாழ்க பாரதி!" என்ற முழக்கம் ஓங்கி எழுவதாக!



ஐந்து ரூபாய் பரிசு: சென்ற இதழில் வெளியான "இவ்வளவுதானே!" என்னும் துணுக்குக்குப் பரிசு பெற்றவர்: ரா. சாம்பமூர்த்தி, இந்திய மருத்துவப் பாடசாலை, சென்னை.



கல்கி
பொருளடக்கம்

மலர் 4 }
இதழ் 6 }

1944 செப்டம்பர் 10


{ தாரண
{ ஆவணி 26

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்களும், சம்பவங்களும் கற்பனையே.

பரம்பரை பரம்பரையாக வந்த தஞ்சாவூர் சங்கீதக் கூட்டத்தில் கும்பகோணம் ஸ்ரீ ராஜமாணிக்கம் பிள்ளை உன்னத ஸ்தானம் பெற்றவர். திருக்கோடிகாவல் கிருஷ்ணையரும் மலைக்கோட்டை கோவிந்தசாமிப் பிள்ளையும் அழியாத பெருமையை அடைந்த வயலின் வாத்தியத்தை இன்று அருமையாகக் கையாண்டு வருகிறவர். ஸ்ரீ ராஜமாணிக்கம் பிள்ளை பிடில் தந்தியில் வில்லைப் போட்டு இழுக்கும்போது, அவர் வாத்தியந்தான் வாசிக்கிறாரா, அல்லது இன்னிசையுடன் இனிய தேனைக் கலந்து பொழிகிறாரா என்று தோன்றும். அவ்வளவு மாதுரியமும் விறுவிறுப்பும் உள்ள வாசிப்பு. நமது பிரபல வாய்ப்பாட்டு வித்வான்களிலே, பக்க வாத்தியத்துக்கு ஸ்ரீ ராஜமாணிக்கம் பிள்ளையை விரும்பாதவர் இல்லை. இளம் பாடகர்களிலே, அவருடைய பக்க வாத்தியத்துக்கு ஆசைப் படாதவர் இல்லை. பாடகர்களுக்கு ஒத்தாசையாகப் பக்க வாத்தியம் வாசிப்பதில் இராஜமாணிக்கம் பிள்ளைக்கு இணை இராஜமாணிக்கம் பிள்ளைதான். அவருடைய ஒத்தாசையான பக்க வாத்திய வாசிப்பினாலேயே பிரபலமடைந்த பாடகர்களும் உண்டு.



சங்கீத வித்வான்களுக்குள்ளே இங்கித மறிந்தவர் இராஜமாணிக்கம் பிள்ளை; எல்லாருக்கும் நல்லவராய்ப் பழகுகிறவர். காந்தி பக்தர்; கதர் அபிமானி; பரிமள சந்தனப் பிரியர்; தியாகப் பிரம்மத்திடம் அபார பக்தி; தமிழிசையிலும் ஆர்வம் உண்டு. — ஒருவருடைய வாழ்க்கை சந்தோஷமயமாயிருப்பதற்கு இன்னும் என்ன வேண்டும்?


சினிமா நட்சத்திரங்களைப் போல, நீங்களும்
உங்கள் சருமத்தைக் காப்பாற்றுங்கள்!
மனோரமா
என்னுடைய சருமம் எப்பொழுதும் இளமையாகவும், ஆரோக்யமாகவும் இருக்கிறதற்கு பொருப்பான லக்ஸ் டாய்லெட் சோப்பிற்கு நான் நன்றி செலுத்துகிறேன் என்று மனோரமா கூறுகிறார். எல்லா இந்திய சினிமா நட்சத்திரங்களைப் போல இவர் இந்த உயர்ந்த சோப்பைத் தவறாமல் உபயோகிக்கிறார். மேலும் அவர் சொல்லுகிறார் ''லக்ஸ் டாய்லெட் சோப் நன் நுரையினால் சருமத்தை மாசில்லாமல் வைத்துக் கொள்வது அதிசயமாயிருக்கிறது''
LUX
TOILET SOAP
லக்ஸ் டாய்லட் ஸோப்
LEVER BROTHERS (INDIA) LIMITED

புதிய கொலம்பியா ரிகார்டு



★

மைசூர்
T. செளடையா
பிடில்

பாலக்காடு மணி
மிருதங்கம்

★

GE. 6148 { நிதிஸால, பாகம் 1 & 2
ராகம் — கல்யாணி

மைசூர் T. செளடையாவின்
முன் வெளியிடப்பட்ட சில முக்கிய ரிகார்டுகள்

G. E. 167 { இனமணிவம்ச
பாகம் 1 & 2

G. E. 187 { சங்கராபரணம்
தானம் (ஆலாபனை)

G. E. 548 { முக்கமோரா
நாதர்முடி

G. E. 703 { கலினருல
பாகம் 1 & 2

G. E. 908 { ஸ்ரீ சுப்ரமண்யாய
பாகம் 1 & 2

G. E. 921 { இந்த ஸவுக்யமு
பாகம் 1 & 2

ஸரஸ்வதி ஸ்டோர்ஸ் - மதராஸ்

மேற்கண்ட ரிகார்டுகள் எங்களிடம் கிடைக்கும்:

முகமது இப்ராஹிம் & கம்பெனி, சென்னை. S. கண்ணன் & கம்பெனி, திருச்சிறாப் பள்ளி. V. S. ராஜகோபாலன் கம்பெனி. சென்னை, பங்களூர், சேலம், கோய முத்தூர். M. A. இருதயசாமி & கம்பெனி, உதகமண்டலம்.